மலர் : 54

# சத்தியத்தின் குரல்

# THE VOICE OF TRUTH

INTERNATIONAL

TAMIL EDITION

Volume - 54

# ✯ சத்தியத்தின் குரல் ✯

## Editorial Team


Founding Editor
**J.C.Choate**

Managing Editor
**S.Rajanayagam**

**Guest Editors**

Byron Nichols
Jerry Bates
Louis Rushmore
P.R. Swamy
P.C. Philemon rajah
B. Arjunan

**Staff Writers**

Wayne Barrier
Paula Bates
Shane Fisher
Emily Fisher
Abel R. Nayagam
Kingsly rajah

Translation : **B. Benny Martin**

Publishing Consultant

**Betty Choate**



தேவையான பிரதிகளுக்கு...

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**

86-A, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638701.
தமிழ்நாடு, இந்தியா.
**Cell : 98427 30382, 99655 30385**

Copies can be had from

**Tamil World Soul Winning Campaign**
**86-A, Dharapuram Road,**
**Kangayam - 638701. TN. India.**
**Cell : 98427 30382, 99655 30385**

**Gracious Word**
Post Box 15, Arasaradi,
Madurai - 625 016.
**Cell : 92 4421 4421, 92 4420 4420**

**The Word Of Christ**
Post Box 5,
Batlagundu, - 624 206
**Cell : 94435 58041**



# சகோதர சிநேகம்

**Brotherly love**

*Louis Rushmore*

1 கொரிந்தியர் நிருபம் கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கு எழுதப்பட்டது(1 கொரிந்தியர் 1:2). முதல் நூற்றாண்டு கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்கள் தேவனுடைய சபையாக இருந்தார்கள். ஏனென்றால், சுவிசேஷ அழைப்புக்கு அவர்கள் கீழ்ப்படிந்து தேவ பக்தி அற்ற உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு பரிசுத்தவான்களாக இருக்கும்படி தங்களை ஒப்புக்கொடுத்தபடியால் இயேசு கிறிஸ்துவினாலே அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டார்கள். ஆனாலும், கொரிந்து பட்டணத்து சபை பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் பெற்றிருக்க வேண்டிய முக்கியமான பண்புகளை மறந்துவிட்டது போல தான் தோன்றுகிறது.

1 கொரிந்தியர் நிருபம் இந்த புதிய ஏற்பாட்டில் இருப்பதற்கான காரணமே அங்கே கூடி வந்த சபையானது சுவிசேஷ போதனைக்கு எதிராக பல காரியங்களைச் செய்ததினால்தான். அந்த கொரிந்து பட்டணத்து சபையிலே ஒவ்வொரு அதிகாரத்திலும் குறைந்தது ஒரு உபதேசப் பிழை இருப்பதை நம்மால் காண முடியும், அவைகளை அப்போஸ்தலனாகிய பவுல் கடிந்து கொள்வதையும் நாம் காண முடியும். அந்த கொரிந்து பட்டணத்துச் சபையார் ஒரு சரியான கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்ந்திருந்தால் இப்படி ஒருநிருபம் எழுதப்பட வேண்டிய அவசியமே இருந்திருக்காது. அவர்கள் சரியான கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்ந்திருந்தால் இந்த நிருபத்தின் தன்மையும் உள்ளடக்கமும் முற்றிலும் வேறு மாதிரியாகத்தான் இருந்திருக்கும்.

முதலாம் அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து பட்டணத்துச் சபை அங்கத்தினர்களிடையே காணப்பட்ட பிரிவினையை எதிர்த்து அவர்களைக் கடிந்து கொள்கிறார்.

வசனம் 10ல் சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று நம்முடைய

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். [1 கொரிந்தியர் 1:10].

11 ஏனெனில், என் சகோதரரே, உங்களுக்குள்ளே வாக்குவாதங்கள் உண்டென்று குலோவேயாளின் வீட்டாரால் உங்களைக்குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது. [1 கொரிந்தியர் 1:11].

12 உங்களில் சிலர்: நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும், நான் கேபாவைச் சேர்ந்தவனென்றும், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால், நான் இப்படிச் சொல்லுகிறேன். [1 கொரி1:12]

13 கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையிலறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? 1 கொரிந்தியர் 1:13

கொரிந்து சபையில் பல பிரச்சனைகள் அல்லது தவறுகள் இருந்திருந்தாலும் கூட, பரிசுத்த ஆவியானவர் பிரதானமாக பவுல் மூலமாக சரிசெய்ய நினைத்தது பிரிவினை என்னும் பிரச்சனையைத் தான். கொரிந்து சபையில் பிரிவினை வாதம் தலைவிரித்தாடிய காரணத்தினால் தான் பவுல்மூன்றாம் அதிகாரத்திலும் அதற்காக அவர்களை கடுமையாகச் சாடுகிறார். மேலும், சகோதரரே, நான்உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல், மாம்சத்துக்குரியவர்களென்றும்,கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேசவேண்டியதாயிற்று நீங்கள் பெலனில்லாதவர்களானதால், உங்களுக்குப் போஜனங்கொடாமல், பாலைக் குடிக்கக் கொடுத்தேன். இன்னமும் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருக்கிறபடியால், இப்பொழுதும் உங்களுக்குப் பெலனில்லை.

பொறாமையும் வாக்குவாதமும் பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா? [1 கொரிந்தியர் 3:1 – 3]

கிறிஸ்தவர்களாக நாம் வெறுமனே ஆண்களும் பெண்களும் அல்ல. அதற்கும் மேலானவர்கள் மற்ற ஜனங்களை காட்டிலும் சகோதரர்களாகிய நாம் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து ஒத்துப்போய் வாழவேண்டும். கீழ்காணும் மாதிரிகளை ஜாக்கிரதையாக கவனியுங்கள்.

1. நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்' [யோவான் 13:34]

2 நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்றே இவைகளை உங்களுக்குக் கற்பிக்கிறேன் [யோவான் 15:17]

3. சகோதரசிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள். கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்' (ரோமர் 12:10).

4. கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்' (எபேசியர் 5:2).

5. சகோதர சிநேகத்தைக்குறித்து நான் உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை. நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்படிக்குத் தேவனாலே போதிக்கப்பட்டவர்களாயிருக்கிறீர்களே அந்தப்படி நீங்கள் மக்கெதோனியா நாடெங்முகுள்ள சகோதரரெல்லாருக்கும் செய்துவருகிறீர்கள். சகோதரரே அன்பிலே நீங்கள் இன்னும் அதிகமாய்ப் பெருகவும் புறம்பேயிருக்கிறவர்களைப் பற்றி யோக்கியமாய் நடந்து ஒன்றிலும் உங்களுக்குக் குறைவில்லாதிருக்கும்படிக்கு (1தெசலோனிக்கேயர் 4:9–11).

6. சகோதரரே. நாங்கள் எப்பொழுதும் உங்களுக்காகத் தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். உங்கள் விசுவாசம் மிகவும் பெருகுகிறபடியினாலும் நீங்களெல்லாரும் ஒருவரிலொருவர் வைத்திருக்கிற அன்பு அதிகரிக்கிறபடியினாலும் அப்படிச் செய்கிறது தகுதியாயிருக்கிறது (2 தெசலோனிக்கேயர் 1:3).

7. ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக்கொண்டவர்களாயிருக்கிறபடியால் சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூருங்கள் (1 பேதுரு 1:22).

8. சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது (எபிரேயர் 13:1).

9. மேலும் நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும் இரக்கமுள்ளவர்களும் சகோதரசிநேகமுள்ளவர்களும் மன உருக்கமுள்ளவர்களும் இணக்கமுள்ளவர்களுமாயிருந்து. தீமைக்குத் தீமையையும் உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல் அதற்குப் பதிலாக நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டவர்களென்று அறிந்து ஆசீர்வதியுங்கள். (1 பேதுரு 3:8.9).

10. எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள். அன்பு திரளான பாவங்களை மூடும். முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள். (1பேதுரு 3:8,9)

11. தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள் (2 பேதுரு 1:7)

12. இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும் பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும் நீதியைச் செய்யாமலும் தன்

சகோதரனில் அன்புகூராமலும் இருக்கிற எவனும் தேவனால் உண்டானவனல்ல. நாம் ஒருவரிலொருவர் அன்புகூர வேண்டுமென்பதே நீங்கள் ஆதிமுதல் கேள்விப்பட்ட விசேஷமாயிருக்கிறது. [1யோவான் 3:23].



13. நாம் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமாயிருந்து அவர் நமக்குக் கட்டளையிட்டபடி ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே அவருடைய கற்பனையாயிருக்கிறது [1யோவான் 2:237].

14. பிரியமானவர்களே ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம். ஏனெனில், அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து அவரை அறிந்திருக்கிறான். அன்பில்லாதவன் தேவனை அறியான். தேவன் அன்பாகவே இருக்கிறார் [I யோவான் 4:7, 8].

15. தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால் அவன் பொய்யன். தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன் தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்? தேவனிடத்தில் அன்பு கூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூரவேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம் [யோவான் 4:20,21].

16 இப்பொழுதும் அம்மாளே நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டுமென்று உமக்குப் புதிய கற்பனையாக எழுதாமல் ஆதிமுதல் நமக்கு உண்டாயிருக்கிற கற்பனையாக எழுதி, உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் [2 யோவான் 1:5].

பரிசுத்த ஆவியானவர் பல்வேறுபட்ட எழுத்தாளர்களைக் கொண்டு மத்திய தரைக் கடல் பகுதியில் சிதறிப்போன கிறிஸ்தவர்களுக்கு சகோதர சிநேகத்தில் நிலைத்திருக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் ஒத்துழைக்க வேண்டும் என்று அநேக முறை சொல்வதன் மூலமாக அங்கே சகோதர சிநேகத்தில் ஒரு குறைச்சல் இருந்ததை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. இன்றைய நாட்களிலும் கூட கிறிஸ்தவர்கள் சகோதர சிநேகத்திலே விருத்தியடைய தடுமாறுவதை நம்மால் காண முடிகிறது. சகோதர சகோதரிகள் ஒருவருக்கொருவர் எந்த அளவு அன்பு கூர வேண்டுமோ அந்த அளவுக்கு அன்பு கூராத எந்த சபையும் வளர்ச்சி குன்றி சர்வ வல்லவருடைய வெறுப்புக்கு ஆளாகிறது. அன்பு குறைச்சலின் காரணமாக முதல்

நூற்றாண்டில் சகோதர சகோதரிகளிடையே காணப்பட்ட வாக்குவாதங்களும் பிரிவினைகளும் எப்படி தேவனால் ஏற்றுக்கொள்ளப் படவில்லையோ அதேபோல் இந்த 21 ஆம் நூற்றாண்டிலும் அவைகள் தேவனால் ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை.

எந்த ஒரு காரியத்தின் வெற்றிக்கும் தோல்விக்கும் யாரோ ஒருவர் பொறுப்பேற்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது ஒரு குடும்பத்தின் வெற்றிக்கும் தோல்விக்கும் அக்குடும்பத்தின் தலைவர் தான் அவருக்கு கணக்கு கொடுக்க வேண்டும் என்று தேவன் தீர்மானித்து விட்டார் (எபேசியர் 5:22-25, 6:1). அதைப்போல் ஒரு பிராந்திய சபையின் ஆவிக்குரிய நலனுக்கு மூப்பர்கள்தான் பொறுப்பேற்க வேண்டும் என்று தேவன் தீர்மானித்திருக்கிறார் (எபிரேயர் 13:17). தேவனால் நியமிக்கப்பட்ட தலைமைத்துவம் இல்லையென்றால் வீட்டிலும் சரி, சபையிலும் சரி குழப்பங்களும் பிரிவினைகளும் தான் மிஞ்சும்.

ஒருவர் மூப்பராவதற்கான வேதாகம தகுதியம்சங்களில் ஒன்று அந்த நபர் சுய இஷ்டப்படிசெய்யாதவராய் இருக்க வேண்டும் (தீத்து 1:7) கிறிஸ்தவர்கள் எந்த விதத்திலும் ஆரோக்கியமான உபதேசத்தோடு சமரசம் செய்யாமல் தங்களுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக தைரியமாய்ப்போராட வேண்டும்; தீத்து 21). சபையில் எல்லா காரியங்களும் தன் இஷ்டப்படி தான் நடக்க வேண்டும் என்று நினைக்கிறவர்கள் பற்றி 3 யோவான் ல் நாம் வாசிக்கிறோம் தியோத்திரேப்பு) அப்போஸ்தலனாகிய யோவான் அந்த நபருடைய செயலை தீமை என்று அழைக்கிறார் (3 யோவான் 11).

சகோதரர்களே, சபை யாருடையது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். சபை எந்த மனிதனுடையதும் அல்ல, அது அதற்காக தம்முடைய ரத்தத்தை சிந்தி வாங்கிய இயேசு கிறிஸ்துவினுடையதாகும் (அப்போஸ்தலர் 20:28). அந்த சபைக்கு அவரே தலையாயிருக்கிறார் (கொலோசெயர் 1:18). நாம் தேவனுடையவைகளுக்கு வெறுமனே உக்கிராணக்காரர்களாக மாத்திரமே இருக்கிறோம் எனவே, நம்முடைய வைகள் அல்லாதவைகளுக்காக நாம் எவ்வித வாக்குவாதங்களிலும் ஈடுபடவே கூடாது.

நாம் சகோதர சிநேகத்தின் மீது கவனம் வைத்து, சபை யாருடையது என்பதை நினைவில் வைத்தால் தான் வாக்குவாதங்களும் பிரிவினைகளும் சபையை விட்டு நீங்கிப்போகும். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் ‘மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்ய வேண்டும் (எபேசியர் 6:6).

**நிர்வாக ஆசிரியர் உரை**



## என்ன செய்வதென்று தெரியாதபோது...

## When we do not know what to do...

*E.Z.S. Rajanayagam*

இத்தலைப்பு ஏதுவாக ஒரு பழைய ஏற்பாட்டுச் சம்பவத்தை இம்மாதத்திற்காகத் தெரிந்திருக்கிறேன் II ராஜா 4:1-7 வசனப்பகுதியில் இதுபற்றிய விபரங்கள் நமக்கு ஆவியானவரால் அருளப்பட்டிருக்கிறது. அதற்குள்ளாகச் செல்லுவதற்கு முன், நமது ஆசானின் ஆச்சாரப்படி இதன் பின்னணிக் காரியங்களை நாம் கவனித்து விடுவோம்.

அந்நாட்கள் தேவ ஜனங்களாகிய இஸ்ரவேலை ராஜாக்கள் ஆண்டகாலம். வடக்கு ராஜ்ஜியத்தில் தீர்க்கதரிசன ஊழியம் செய்தவர்களில் எலியாவும், எலிசாவும் பிரபலமானவர்கள் . எலியா மாபெரும் தீர்க்கத் தரிசியாக ஒட்டுமொத்தத் தீர்க்கதரிசிகளின் பிரதிநிதியாக வேதாகமத்தால் அங்கீகரிக்கப்பட்டவன். ஆம், மறுரூபமலையில் இயேசு ஆண்டவரோடு காட்சி தந்த இருவரில் இவன் ஒருவன். மற்றவன் பிரமாணங்களின் தந்தை மோசே (மத். 17 - ம் அதி ). இந்த எலியா ஒரு கட்டத்தில் சுழல் காற்றினால் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, அக்கண்கொள்ளாக் காட்சியை நேரில் கண்டு, அதன் மூலம் இரட்டிப்பான ஆவியின் வரத்தைப் பெற்று ( II ராஜா. 2 ) தன் தீர்க்கதரிசன ஊழியத்தைப் பெலத்தோடே ஆரம்பித்தவன் தான் இந்த தீர்க்கன் எலிசா.

எப்படி மோசே தாசனின் தலைமைப் பண்பைக் காட்டிலும் யோசுவாவின் வழிநடத்துதல் நன்றாக இருந்தது என்று சொல்ல முடியுமோ அதுபோல, எலியாவின் தீர்க்கதரிசன ஊழியத்தைக் காட்டிலும் எலிசாவின் செயல்பாடு சிறப்பாக இருந்தது என்று கூறமுடியும். இங்கே மோசே, எலியா போன்றவர்களைக் காட்டிலும் யோசுவாவும், எலிசாவும் மேலானவர்கள் என்று நான் கூறவில்லை. மாறாக, அம்மாபெரும் மனிதர்களுக்குப் பிறகு நடந்த காரியங்களை ஒருவகையில் ஒப்பீடு செய்கிறேன், அவ்வளவே! இவ்வகையில் எலியாவைக் காட்டிலும் அதிகமான அற்புதங்களை நடப்பிக்கும்படி பரலோகத்தின் தேவன் எலிசாவைப் பயன்படுத்தியிருக்கிறார்.

ஆம், தீர்க்கதரிசிகளுடைய புத்திரரில் ஒருவனுக்கு மனைவியாயிருந்த ஒரு ஸ்திரீ எலிசாவைப் பார்த்து உமது அடியாளாகிய என் புருஷன் இறந்து போனான்; உமது அடியான் கர்த்தருக்குப் பயந்து நடந்தான் என்பதை அறிவீர்;

கடன் கொடுத்தவன் இப்போது என் இரண்டு குமாரரையும் தனக்கு அடிமைகளாக்கிக் கொள்ள வந்தான் என்றாள் ( II ராஜா 4:1 ). இப்படி அந்தக் கைம்பெண் தன் பிரச்சினையைத் தேவமனிதனிடத்தில் கொண்டு வந்தாள். எலிசா அவளை நோக்கி: நான் உனக்கு என்ன செய்யவேண்டும்? வீட்டில் உன்னிடத்தில் என்ன இருக்கிறது சொல் என்றான். அதற்கு அவள் ஒரு குடம் எண்ணெய் அல்லாமல் உமது அடியாளுடைய வீட்டில் வேறொன்றும் இல்லை (4:2) என்று கூறி, தன்னிடத்தில் இருப்பதைத் தெரிவித்தாள்.

அப்பொழுது அவன் : நீ போய் உன்னுடைய அயல் வீட்டுக்காரர் எல்லாரிடத்திலும் அநேகம் வெறும் பாத்திரங்களைக் கேட்டு வாங்கி உள்ளே போய் உன் பிள்ளைகளுடன் உள்ளே நின்று கதவைப் பூட்டி அந்தப் பாத்திரங்கள் எல்லாவற்றிலும் வார்த்து நிறைந்ததை ஒரு பக்கத்தில் வை என்றான் ( 4:3,4 ). இப்படி அவளுடைய பிரச்சினை நீங்கும்படி செய்ய வேண்டியது இன்னதென்று சொல்லியனுப்பினான்.

இதைக் கேட்டுக் கொண்ட அவள், பதில் எதுவும் பேசாமல் ...அவனிடத்திலிருந்து போய்,தன் பிள்ளைகளுடன் கதவைப் பூட்டிக் கொண்டு, இவர்கள் பாத்திரங்களை அவளிடத்தில் கொடுக்க அவள் அவைகளில் வார்த்தாள். அந்தப் பாத்திரங்கள் நிறைந்த பின், அவள் தன் மகன் ஒருவனை நோக்கி இன்னும் ஒரு பாத்திரம் கொண்டு வா என்றாள். அதற்கு அவன்: வேறே பாத்திரம் இல்லை என்றான்; அப்பொழுது எண்ணெய் நின்று போயிற்று ( II ராஜா. 4:5,6).

இப்படிச் சொன்னபடி செய்துவிட்டு, அவள் போய் தேவனுடைய மனிதனுக்கு அதை அறிவித்தாள். அப்பொழுது அவன் நீ போய் அந்த எண்ணெயை விற்று உன் கடனைத் தீர்த்து மீந்ததைக் கொண்டு நீயும் உன் பிள்ளைகளும் ஜீவனம் பண்ணுங்கள் என்றான் (4:7).

**I எச்சூழலிலும் தேவக்காரியத்தில் முறுமுறுப்பு கூடாது**

தீர்க்கதரிசிகளுடைய புத்திரரில் ஒருவனுக்கு மனைவியாயிருந்த அந்தக் கைம்பெண் சம்பந்தப்பட்ட சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், எந்தச் சூழலிலும் முறுமுறுப்பு கூடாது என்பது.

முறுமுறுப்பு என்பது ஒரு காரியத்தில் அல்லது சூழ்நிலையில் கோபத்துடன் கூடிய அதிருப்தியை வெளிப்படுத்துவது. பொதுவாகவே இது ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல. அதுவும் தேவனுக்கடுத்த வாழ்வில் முறுமுறுப்பை தேவன் சுத்தமாக அனுமதிப்பதில்லை. ஆனால், பழைய ஏற்பாட்டு இஸ்ரவேல் ஜனங்கள் முறுமுறுப்பின் மொத்த உருவமாகவே அநேக கட்டங்களில் காட்சி தந்தார்கள். தேவன் அவர்களை வனாந்திரத்தில் அற்புதமாக வழிநடத்திக்கொண்டு வருகையில் தண்ணீரினிமித்தம் முறுமுறுத்தார்கள் (யாத்.16 :2,3). அப்புறம், கானானை வேவுபார்க்கச் சென்று வந்த பத்துப்பேர் கானானைக் குறித்து துர்ச்செய்தி பரப்பினபோது பயந்து முறுமுறுத்தார்கள் (எண்.14:1-4). இப்படிப்பட்ட முறுமுறுப்புகளைத் தேவன் ஒருபோதும்

சகிப்பதில்லை. இந்த முறுமுறுப்பின் விலை பயங்கரம் என்பதை ஆவியானவர் பவுலடியாரைக் கொண்டு கொரிந்தியருக்கு இப்படியாக நினைவுபடுத்தினார். அவர்களில் சிலர் முறுமுறுத்து சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள். அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள் என்று (1 : கொரி. 10:10).

ஆனால், பாருங்கள் இக்கைம்பெண் எவ்வித முறுமுறுப்பும் இல்லாமல் மிஞ்சின பக்திப் பக்குவத்தோடு தன் பிரச்சினையை தேவமனிதனாகிய எலிசாவினிடத்தில் கொண்டு வந்தாள். பக்திமிகுந்த கணவனைப் பாதியிலேயே பறிகொடுத்துவிட்டேனே என்ற புலம்பல் இல்லை. இப்படிக் கடன்காரியாகிக் காட்சிப்பொருளாகி நிற்கிறேனே என்ற புலம்பல் இல்லை. தன் பிள்ளைகள் அடிமைகளாகக் கொண்டு செல்லப்படும் சூழ்நிலையிலும் அடாத சிந்தை எதுவுமில்லாமல் கர்த்தர்மீதும் அவருடைய வழி நடத்துதல் மீதும் அபார நம்பிக்கை. எவ்வித முறுமுறுப்பும் கிஞ்சித்தும் காணப்படவில்லை. பழம்பெரும் பக்தன் யோபுவுக்கிருந்த தேர்ந்த பக்தி இவளிடம் தென்படுகிறது.

இவ்வுண்மையை நாம் உண்மையாகவே உணர்ந்து கொண்டால், எந்தச் சூழ்நிலை குறித்தும் நாம் முறுமுறுக்கக் கூடாது. மாறாக, எச்சூழலுக்கும் ஏற்ற தீர்வு அவரிடத்தில் உண்டு என்பதை மனதார ஏற்று, அவருடைய சமூகத்தில் அடைக்கலம் தேடி அவருடைய வழிநடத்துதலுக்குக் காத்திருந்து வாழ வேண்டும். செய்வோமா?

**II. தேவன் செயல்பட நம்மிடத்திலிருப்பது போதும்**

அந்தக் கைம்பெண் சம்பந்தப்பட்ட சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் அடுத்தபாடம், நம்மிடத்திலிருப்பதைக் கொண்டு தேவன் நம்மை ஆசீர்வதித்து வழிநடத்த முடியும் என்பது.

துக்கம் தொண்டையை அடைக்கும்படியான வேளையில் எவ்வித முறுமுறுப்புமில்லாமல் மிகுந்த நம்பிக்கையோடும், எதிர்பார்ப்போடும் தேவமனிதனிடத்தில் வந்த இப்பெண்ணிடம் கேட்கப்பட்ட கேள்வி நான் உனக்கு என்ன செய்யவேண்டும்? என்பது ( II ராஜா. 4:2). இக்கேள்வி, அவளுடைய தேவை என்ன என்று தெரியாமல் கேட்கப்பட்ட ஒரு கேள்வி அல்ல. இதேவிதமான கேள்வியை இரட்சகர் இயேசு பிறவிக் குருடனாகிய பர்திமேயுவிடம் கேட்டுள்ளார். நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்? (மாற்கு 10:51 ) இப்படிப்பட்ட கேள்விகள் சம்பந்தப்பட்டவர்களின் தேவை என்ன என்று தெரியாமல் கேட்கப்படும் கேள்வி அல்ல. மாறாக, அவர்களின் மனநிலையை அறிந்து கொள்ளும்படியாகக் கேட்கப்படுபவைகள்.

சரி, எலிசாவின் இரண்டாவது கேள்விக்கான அப்பெண்ணின் பதில், ஒரு குடம் எண்ணெய் அல்லாமல் உமது அடியாளுடைய வீட்டில் வேறொன்னும் இல்லை என்பது ( 4:2 ). இவள் பதிலில் அடங்கியுள்ள செய்தி உங்களுக்குப் புரிகிறதா? எனக்கிருக்கும் கடனுக்கு இந்த ஒருகுடம் எண்ணெய் எந்தக் கோட்டுக்கு ஆகும்? என்பதே. இதேவிதமான தொனியில் தான் ஐந்து அப்பங்கள் இரண்டு மீன்கள் அற்புத சம்பவத்தில் சீடன் அந்திரேயாவின் பேச்சு இருந்தது. இங்கே ஒரு பையன் இருக்கிறான் அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு. ஆனாலும், அவைகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம் என்று

ஆயினும், கர்த்தர் அங்கே செயல்படத் தீர்மானித்தபடியால் காரியங்கள் சம்பந்தப்பட்டவர்களின் எண்ண ஓட்டத்திற்கு எட்டாத அளவில் நடந்தேறியது. ஒன்றுமில்லாமையிலிருந்து எல்லாவற்றையும் உருவாக்கின தேவனுக்கு நம்மிடத்திலிருப்பதை நமக்காகப் பயன்படுத்துவது இலேசான காரியம். நானும், நீங்களும் நம்முடைய பிரச்சினையின் அளவை எண்ணி இதை வைத்துக்கொண்டு நான் என்ன செய்யமுடியும் எனக்கிருக்கும் தேவைக்கு இது எந்த மூலைக்கு? இத்தனை காலம் காத்திருந்தாயிற்று இனியா நடக்கப் போகிறது? என்றெல்லாம் எண்ணலாம். நம்முடைய அறிவு நம்மை அப்படியெல்லாம் கவுட்டி கவுட்டியாகச் சிந்திக்கத் தூண்டும் உண்மைதான். ஆனால், தேவன் நமக்காகச் செயல்பட ஆரம்பிக்கும் போது கூடாது, முடியாது, நடக்காது என்ற வார்த்தைகளுக்கு அங்கே வேலையே இல்லை. இந்தக் கைம்பெண் பற்றிய சம்பவத்தில் இக்கருத்து மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது. ஐந்து அப்பங்கள் இரண்டு மீன்கள் அற்புதச் சம்பவத்திலும் இது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

ஆகையால், அருமையானவர்களே! நம்முடைய இல்லாமையைக் குறித்து, பெலவீனங்களைக் குறித்து, குறைச்சலைக் குறித்து நாம் கவலைப்பட்டுக் கலங்கி நிற்கத் தேவையில்லை. சர்வவல்ல தேவனை நம்பி அவரிடம் சென்று அடைக்கலம் தேடும்போது, நம்முடைய இல்லாமையையும், பெலவீனங்களையும், குறைகளையும் போக்க அவர் வல்லவராயிருக்கிறார். புரிந்து செயல்படுவோம்.

### III. பிரச்சனை தீர தேவன் சொல்லுகிறபடி செய்ய வேண்டும்

அந்தக் கைம்பெண் சம்பந்தப்பட்ட சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னொரு பாடம், தேவன் சொல்லுகிறபடியெல்லாம் செய்யவேண்டும் என்பது.

தேவன் சொல்லுகிறபடியெல்லாம் செய்வது எல்லோராலும் ஆகக்கூடியது அல்ல. யாரெல்லாம் தங்களைச் சமூலமாய் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கிறார்களோ அவர்களாலே மாத்திரம் அது சாத்தியமாகும். ஆபிரகாம் தேவனுக்குத் தன்னை முழுமையாக ஒப்புக்கொடுத்திருந்த படியால், தன் தேசத்தையும் தன் இனத்தையும், தன் தகப்பன் வீட்டையும் விட்டுப் புறப்பட முடிந்தது (ஆதி.12:1-5). தமஸ்கு செல்லும் வழியில் இயேசுவால் சந்திக்கப்பட்ட பவுல் ஆண்டவரே நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்ற கேள்வியின் மூலம், தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் தன்னை ஒப்புக் கொடுத்தபடியால் தான் தனக்கு இடப்பட்ட கட்டளைப்படி எழுந்து பட்டணத்துக்குள் போக முடிந்தது (அப். 9:6).

ஆன்மீகச் சிந்தையுள்ள எல்லோரும் இப்படித்தான் செயல்படுவார்கள் என்று நாம் தீர்மானித்து விடக்கூடாது. ஏனெனில், மாற்கு 10-ம் அதிகாரத்தில் வரும் பணக்கார வாலிபனை எண்ணிப் பாருங்கள். இயேசு அவனைப் பார்த்து அவனிடத்தில் அன்பு கூர்ந்து உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு. நீ போய் உனக்கு உண்டான வைகளையெல்லாம் விற்று தரித்திரருக்குக் கொடு. பின்பு சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றி வா என்றார். அவன்

மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால் இந்த வார்த்தையைக் கேட்டு மனமடிந்து துக்கத்தோடே போய்விட்டான் (மாற்கு 10:21,22).

ஆனால், இந்தக் கைம்பெண் ஆன்மீகச் சிந்தனையைத் தாண்டியவளாய், ஆபிரகாமுக்குள்ளும், பவுலடியாருக்குள்ளும் இருந்த ஆவியைப் பெற்றவளாய்த் திகழ்ந்துள்ளார். எப்படியெனில், அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் இலேசானவைகள் அல்ல. அவளுடைய கடன் தொல்லை கைமீறி போனபடியால் ஊராரின் அவமானத்துக்கும் ஏச்சுப் பேச்சுக்கும் உள்ளானவளாக இருந்திருப்பாள். அப்படிப்பட்ட நிலையில் அயலகத்தாரிடம் போய் பாத்திரங்களைக் கேட்டால் யார் நம்பிக் கொடுப்பார்கள். விற்றுக் கடனைத் தீர்க்கத் திட்டம் போட்டு விட்டாளோ என்ற ஏளனப் பேச்சுத்தான் காதில் விழும், இப்படி தனக்கிருக்கும் கேவலமான சூழலை எலிசாவிடம் எடுத்துச் சொல்லி வேறு ஏதாவது சொல்லுங்களே என்று கேட்காமல், தேவமனிதர் சொல்லுகிறார் நான் செய்வேன் என்ற தீர்மானத்தோடு செயல்பட்டிருக்கிறாள். அந்த இடத்தில் நாமாக இருந்தால் என்ன செய்திருப்போம்?

இக்கைம்பெண்ணின் சிறப்பு இதோடு முடியவில்லை சொன்னபடியெல்லாம் செய்து முடித்து வேறே பாத்திரம் இல்லையென்ற கட்டம் வந்து ஊற்றெடுத்து வந்த எண்ணெயும் நின்று போன பிறகு தேவனுடைய மனிதனிடத்தில் போய் அதை அறிவித்தாள் ( ராஜா4:7) மீண்டும் அவன் கொடுத்த அறிவுரையின்படி எண்ணெயை விற்றுக் கடனைத் தீர்த்து மீந்ததைக் கொண்டு வாழக்கையை ஜம்ஜம் மென்று நடத்தினாள். ஆம், இரண்டு குமாரரை அடிமைகளாக அனுப்பும் நிலையிலிருந்த இவள் வாழ்க்கை எப்படி மாறிப் போயிற்று பாருங்கள் !

ஆகவே, எந்தச் சூழ்நிலையிலும் நாம் சோர்ந்துபோக வேண்டிய அவசியம் இல்லை. எல்லாமே முடிந்து விட்டது என்று முடிவு கட்டத் தேவையில்லை. எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் தேவன் நமக்காகக் கிரியை செய்ய முடியும். தேவையென்னவெனில் தேவன் மீதும் அவர் வழிநடத்துதல் மீதும் அசைக்கமுடியாத நம்பிக்கைதான். அந்நம்பிக்கை நாம் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் அதிகமான நன்மையை ஆசீர்வாதங்களை, பெற்றுத்தரும், என்ன செய்வதென்று தெரியாமல் தவித்த இக்கைம்பெண் இதற்கு மிகச் சிறந்த ஆதாரம், கற்றுக்கொண்டு நம் வாழ்வில் அப்பியாசப்படுத்துவோம். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்!

## விசுவாசம் என்பது.....

1. தேவனுடைய வாக்குத்தத்தங்களில் நம்பிக்கையாயிருப்பது (எபிரெயர் 11:6).
2. **நம்பப்படுகிறவைகளின்** உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயும் இருப்பது (எபி.11 :1).

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| சகோதர சிநேகம் | *Louis Rushmore* | *...1* |
| என்ன செய்வதென்று... | *E.Z.S. Rajanayagam* | *...6* |
| கிறிஸ்தவத்தின் கருணை | *J.C. Choate* | *...13* |
| அது இருதயத்தைப்பொறுத்தது! | *Jerry Bates* | *...17* |
| சர்ப்பங்களைப்போல வினாவுள்ள... | *Shane Fisher* | *...21* |
| முதியோரை கனம் பண்ணுங்கள்! | *P.C. Philemon rajah* | *...25* |
| உனக்காக வேண்டிக்கொண்டேன். | *B. Arjunan* | *...30* |

**தேவன் - God**

| | | |
|---|---|---|
| மாறாத நம் தேவன் | *Ernest S.Underwood* | *...35* |
| இயேசு கிறிஸ்துவுக்குள் சில... | *Donald R. Fox* | *...36* |
| அவர் நம்மை மீட்கும்படி பிறந்தார் | *Cliff Holmes* | *...37* |

**இரட்சிப்பு- Salvation**

| | | |
|---|---|---|
| உண்மையான விடுதலை | *Raymond Elliott* | *...38* |
| ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ... | *Benny Martin* | *...40* |

**செயலில் கிறிஸ்தவம் - Christinity in Action**

| | | |
|---|---|---|
| ஒன்றுக்கும் கவலைப்படாமல் | *Wayne Barrier* | *...43* |
| கிருபையிலும் அறிவிலும் வளர்தல் | *Marilyn LaStrape* | *...46* |
| தெரிந்து கொள்ளுதல், வழி... | *Aaron cozort* | *...49* |

**வேதாகம கேள்விகள் - Bible Questions**

| | | |
|---|---|---|
| தேவன் பரிணாம வளர்ச்சியை... | *Rodney Nulph* | *...51* |
| இயேசு கிறிஸ்து எல்லாவற்றையும்... | *Louis Rushmore* | *...55* |
| ஏன் தேவனை விசுவாசிக்கிறோம்? | *Terry wheeler* | *...58* |

**ஆராதனை - Worship**

| | | |
|---|---|---|
| பயந்திரு அதிகமாக பயந்திரு | *Denny petrillo* | *...60* |
| எங்களுக்கு ஜெபிக்க கற்றுத் தாரும் | *David Conley* | *...62* |

**ஆராதனை - Worship**

பாடலில் கர்த்தரை ஆராதித்தல் *Ronald D.Reeves* ...63

---

**அனுதின கிறிஸ்தவ ஜீவியம் - Daily Christian Living**

பயப்பட வேண்டாம் *Tam Raynor* ...66

வீண் பேச்சு *Emily Fisher* ...68

நீங்கள் உண்மையுள்ள கிறிஸ்தவ... *Mark N.posey* ...72

---

**வேதாகம கதாபாத்திரம் - Bible Character**

நமக்கு பினெகாஸின் புதிய... *Hiram Kemp* ...75

---

**சபை - The Church**

அப்போஸ்தலருடைய நடபடிகள்... *Cecil may.Jr* ...79

சிலர் வேத வாக்கியங்களைப் பற்றி... *Sunny David* ...81

---

**தேவனுடைய வார்த்தை - The Word Of God**

கீழ்ப்படிதலுக்கான அழைப்பு *Michael L. King* ...85

வேதாகம விளக்கம் *Tom Baxley* ...89

---

**வாழ்வதற்கான உபதேசம் - Doctrine To live By**

மரணமும் நித்தியமும் *Royce Frederick* ...90

எனக்குப்பிறன் யார்? *John kar* ...95

---

**கிறிஸ்தவ இல்லம் - Christian Home**

குடும்பத்திற்கு என்னவெல்லாம்... *J.J.Turner* ...97

ஆயத்தமாகு, ஸ்திரப்படு,வளர் *Martha Lynn Rushmore* ...102

---

**வசனரீதியான பாடங்கள் - Textual Studies**

பரிசுத்த பிள்ளைகள் *T pierce Brown* ...108



# கிறிஸ்தவத்தின் கருணை

# The compassion of Christ

*j.c. Choate*

**உ**தவி தேவைப்படுபவர்களிடத்தில் நாம் இரக்கம் காட்ட வேண்டும் என்பதைக் குறித்து வேதாகமத்தில் அதிகமாக சொல்லப்பட்டிருக்கிறது. தேவன் யூதர்களுக்கு இவ்விதமாய்ச்சொன்னார் “நீ உன் பயிரை அறுக்கையில் உன் வயலிலே ஒரு அரிக்கட்டை மறதியாய் வைத்துவைத் தாயானால், அதை எடுத்து வரும்படி திரும்பிப்போக வேண்டாம், உன் தேவனாகிய கர்த்தர் உன் கைப்பிரயாசத்திலெல்லாம் உன்னை ஆசீர்வதிக்கும்படி, அதைப் பரதேசிக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் விட்டுவிடுவாயாக ”[உபாகமம் 24:19].

இரக்கத்தைப் பற்றியும் கருணையைப்பற்றியும் புதிய ஏற்பாட்டில் அதிகமாகவே போதிக்கப்பட்டிருக்கிறது கிறிஸ்தவர்கள் இவ்விதமாய்ச் செய்யும்படி கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள் “**திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறை படாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்குமுன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது**” [யாக்கோபு 1:27]. மேலும், யாக்கோபு தொடர்ந்து இவ்விதமாய்ச்சொல்கிறார் ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும். சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென் ன? அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும் [யாக்கோபு2:15-17].

அப்போஸ்தலனாகிய பவுல் தேவ ஆவியினால் ஏவப்பட்டு கலாத்தியருக்கு இவ்விதமாய் புத்தி சொன்னார் **ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்க**ள் [கலாத்தியர் 6.2] இயேசு கிறிஸ்துவே லூக்கா பத்தாம் அதிகாரத்தில் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப்போகையில் கள்ளர் கையில் அகப்பட்டு, வஸ்திரங்கள் உரியப்பட்டு, காயப்படுத்தப்பட்டு, குற்றுயிராக விடப்பட்ட ஒருவனிடத்தில் இரக்கம் காட்டிய நல்ல சமாரியனுடைய உதாரணத்தை கொடுத்திருக்கிறார் [லூக்கா 10:25-37], மாயக்காரரான இரண்டு மதத் தலைவர்கள் தரையில் கிடந்த அந்த மனிதனைக் கண்டு, அவனுக்கு உதவிச் செய்ய மனதில்லாமல்,

சாலையின் மறுபக்கமாய் விலகிப் போனார்கள். ஆனால், அங்கு அடிபட்டுக் கிடந்தவனுடைய தேசத்தான் அல்லாத ஒரு அந்நியன் அவ்வழியாய் போகும்போது அந்த மனிதனுடைய அவல நிலையைக் கண்டு. அங்கே நின்று அவனுடைய காயங்களைக்கட்டி அவனை கழுதையின் மேல் ஏற்றி சத்திரத்துக்கு கொண்டு போய் அவனைப் பராமரித்தான். அது மாத்திரமல்ல. மறுநாளில் அவன் புறப்படும் போது இரண்டு பணத்தை எடுத்து, அவன் கையில் கொடுத்து அவனை விசாரித்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு கடந்து சென்றான். இயேசு கிறிஸ்து இந்த நல்ல சமாரியனை உண்மையான அயலகத்தானாக பாராட்டியிருக்கிறார். சிலர் அப்போஸ்தலர் 2:44,45 வசனங்களை எடுத்துக் கொண்டு கிறிஸ்தவத்தை சோலிச தன்மை கொண்டதாகச் சித்தரித்துக் காட்டுகிறார்கள்.

இந்த வசனப் பகுதி கிறிஸ்தவத்தின் உதவும் தன்மைக்கு ஓர் உதாரணமாக இருந்தாலும்கூட இது ஒட்டு மொத்த சம்பவத்தையும் விவரிக்கவில்லை. ஆம், ஜனங்கள் தங்களுடையவைகளை விற்று தேவையில் இருந்தவர்களுக்கு பகிர்ந்து கொடுத்தார்கள். ஏன் ஜனங்கள் அப்படிப்பட்ட கடினமான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டார்கள்? எருசலேமில் ஆரம்பிக்கப்பட்ட கிறிஸ்துவின் சபை யூதப் பண்டிகைகளான பஸ்கா, மற்றும் பெந்தெகொஸ்தே பண்டிகைகளைக் கொண்டாட எருசலேமுக்கு வந்த யூதர்களை பெரும்பாலும் உள்ளடக்கியதாக இருந்தது, [அப்போஸ்தலர் 2:9-11] வசனங்கள் எருசலேமிலே 16 தேசங்களைச் சேர்ந்த ஜனங்கள் கூடியிருந்ததாகச் சொல்கிறது. அந்த ஜனங்கள் அதிக பணத்தை செலவழித்து, நெடுந்தூரம் பயணித்து குறுகிய காலம் தங்கும்படியாக அங்கே கூடி இருந்தார்கள். ஆனால், பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு அவர்கள் மனமாற்றம் அடைந்த பிறகு கிறிஸ்துவைப் பற்றியும் அவருடைய ராஜ்யத்தைப் பற்றியும் அதிகமாக கற்றுக் கொள்வதற்காக அங்கேயே தங்கிவிடுகிறார்கள். அவர்கள் கொண்டு வந்த பணம் தீர்ந்து விடுகிறபடியால் எருசலேமிலிருந்த கிறிஸ்தவர்கள் தங்கள் நிலங்களை விற்று அவர்களுக்கு உதவினார்கள்.

பிற்பாடு அப்போஸ்தலர் 11:28-30 வசனங்களில் ஒரு மிகப்பெரிய பஞ்சம் முன்னுரைக்கப்பட்டு, அந்தியோகியாவில் இருந்த கிறிஸ்தவர்கள் தங்கள் திராணிக்குத்தக்கதாக யூதேயாவில் குடியிருக்கிற சகோதரருக்கு உதவியாக பணம் சேகரித்து அனுப்ப வேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

இங்கே எருசலேம் பட்டணத்தில் கிறிஸ்தவர்கள் தங்கள் நிலங்களை விற்று சக கிறிஸ்தவர்களுக்கு உதவினது போல இந்த அந்தியோகியா கிறிஸ்தவர்கள் செய்யவில்லை. தங்கள் தங்கள் திராணிக்குத்தக்கதாக என்று எழுதப்பட்டிருக்கிறபடியால் அவர்களிடம் நிலங்கள் இருந்தது போல தெரியவில்லை. அதனால்தான் யூதேயாவிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு பணம் சேகரித்து அனுப்பி இருக்கிறார்கள். எனவே, இங்கே எருசலேம் பட்டணத்துக் கிறிஸ்தவர்கள் தங்கள் நிலங்களை

விற்று அவர்களுக்கு உதவியது ஒரு அரிதான செயல்தான், எல்லா கிறிஸ்தவர்களுக்கும் இது சாத்தியமில்லை. வேதாகமத்தில் நாம் பார்க்கும் போது, சாதாரணமாக ஒரு தேவை என்று வந்தபோது கிறிஸ்தவர்கள் தங்கள் தங்கள் திராணிக்குத்தக்கதாக பணம் சேகரித்து மற்ற கிறிஸ்தவர்களுக்கு உதவி யிருக்கிறார்கள்.

தேவன் தம்முடைய ஜனங்கள் தேவையிலிருப்பவர்களுக்கு பொருளாதார உதவிகள் செய்ய வேண்டுமென்று விரும்புகிறாரா? பவுல் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு இவ்விதமாய்ச் சொல்கிறார் "**ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே**" (2 தெசலோனிக்கேயர் 3:10). மேலும் இவ்விதமாக விளக்குகிறார் **திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலைசெய்து, பிரயாசப்படக்கடவன்**' (எபேசியர் 4:28). இந்த வசனப்பகுதியிலும், இன்னும் அநேக வசனப் பகுதிகளிலும் நாம் நலமான வேலை செய்து குறைச்சல் உள்ளவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று தேவன் விரும்புவது தெரிகிறது இதுதான் கிறிஸ்தவத்தின் கருணையாய் இருக்கிறது. இது எல்லோரிடமும் பணம் சேர்த்து, ஒரு மையத்திற்கு அவைகளை அனுப்பி, அந்த மையத்தில் இருப்பவர்கள் பிறருக்கு பிரித்துக்கொடுக்கும் சோசியலிசமுறை அல்ல. "**தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு உலகெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் என்று கட்டளையிட்டார்**" (மாற்கு 16:15). இயேசு கிறிஸ்து நீங்கள் உலகெங்கும் போய் ஏழைகளுக்குக் கொடுங்கள் என்று ஏன் கட்டளையிடவில்லை? **தரித்திரர் எப்போதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள்**' என்று இயேசு தாமே சொல்லி இருக்கிறார் (மத்தேயு 26:11).



கிறிஸ்தவர்கள் தங்களுடைய எல்லாவற்றையும் கொடுத்தாலும் அது உலகத்தின் பிரச்சனைகளை ஒருபோதும் தீர்க்காது. சபையின் எல்லா வளங்களும் ஏழைகளுக்கு சேவை செய்ய செலவிடப்பட்டால், ஆத்தும ஆதாயத்திற்காக சுவிசேஷத்தை பிரசங்கிக்க எதுவும் மிஞ்சாது. மனிதர்கள் குறுகியப்பார்வை உடையவர்கள், சரீரப்பிரகாரமான உதவிகள் தான் முக்கியமானது என்று நினைக்கக் கூடியவர்கள். ஆனால், தேவனுக்கு கொடுக்க கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை பல

சந்தர்ப்பங்களில் மறந்து விடுகிறார்கள். "கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள். நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்" (லூக்கா 6:38).

தனிப்பட்ட கிறிஸ்தவர்களாக நாம் தேவனுக்கு ஊக்கமாக கொடுக்கும் போது, அதன் விளைவாக அவர் நம்மை சரீரப்பிரகாரமாகவும் ஆசீர்வதிப்பார். ஒவ்வொரு பிராந்திய சபையும், அவர்களுடைய பகுதிகளில் ஊழியத்தில் தங்களை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். "**ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக யாவருக்கும். விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும். நன்மைசெய் யக்கடவோம்**"(கலாத்தியர் 6:10). தங்களைச்சுற்றிலும் இருக்கும் ஜனங்களில் உதவி தேவைப்படுவோருக்கு உதவி செய்வது ஒவ்வொரு பிராந்திய சபையின் பொறுப்பாயிருக்கிறது. அதன் விளைவாக தனிப்பட்ட நபர்களையும், சபைகளையும் தேவன் ஆவிக்குரியப்பிரகாரமாகவும், சரீரப்பிரகாரமாகவும் ஆசீர்வதிப்பார். "கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள். நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்".

## கிறிஸ்தவ மார்க்கம்

1. ஜீவ மார்க்கம் (அப் 2:28)
2. விசுவாச மார்க்கம் (கலா 3:9)
3. உத்தம மார்க்கம் (நீதி 11:20)
4. ஞான மார்க்கம் (நீதி 4:11)
5. நீதியின் மார்க்கம் (II பேதுரு 2:21)
6. கர்த்தருடைய மார்க்கம் (அப் 18:25)
7. தேவனுடைய மார்க்கம் (அப் 18:26)



# அது இருதயத்தைப்பொறுத்தது!

## It is a matter of the Heart!

*Jerry Bates*

பெரும்பாலான பிராந்திய சபைகள் வாரத்தில் பலமுறை வேத பாட வகுப்புக்காக, ஆராதனைக்காக அல்லது வேறு ஏதாவது கூட்டங்களுக்காக கூடுகிறார்கள், இவைகளில் பெரும்பாலான உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் பங்கெடுக்க முயற்சிப்பார்கள். இருந்த போதிலும், பெரும்பாலான அங்கத்தினர்கள் ஞாயிறு காலை ஆராதனையைத்தவிர மற்ற கூடுகைகளில் கலந்து கொள்வதில்லை என்பதை நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம். அவர்கள் எல்லோரையும் எல்லாக் கூடுகைகளிலும் பங்கெடுக்கச்செய்யும் முயற்சிகளில் பெரிய அளவில் பலன் கிடைப்பதில்லை.

ஏன் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் வாரத்திற்கு ஒரு முறை தவிர, சபை மூலமாக நடத்தப்படும் மற்ற கூட்டங்களில் கலந்து கொள்வதில்லை? அதற்கு பல காரணங்கள் இருக்கலாம். அதற்கு பொதுவாக எல்லோரும் சொல்லும் சாக்குப் போக்கு என்னவென்றால். புதிய ஏற்பாடு வேத பாட வகுப்புகளில் கலந்து கொள்ள வேண்டுமென் றோ. குடும்பக் கூடுகைகளில் பங்கெடுக்க வேண்டுமென்றோ கட்டளையிடவில்லை என்பதுதான். உதாரணமாக, புதிய ஏற்பாடு வாரத்தின் இடைப்பட்ட நாளிலே வேத பாட வகுப்புக்காக கூடவில்லை என்றால் பரலோகம் போக முடியாது என்று சொல்லவில்லையே என்று வேத பாட வகுப்பில் பங்கெடுப்பதற்கு பலர் எதிர்ப்பு தெரிவிக்கலாம். அந்த ஆட்சேபணைகளை குறித்து நாம் சற்று சிந்தித்து பார்ப்போம்.

கடந்த வருடங்களில் இந்த ஆட்சேபணைகளை குறித்துக் நான் ஆழ்ந்து யோசித்திருக்கிறேன். புதிய ஏற்பாடு இடைப்பட்ட நாளிலேயே வேத பாட வகுப்புக்காக கூட வேண்டும் என்று கட்டளையிடவில்லை என்பது உண்மையாக இருந்தாலும் கூட, அதன் பொருள் இடைப்பட்ட நாட்களில் ஒன்று கூடுவது முக்கியமற்றது அல்லது அவசியமற்றது என்று படாது. இங்கே கருத்து என்னவென்றால், பரலோகம் செல்ல விரும்பும் ஒருவர் தேவன் இட்ட கட்டளைகளைத்தாண்டி கூடுதலான காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதுதான். வேறு விதமாகச் சொன்னால் ஒருவர் தேவனைப் பிரியப்படுத்த விரும்பினால், தேவனுடைய குறைந்தபட்ச எதிர்பார்ப்புகளைத் தாண்டி சற்று கூடுதலாகச்செய்ய வேண்டும்.

சரி இப்போது, வாரத்தின் முதல் நாள் தோறும் தேவனை ஆராதிக்க ஒன்று கூடினால் போதுமானது என்னும் மனப்பான்மையில் என்ன தவறு உள்ளது? இந்த மனப்பான்மையில் குறைந்தபட்சம் மூன்று தவறுகள் காணப்படுகின்றன. முதலாவது, வாரத்தில் ஒரு நாள் மாத்திரம் சபையாக கூடினால் போதுமானது என்னும் அளவுகோல் வேதாகமத்தில் எங்குமே கொடுக்கப்படவில்லை. தேவன் ஒருபோதும் குறைந்தபட்ச அளவுகளை ஏற்படுத்துவதில்லை. அதைப்போல் அவர் குறைந்தபட்ச கீழ்ப்படிதலையும் ஒரு போதும் அங்கீகரிப்பதில்லை. தேவன் எப்போதுமே நாம் பணிக் கப்பட்டதற்கு அதிகமாகவே செய்யும்படியாக உற்சாகப்படுத்துகிறார். உதாரணமாக, மலைப்பிரசங்கத்தில் இயேசு **ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம்வரப் பலவந்தம்பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம்போ** (மத்தேயு 5:41) என்று நம்மை உற்சாகப்படுத்துகிறார். இந்த வசனப் பகுதியில் ஒரு ரோமப்போர் சேவகன் ஒரு யூதனிடம் சுமையை தூக்கிக்கொண்டு நடக்கச்சொல்வான் அதற்கு மேல் இல்லை. ஆனால், இங்கே இயேசு ஒருவர் தன்னிடம் கேட்டுக்கொள் ளப்பட்டதற்கு அதிகமாக செய்ய வேண்டும் என்று உற்சாகப்படுத்துகிறார். மத்தேயு 5:47 ல் இயேசு கிறிஸ்து நீங்கள் விசேஷித்து செய்கிறது என்ன? என்று கேட்கிறார். அதன் பொருள் நீங்கள் மற்றவர்களை விட அதிகமாக என்னச் செய்கிறீர்கள்? என்பதாகும். மற்றவர்கள் மீது நாம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டு மென்றால், மற்றவருடைய எதிர்பார்ப்பை விட அதிகமாக நாம் செய்வது அவசியமாய் இருக்கிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் மற்றவருடைய எதிர்பார்ப்புக்கு குறைவாக ஒருபோதும் செய்யவே கூடாது. நம்மால் முடிந்தவரை அதிகமாகச் செய்ய வேண்டும்.

வாரத்தில் ஒரு நாள் தேவனை ஆராதிக்க கூடினால் போதுமானது என்னும் மனப்பான்மையில் உள்ள இரண்டாவது தவறு அது ஒருவருக்கு தேவன் மீதான அன்பின் குறைச்சலை வெளிப்படுத்துகிறது. ஒருவருடைய கிரியைகளின் அடிப்படையில் அவர் பரலோகம் செல்ல முடியாது என்பதை நாம் எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும். பரலோகம் என்பது நாம் தேவனிடத்திலிருந்து பெறும் ஒரு ஈவாகும். அது அவருடைய கிருபையின் அடிப்படையிலும், கிறிஸ்து இயேசுவில் உள்ள நம்முடைய விசுவாசத்தின் அடிப்படையிலும் நமக்கு கொடுக்கப்படுகிறது. தேவன் நம் மீது கொண்ட அன்பின் நிமித்தமாக அந்த மாபெரும் வெகுமதியை நமக்கு தருவதால் அதற்குக் கைமாறாக நாம் தேவனிடத்தில் அன்பு கூரவேண்டும். அதாவது அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதன் மூலமாக அவரிடத்தில் நாம் அன்பு கூரவேண்டும் (யோவான்14:15). நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள் (யோவான் 14:15). தேவன் தம்முடைய பிள்ளைகள் தம்மை சேவிக்க வேண்டுமென்று விரும்புகிறார். நாம் உண்மையாகவே தேவனிடத்தில் அன்பு கூர்ந்தால் அவர் எதிர்பார்ப்பதை விட அதிகமாகச்செய்வோம்.

தங்கள் பிள்ளைகளின் எதிர்பார்ப்பை விட குறைவாகச் செய்ய வேண்டுமென்று நினைக்கும் பெற்றோரை நீங்கள் எப்போதாவது பார்த்ததுண்டா? நிச்சயமாகவே அப்படி பார்த்திருக்க முடியாது. பொதுவாக, பிள்ளைகள் மீது அன்புள்ள பெற்றோர் தங்களால் முடிந்தவரை சிறந்ததையே செய்ய விரும்புவார்கள். அதேபோல் அன்புள்ள நம் பரம தகப்பனும், பிள்ளைகளாகிய நமக்கு சிறந்ததையே செய்ய விரும்புகிறார். அப்படிருக்கும்போது தேவனுடைய எதிர்பார்ப்புக்கு குறைவாக நாம் ஏன் ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டும்? தேவன் நமக்குச் சொல்லி முடியாத ஈவை தந்திருக்கிறார். [2 கொரிந்தியர் 9:15] எனவே, எது தேவையானதோ அதைச் செய்தால் போதுமானது என்னும் குறைந்தபட்ச மனப்பான்மையுடன் நாம் எப்படி இருக்க முடியும்?

வாரத்தில் ஒரு நாள் தேவனை ஆராதிக்கக் கூடினால் போதுமானது என்னும் மனப்பான்மையிலுள்ள மூன்றாவது தவறு அது ஒருவருக்கு சக கிறிஸ்தவர்கள் மீதான அன்பின் குறைச்சலை வெளிப்படுத்துகிறது. சபை நம் ஆவிக்குரிய குடும்பமாயிருக்கிறது. அதுமட்டுமல்ல அது நம் சரீரப்பிரகாரமான குடும்பத்தோடு ஒப்பிடப்படுகிறது. பெரும்பாலான குடும்பங்கள் அன்பால் இணைக்கப்பட்டிருக்கின்றன. அந்த அன்பு தான் குடும்பத்தில் உள்ள அங்கத்தினர்கள் மற்ற அங்கத்தினர்களிடத்தில் அதிக நேரத்தை செலவு செய்ய ஊக்குவிக்கிறது. குடும்பத்திலுள்ள ஒருவர் இத்தகைய கூடும் தருணங்களில் கூட விருப்பமில்லாமல் இருந்தாலோ, அல்லது எப்போதாவது ஒருமுறை ஒன்று கூடுவதற்கு விரும்பினாலோ அது குடும்பத்தினர் மீதான அவருடைய அன்பின் குறைச்சலைத்தான் வெளிப்படுத்துகிறது. நாம் நம் சக கிறிஸ்தவர்களுக்காக மரிக்கும் அளவுக்கு அவர்களிடத்தில் அன்பு கூர வேண்டும் [1 யோவான் 3:16], ஒருவருக்காக மரிப்பது என்பதன் நடைமுறை அர்த்தம் சரீரப்பிர காரமாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும் ஒருவருக்காக நம்மால் முடிந்தவரை உதவி செய்வதைத்தான் குறிக்கும்[ 1 யோவான் 3:17-18; கலாத்தியர் 6:1-2]. நாம் இதை ஒன்று கூடி வரும் போது தான் செய்ய முடியும். நம் ஆவிக்குரிய குடும்பத்தோடு ஒன்று கூடுவதை நாம் அலட்சியம் செய்தால், அது நம் ஆவிக்குரிய குடும்பத்தின் மீதான நம்முடைய அன்பின் குறைச்சலைத்தான் வெளிப்படுத்துகிறது.

சுருக்கமாக, ஒருவர் சபை கூடி வருவதை அலட்சியம் செய்வதென்பது ஒருவருடைய ஆழமான ஆவிக்குரிய பிரச்சினையைத்தான் வெளிப்படுத்துகிறது. பலர் 'நான் ஞாயிற்றுக்கிழமை இரவு ஆராதனை அல்லது வாரத்தின் இடைப்பட்ட நாள் இரவு வேளையில் ஆராதனைக்காக அல்லது வேத



பாட வகுப்புக்காக கூடி வரவில்லை என்றால் நான் இழந்து போவேனா அல்லது இழக்கடிக்கப்படுவேனா' என்று கேள்வி கேட்கிறார்கள். ஒருவர் வேத பாடவகுப்பில் பங்கெடுக்கவில்லையென்றால் அல்லது ஞாயிற்றுக்கிழமை இரவு ஆராதனையை தவறவிட்டால் அவர் இழந்து போக மாட்டார். ஆனால், அது அவருடைய ஆழமான ஆவிக்குரிய பிரச்சனையான தேவன் மீதான அன்பின் குறைச்சலையும், ஆவிக்குரியப்பிரகாரமாக வளர்ச்சி அடைவதற்கான ஆசையின்மையையும் தான் வெளிப்படுத்துகிறது. இந்தக் குறைபாடுகள் ஒருவர் இழந்து போவதற்கு காரணங்களாக மாறிவிடும். இதை நாம் ஒருபோதும் அனுமதிக்க கூடாது. ✝

## வேதாகமம்

வேதாகமம் நித்திய ஜீவன் சம்மந்தமான தகவல்களின் ஆதாரமாயி ருக்கிறது.

வேதாகமம் அனுதின வாழ்க்கைக்கான வழிகாட்டியாயிருக்கிறது.

வேதாகமம் மதசம்மந்தமான காரியங்களில் இறுதி வாக்காயிருக்கிறது.

வேதாகமம் நம்மை பாவத்திலிருந்து விடுதலையாக்கும் சத்தியத்தைச் சொல்கிறது.

வேதாகமம் நமக்கு பெலனையும், ஆறுதலையும் தருகிறது.

வேதாகமம் நாம் எப்படி மகிழ்ச்சியாக வாழ வேண்டுமென்று சொல்கிறது

இப்படிப்பட்ட புத்தகம் நமக்கு கிடைத்திருக்கிறபடியால், நாம் நிச்சயமாக அதில் இடம் பெற்றுள்ள காரியங்களை ஜாக்கிரதையாக அறிந்துகொள்ள வேண்டும். நாம் வேதாகமத்தைப் படிக்கிறோமா?



# சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாயிருங்கள்.

## Wise as serpents and harmless as Doves

*Shane Fisher*

**த**மிழ் அகராதி paradox என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு முரண்பட்டது போலிருந்தாலும் உண்மையான ஒரு கூற்று என்று பொருள் கொடுக்கிறது. பரிசுத்த வேதாகமத்தில் பல இடங்களில் முரண்பாடு உள்ள வாக்கியங்கள் இடம்பெற்றிருக்கின்றன. மேற்சொல்லப்பட்ட தலைப்பு ஒரு முரணாக தோன்றினாலும் கூட, இதிலிருந்து நாம் சில ஆவிக்குரிய உண்மைகளை கற்றுக் கொள்ள முடியும். வேதாகமம் முழுவதும் நாம் பார்க்கும் போது இதுபோன்ற முரண் உள்ள வாக்கியங்கள் நாம் ஆழமான சத்தியங்களை தியானிக்க உதவுகின்றன. இங்கே நாம் பரிசீலிக்கப்போகிற முரண்பாடு கிறிஸ்தவர்கள் சர்ப்பங்களைப் போல வினாவுள்ளவர்களும், புறாக்களைப் போல கபடற்றவர்களுமாய் இருக்க வேண்டும் என்பதாயிருக்கிறது.

இங்கே (மத்தேயு 10:16-21) வசனப் பகுதியின் பின்னணியை பார்த்தால் இயேசு கிறிஸ்து காணாமல் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு போங்கள் என்று கட்டளை கொடுத்து சீஷர்களிடத்தில் பேசிக் கொண்டிருக்கிறார். கிறிஸ்துவின் இந்த வார்த்தைகள் நேரடியாக அவருடைய சீஷர்களுக்கு பொருந்தினாலும் கூட, அவருடைய வார்த்தைகள் இன்று நமக்கும் பொருந்துகிறதாகவே இருக்கிறது.

**வேதாகம வரலாற்றைக் குறித்த சுருக்கமான விவரங்கள்**

தேவன் தம்முடைய சிருஷ்டிப்பை நமக்கு மிகப்பெரிய பாடங்களை போதிப்பதற்காக பயன்படுத்துகிறார். உதாரணமாக, எறும்புகள் நாம் சோம்பலாக இருக்கக் கூடாது, மாறாக கடினமாக உழைக்க வேண்டும் என்று கற்றுத் தருகின்றன (நீதிமொழிகள் 6:6-9) சர்ப்பமும், புறாவும் எப்படி வேதாகம வரலாற்றின் மூலமாக விவரிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். சர்பங்களைப் பற்றி வேதாகமம் இவ்விதமாய் சொல்கிறது. (1) தீமை மற்றும் துன்மார்க்கத்திற்கு அடையாளமாக இருக்கிறது.(2) ஆபத்து மற்றும் தண்டனையின் அடையாளமாய் இருக்கிறது. (3) அழகு, தந்திரம் மற்றும் ஞானத்தின் அடையாளமாகவும் இருக்கிறது.

**தீமை மற்றும் துன்மார்க்கத்தின் அடையாளமாய் இருக்கிறது**

வேதாகமத்தின் ஆரம்ப முதல் முடிவு வரை (ஆதியாகமம்3:1, 15; வெளிப்படுத்தின விசேஷம் 20:2) உலகின் முதல் தம்பதியினரை சோதித்த அந்தப் பிசாசைத்தான் பழைய சர்ப்பமாகக் காட்டுகின்றன.

ஆபத்து மற்றும் தண்டனையின் அடையாளமாய் இருக்கிறது. சர்ப்பங்களில் பெரும்பாலானவைகள் விஷம் நிறைந்தவைகளாக இருக்கிறபடியால் அவைகள் ஆபத்தானவைகள். சர்ப்பங்கள் பெரும்பாலும் எவ்வித எச்சரிக்கையுமின்றி மறைவான இடங்களிலிருந்து தாக்க கூடியவவைகளாக இருக்கின்றன (ஆதியாகமம் 49:17. ஆமோஸ் 5:19).

## ஜீவனின் அடையாளமாய் இருக்கிறது

வேதாகமத்தில் சர்ப்பங்களை பற்றி எல்லாமே எதிர்மறையாக சொல்லப்படவில்லை. உதாரணமாக, வனாந்தரத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்கு விரோதமாக கலகம் செய்தார்கள். அப்போது தேவன் அவர்கள் மத்தியில் சர்ப்பங்களை அனுப்பி அவர்களை கடிக்கச் செய்து அவ்விதமாக அவர்களுக்கு தண்டனை கொடுத்தார். இருந்த போதிலும், தேவன் அந்த சர்ப்பத்தின் உருவத்தை நோக்கி பார்த்தவர்கள் மீது இரக்கம் காட்டினார். அந்த சர்ப்பத்தை விசுவாசத்தோடு நோக்கி பார்த்தவர்கள் பிழைத்தார்கள் (எண்ணாகமம் 21:4–9). இயேசு கிறிஸ்து இந்த வரலாற்றுச் சம்பவத்தை அவரிடத்தில் விசுவாசம் வைத்து. கீழ்ப்படிபவர்கள் நித்திய நித்தியமாக பிழைப்பார்கள் அல்லது வாழ்வார்கள் என்பதை காட்டுவதற்காக பயன்படுத்தினார் (யோவான் 3:14,15).

## அழகு, தந்திரம் மற்றும் ஞானத்தின் அடையாளமாய் இருக்கிறது

நீதிமொழிகள் புத்தகத்தின் ஆசிரியர் கன்மலையின் மேல் பாம்பினுடைய வழியை பார்த்து ஆச்சரியத்தில் ஆழ்ந்து போகிறார் (நீதிமொழிகள் 30:18,19) சர்வத்தையும் உண்டாக்கின இயேசு கிறிஸ்து சர்ப்பங்கள் தந்திரமானவைகள், ஞானமுள்ளவைகள் என்று அழைக்கிறார்.

வேதாகமம் புறாக்களை குறித்து சில குறிப்பிட்ட காரியங்களை போதிக்கிறது (ஆதியாகமம்) (2) புறாவின் மென்மை மற்றும் உண்மைத் தன்மை (3) சமாதானத்தின் அடையாளம் (4) முட்டாள்த்தனம் மற்றும் அறிவில்லாமையின் அடையாளம்.

பலி: புறாக்கள் சர்வாங்க தகன பலிகளுக்காக பயன்படுத்தப் பட்டிருக்கின்றன (லேவியராகமம் 1:14) இவ்வகையான பலிகள் ஏழைகளால் செலுத்தப்பட்டிருக்கின்றன (லேவியராகமம் 14:21,22)

புறாக்களின் மென்மைத் தன்மை, உண்மைத்தன்மை. உன்னதப்பாட்டு நேசரை புறாவோடு ஒப்பிடுகிறது (1:15, 2:14, 4:1, 6:9), புறாக்கள் அதன் மென்மை, அதன் இறகுகளின் அழகு மற்றும் அதன் துணையோடு அதன் அர்ப்பணிப்பு போன்றவைகளுக்காக அறியப்படுகின்றன.

சமாதானத்தின் அடையாளம்: நோவா பேழையிலிருந்து ஒரு புறாவை அனுப்பினார். அந்தப் புறா பூமியில் தண்ணீர் வடிந்து விட்டது என்பதற்கு அடையாளமாக ஒரு ஒலிவ இலையை கொண்டு வந்தது (ஆதியாகமம் 8:8-10). ஒரு வருட நியாயத்தீர்ப்புக்குப் பிறகு இறுதியாக அங்கே சமாதானம் நிலவியது.

மதீயினம் மற்றும் முட்டாள்தனத்தின் அடையாளம்: புறாக்கள் இந்த குணாதிசயங்களுக்காக அறியப்படுகின்றன (ஓசியா 7:11,12). யோனா என்ற பெயரின் அர்த்தம் புறா என்பதாகும். யோனா தேவ சமூகத்திலிருந்து ஓட முயற்சித்ததினால் அவருடைய பெயருக்கேற்ப வாழ்ந்திருக்கிறார். அவருடைய செயல் முட்டாள்தனமானது

**இயேசுவால் பயன்படுத்தப்பட்ட அடையாளங்கள்**

இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு அந்த வரையறுக்கப்பட்ட கட்டளையை கொடுத்தபோது சில காரியங்களை அவர்களுக்கு போதித்தார். (1) பரம பிதாவைச் சார்ந்திருத்தல். (2) எதிர்காலத்தில் அவர்கள் எதிர்கொள்ள வேண்டிய ஆபத்துக்கள் போன்றவவைகளை குறித்து போதித்தார். அதற்கு உதாரணமாக அவர் மூன்று உயிரினங்களை பயன்படுத்தினார். ஆடு, சர்ப்பம் மற்றும் புறா போன்றவைகளாகும். இவைகளுள் சீஷர்கள் சர்ப்பங்களைப் போல வினாவுள்ளவர்களும், புறாக்களைப் போல கபடற்றவர்களுமாய் இருக்க வேண்டும்.

**இவ்விதியை பயன்படுத்துவதற்கான அளவுகோல்கள்**

முரண்பாடு போல தோன்றும் இந்த விதியை நாம் எப்படி பயன்படுத்த முடியும்? சர்பத்தை போல வினாவுள்ளவர்களும், புறாவைப் போல கபடற்றவர்களாயிருங்கள் என்னும் இந்த சொற்றொடரை நாம் எவ்விதமாக பயன்படுத்த முடியும்? நாம் சர்ப்பங்களைப் போல வினாவுள்ளவர்களாயிருந்து தேவனுடைய வார்த்தையின் அறிவிலே தொடர்ந்து வளர வேண்டும் (2 பேதுரு 3:18). நமக்கு உலகத்தைப் பற்றி சரியான கிறிஸ்தவப் பார்வை உள்ளதா?

நாம் மனிதனால் உண்டாக்கப்பட்ட மார்க்க பிரிவினைக் கூட்டங்களில் இல்லை, மாறாக கிறிஸ்தவர்களாக மாத்திரம் இருக்கிறோம் என்பதை மற்றவர்களுக்கு நம்மால் சொல்ல முடியுமா? நம்முடைய ஒழுக்க நெறிகளை குறித்தும், நம்முடைய ஆராதனை முறைமைகளைக் குறித்தும், சபையின் ஆளுகை அமைப்பை குறித்தும், இரட்சிப்பின் திட்டத்தை குறித்தும் நம்மால் மற்றவர்களிடம் சொல்ல முடியுமா?

நாம் புறாக்களைப் போல கபடற்றவர்களாய் இருந்து கொண்டு நம் சத்துருக்களை சிநேகிக்கவும். மற்றவர்கள் நம்மை எப்படி நடத்த வேண்டும் என்று விரும்புகிறோமோ அப்படியே நாம் அவர்களை நடத்த கற்றுக் கொள்ள வேண்டும் (மத்தேயு5:38-48; 7:12). நம்முடைய நீடித்த அன்பைப்பார்த்து சில சத்துருக்கள் தடைகளை எல்லாம் தகர்த்தெறிந்து

நம்மை சிநேகிக்க தொடங்கி விடுவார்கள் [ரோமர் 12: 17–21] வேதாகம கண்ணோட்டத்தின் படி தீமைக்கு பேதைகளாய் இருப்பது நல்லது தான். உங்கள் கீழ்ப்படிதல் யாவருக்கும் தெரியவந்திருக்கிறது. ஆகையால், உங்களைக் குறித்துச் சந்தோஷப்படுகிறேன், ஆனாலும் நீங்கள் நன்மைக்கு ஞானிகளும் தீமைக்குப் பேதைகளுமாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறேன் [ரோமர் 16:19]. நாம் தீமைப்பற்றி அறிந்து கொள்ள அதில் ஈடுபட வேண்டிய அவசியமில்லை. யோசேப்பு விபச்சாரத்தை பற்றி அறிந்து கொள்ள அதில் ஈடுபட வில்லையே [ஆதியாகமம்39]. நாம் பாவத்தின் விளைவுகளைக் காண ஒவ்வொரு பாவத்திலும் ஈடுபட வேண்டிய அவசியமில்லை [ரோமர் 13:11–13]

## முரண்பாடு போலத் தோன்றும் இந்த விதியை நாம் எப்படி சமச்சீராக பயன்படுத்த வேண்டும்?

காலத்தை சரியாகப் புரிந்து கொள்ள நாம் இவ்விதமாக பயன்படுத்த வேண்டு [ 1 நாளாகமம் 12:32] சத்தியத்தை விசுவாசிக்காத ஜனங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த வினோத காலகட்டங்களில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உலகத்தில் பலர் கிறிஸ்தவம் பெண்களுக்கு எதிரானது, அறிவியலுக்கு எதிரானது. ஓரினச்சேர்க் கைக்கு எதிரானது என்று குற்றச்சாட்டுகளை வைக்கிறார்கள். அவைகளுக்கெல்லாம் நாம் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல பழகிக் கொள்ள வேண்டும் [ 1 பேதுரு 3:15] கிறிஸ்தவர்களாக நாம் சர்ப்பத்தை போல வினாவுள்ளவர்களும் புறாவைப் போல கபடற்றவர்களாய் இருந்தால், இது போன்ற தவறான தத்துவஞானங்கள் மற்றும் உபதேசங்களில் அடிமைப்பட்டிருக்கும் அநேகரை நாம் போய் சந்திக்க முடியும். அது மாத்திரமில்லாமல், நாம் ஒருவரை ஒருவர் முக முகமாக பார்த்து பேசிக் கொள்ளாத காலகட்டங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இதன் காரணமாக இன்றைய நாட்களில் ஜனங்களோடு சரியான உறவு வைத்துக் கொள்வது கடினமாக உள்ளது. உறவுகள் இல்லாத சத்தியம் அகங்காரத்துக்கு வழி வகுக்கிறது என்றும் அதே நேரத்தில் சத்தியம் இல்லாத உறவுகள் அக்கறையின்மைக்கு வழிவகுக்கிறதென்றும், சரியாகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சமாரிய ஸ்திரீயோடும் நிக்கொதேமோடும் இடைபடும்போது சத்தியத்தோடு உறவை சமச்சீராக வைத்திருந்ததை நம்மால் காண முடியும். [யோவான் 3:1–15; யோவான் 4:1– 45] உண்மையாகவே இயேசு கிறிஸ்து அங்கே சர்ப்பத்தை போல வினாவுள்ளவராகவும் புறாவைப் போல கபடற்றவருமாக இருந்திருக்கிறார். இயேசு அந்த பரிசேயனின் தவறான எண்ணத்தையும். அந்த சமாரிய ஸ்திரீயின் தவறான எண்ணத்தையும் திருத்தியிருக்கிறார். நாம் நம்முடைய எஜமானின் அடிச்சுவடுகளை பின்பற்றுவோமாக.

✝

## முதியோரை கனம் பண்ணுங்கள்!

## Honour the Elderly People

Bro. P.C. *பிலேமோன் ராஜா*

இக்கட்டுரையின் வாயிலாக உங்களுடன், வேதாகமத்துணையுடன் முதியோருக்கு நாம் செய்ய வேண்டியதினை குறித்தும், முதியவர்கள் கர்த்தருக்கு செய்ய வேண்டியதனை குறித்தும் பகிர்ந்துகொள்வதில் மிகவும் அகமகிழ்கின்றேன்.

**முதியோருக்கு நாம் செய்ய வேண்டியது:**

பைபிள் முதியவர்களை எப்படி நடத்த வேண்டும் என்பதனைப் பற்றியும், ஏன் அப்படி நடத்த வேண்டும் என்பதனைப் பற்றியும், அதனால் என்ன பலன் என்பதனைப் பற்றியும் தெளிவாகவே பேசுகின்றது.

**முதியோரை நாம் கனம் பண்ண வேண்டும்:**

லேவியராகமம் 19:32 நரைத்தவனுக்கு முன்பாக எழுந்து, முதிர்வயதுள்ளவன் முகத்தைக் கனம்பண்ணி, உன் தேவனுக்குப் பயப்படுவாயாக; நான் கர்த்தர்.'

முதியோரை எப்படி கனம் பண்ண வேண்டும் என விவரிக்கின்றார். முதியோரை கண்டால் எழுந்து நில், அவரது முகத்தினை கனம் பண்ணு என்கின்றார். நாம் எப்படி இருக்கின்றோம். முதியவரை கண்டால் எழுந்து நின்று மரியாதை செய்கின்றோமா? பேருந்திலோ, ரயிலிலோ முதியவரைக் கண்டால், நாம் எழுந்து அமர இடமளிக்கின்றோமா? வீட்டில் தாத்தா, பாட்டி எல்லாம் கீழே அமர்ந்திருக்கும் போது, நாம் நாற்காலி மீது அமர்கின்றோமா? நாம் எப்படி நடந்துகொள்கின்றோம்.

வயதானவர்கள் என்றாலே ஒரு உதாசின மனது வந்துவிடுகின்றதா ? துமையின் காரணமாக அவர்கள் பெலன் குறைவதால், அவர்களால் ஏதும் பயனில்லை என எண்ணுகின்றோமா? கிழவன் கிழவி என மரியாதை குறைவாக எண்ணுகின்றோமா? பேசுகின்றோமா?

நாம் ஒன்றைச் சிந்திக்க வேண்டும். இப்பொழுது உடலில் பலமான, அழகான பேரனாக, பேத்தியாக. மகனாக மகளாக இருக்கின்ற நாம், இந்த நிலையை கடந்து அந்த நிலையைத் தான் அடைய வேண்டும்.

இளவயதும், வாலிபமும் மாயை என்று சொல்கின்ற பைபிள் முதுமையைப் பற்றி பேசும்போது, அவர்கள் முதிர்வயதிலும் கனிதந்து செழுமையும் பசுமையுமாக இருப்பார்கள் என்கின்றது.

சங்கீதம் 92:12-15 'நீதிமான் பனையைப் போல் செழித்து, லீபனோனிலுள்ள கேதுருவைப்போல் வளருவான். கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள் எங்கள் தேவனுடைய பிரகாரங்களில் செழித்திருப்பார்கள். கர்த்தர் உத்தமரென்றும், என் கன்மலையாகிய அவரிடத்தில் அநீதியில்லையென்றும், விளங்கப்பண்ணும்படி, அவர்கள் திர்வயதிலும் கனி தந்து, புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள்.

நாம் கர்த்தருக்கு பயப்படுவதனாலே. முதியோருக்கு மரியாதை கொடுக்கின்றவர்களாக இருக்க வேண்டும். இதில் தனக்கு வேண்டியவர் வேண்டாதவர் என்ற பாகுபாடு கூடாது. தான் பெற்ற தாயை மாத்திரமல்ல, வயது மூத்த அனைத்து பெண்களையும், உங்கள் மாமியார் உட்பட அனைவரையும் தாயைப் போல மரியாதையுடனும், அதேபோல வயது மூத்த ஆண்களையும் அனைவரையும் உங்கள் மாமனார் உட்பட அனைவரையும் தகப்பனை போல நடத்துங்கள் என பரிசுத்த ஆவியானவர், கிறிஸ்துவின் இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப்பட்ட நமக்கு சொல்வதை கவனித்து மிகவும் ஜாக்கிரதையுடன் செய்ய வேண்டும். 1 தீமோ 5:1,2 'திர்வயதுள்ளவனைக் கடிந்துகொள்ளாமல், அவனைத் தகப்பனைப் போலவும், பாலிய புருஷரைச் சகோதரரைப் போலவும், முதிர்வயதுள்ள ஸ்திரீகளைத் தாய்களைப் போலவும், பாலிய ஸ்திரீகளை எல்லாக் கற்புடன் சகோதரிகளைப்போலவும் பாவித்து, புத்திசொல்லு.'

அநேக பெண்கள் தங்கள் மாமியாரை மரியாதை குறைவாக நடத்துவது போலவே, ஆண்களும் தங்கள் மாமனாரை மரியாதை குறைவாக பேசுகின்றனர். பெண்கள் செய்வது வெளியே தெரிகின்றது. ஆண்கள் செய்வது வெளியே தெரியாவிடினும், கர்த்தர் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருக்கின்றார். அவர் அனைத்தையும் நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்பதனை நாம் நன்கு அறிவோம். பிரசாங்கி 12:13,14 'காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே. ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்.'

வயதில் மூத்தவர்கள் நமக்கு சொல்லும் ஆலோசனைகள், கர்த்தருக்கு உகந்ததாக இருக்கும் பட்சத்தில், நாம் அதனை செய்வோம். தாவீதும், சாலமோனும் அப்படி செய்ததினால் நன்மை பெற்றார்கள். ஆனால் ரெகேபெயாம் அப்படி செய்யத் தவறியதால் தனது அரசின் பெரும்பகுதியை இழந்தான். பெரிய ஞானியின் மகன்

ஞானமற்றவனாகப் போனான். 1 இராஜ 12:8 'முதியோர் தனக்குச் சொன்ன ஆலோசனையை அவன் நள்ளிவிட்டு, தன்னோடே வளர்ந்து தன் சமூகத்தில் நிற்கிற வாலிபரோடே ஆலோசனை பண்ணி,

முதியோரிடத்தில் ஞானம் விளங்கும். ஆகையால் வயதில் மூத்தவர்களாகிய உங்கள் தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா, குறிப்பாக சபை போதகர் மற்றும் மூப்பர்கள் பேசும்போது, பொறுமையாக கவனித்து கேளுங்கள். பதிலுக்கு பதிலும், இடையிடையிலும் பேசாதிருங்கள். யோபுவின் நண்பனான எலிகூ, விருத்தாப்பியர்கள் பேசும்போது குறுக்க பேசுவதற்கு அஞ்சி, அவர்கள் பேசுவதை கவனித்து கேட்டு. தனக்கு பேச நேரம் தரும் வரை காத்திருந்து பேசினார் என்பதனை, நாம் பைபிளில் படிக்கின்றோம் அல்லவா? யோபு 32:4,6,7 'அவர்கள் தன்னைப்பார்க்கிலும் வயது சென்றவர்களான படியினால், எலிக. யோபின் வார்த்தைகள் டிந்து தீருமட்டும் காத்திருந்தான். ஆதலால் பரகெயேலின் குமாரன் எலிக என்னும் பூசியன் பிரதியுத்தரமாக; நான் இளவயதுள்ளவன். நீங்களோ விருத்தாப்பியர்; ஆகையால் நான் அஞ்சி, என் அபிப்பிராயத்தை உங்களுக்கு ன்பாக வெளிப்படுத்தப் பயந்திருந்தேன். முதியோர் பேசட்டும், வயது சென்றவர்கள் ஞானத்தை அறிவிக்கட்டும் என்றிருந்தேன்.

மேலும், பைபிள் முதியோரை அசட்டை பண்ண கூடாது என்றும், நீதிமொழி 23:22 'உன்னைப் பெற்ற தகப்பனுக்குச் செவிகொடு; உன் தாய் வயது சென்றவளாகும்போது அவளை அசட்டைபண்ணாதே அவர்களுக்கு இடும்பு செய்யக் கூடாது எனவும் எச்சரிக்கின்றது. ஏசாயா 3:5 'ஜனங்கள் ஒடுக்கப்படுவார்கள் ஒருவருக்கொருவரும். அயலானுக்கு அயலானும் விரோதமாயிருப்பார்கள்; வாலிபன் முதிர்வயதுள்ளவனுக்கும் கீழ்மகன் மேன்மகளுக்கும் இடும்பு செய்வான்.

அவர்கள் கர்த்தருக்காக வைராக்கியமாக வாழ்கின்ற மூப்பராக இருக்கும்பட்சத்தில் இரட்டிப்பான மரியாதை கொடுக்கவும் சொல்கின்றது. 1 தீமோ 5:17 ''நன்றாய் விசாரணை செய்கிற மூப்பர்களை, விசேஷமாகத் திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ண வேண்டும்.

அது நாம் அவர்களுக்கு கொடுக்கும் மரியாதை மாத்திரமல்ல, அவர்களுக்கு நாம் கனத்தை செலுத்தவில்லையென்றால், கர்த்தருக்கு பயப்படுகின்ற பயம் நம்மில் இல்லை என்று பொருள். ஏனெனில் தியோரை கனம்பண்ணு என்பதாக மட்டும் சொல்லாமல், உன் தேவனாகிய கர்த்தருக்கு பயப்படு என்றும் சொல்வதனை நாம்

கவனிக்க வேண்டும். ஆகையால், கர்த்தருக்குப் பயப்படுகின்ற நாம் முதியோரை கனம்பண்ணுவதனாலே. கர்த்தரை மகிமைப்படுத்துகின்ற வர்களாக இருப்போம்.

**முதியவர்கள் கர்த்தருக்கு செய்ய வேண்டியது:**

முதியவர்களுக்கு இளம்வயதினர் செய்ய வேண்டியதினை பற்றி பேசுகின்ற பைபிள், முதியவர்கள் கர்த்தருக்கு செய்ய வேண்டியதினை பற்றியும் பேசுகின்றது. பைபிளில் இளம்வயதினரை போல முதியவர்களும் கர்த்தருக்காக பெரிய காரியங்களை சாதித்துள்ளனர் என்பதனை நாம் வேதாகமம் நெடுகிலும் படிக்க ட்டியும். நம் அனைவருக்கும் விசுவாசத்தின் தகப்பனாகிய ஆபிராம் என்ற ஆபிரகாமை, கர்த்தர் அழைத்த போது அவனது வயது எழுபத்தி ஐந்து, அந்த ஆபிராம் கர்த்தருக்கு கீழ்படிந்தான்.

ஆதியாகமம் 12:1–4 'கர்த்தர் ஆபிராமை நோக்கி; நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசிர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார். கர்த்தர் ஆபிராக்குச் சொன்னபடியே அவன் புறப்பட்டுப்போனான்; லோத்தும் அவனோடேகூடப் போனான்; ஆபிராம் ஆரானைவிட்டுப் புறப்பட்டபோது. எழுபத்தைந்து வயதுள்ளவனாயிருந்தான்.

அதேபோல மாபெரும் தீர்க்கதரிசியாக யூதர்களினாலும், நம் அனைவராலும் பெருமையாக பேசப்படுகின்ற மீதியான் தேசத்திலிருந்த மோசேயை, கர்த்தர் அழைத்தபோது, அவருக்கு வயது எண்பது. அப்போ 7:29,30 'இந்த வார்த்தையினிமித்தம் மோசே ஓடிப்போய், மீதியான் தேசத்திலே சஞ்சரித்துக் கொண்டிருந்தான்; அங்கே இருக்கும்போது அவனுக்கு இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள். நாற்பது வருஷம் சென்றபின்பு, சீனாய்மலையின் வனாந்தரத்திலே கர்த்தருடைய தூதனானவர் ட்செடி எரிகிற அக்கினிஜுவாலையிலே அவனுக்குத் தரிசனமானார்.'

அப்போஸ்தலனாகிய பவுல் சொல்கின்றார் நான் பெலனற்றவனாயிருக்கும் போதே பெலள்ளவனாயிருக்கின்றேன். அது எப்படி சாத்தியமாகும். நான் பெலனுள்ளவனாக (இளைஞனாக) இருந்த போது எனது பெலம், எனக்கு பெலமாகயிருந்தது. இப்போது பெலனற்றவனாக மாறினபோதோ, கர்த்தரே எனக்கு பெலமானதால், நான் இன்னும் அதிக பெலனுள்ளவனாக இருக்கின்றேன்

என்கின்றார். 2 கொரிந்தியர் 12:9,10 'அதற்கு அவர்; என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன். அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலள்ளவனாயிருக்கிறேன்; ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்.'

சாராள், தங்களிடம் வந்த இறை தூதுவர்களுக்கு உணவு சமைத்து உற்சாகமாக கொடுத்த போது அவளது வயது எண்பத்தொன்பது, அன்னாளும், சிமியோனும் ஆண்டவரை காண தேவாலயத்தில் காத்திருந்த போது அவர்கள் விருத்தாப்பியராக இருந்தனர். ஆகையால் ஆண்டவருக்காக நாம் எதையாவது அனுதினம் செய்யவும், சாதிக்கவும் வயதோ, உடல் பெலமோ ஒரு பொருட்டே அல்ல, ஏனெனில் எவரொருவரும் தனது பெலத்தினாலும், ஞானத்தினாலும் கர்த்தருடைய தயவின்றி செய்வதில்லை.

நாம் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக வாழ வேண்டும் மற்றும் அநேகரை முன்மாதிரியாக வாழும்படி வழிநடத்தவும் வேண்டும் அது நமது தலையாய கடமையாக இருக்கின்றது (தீத்து 2:2-5). நான் சொன்னா யாரும் கேட்கமாட்டாங்க என மோசேயை போல சொல்லாதிருங்கள். ஏனெனில், நாம் சொல்வது நம்முடைய வார்த்தை அல்ல. கர்த்தருடைய வார்த்தை, அது தன்னுடைய வேலையை செய்யும். வசனம் என்று விதை விதைப்பது மட்டுமே நம் வேலை. விளைய செய்வது கர்த்தருடைய வேலை (1கொரி 3:6) நாம் கர்த்தர் செய்கின்ற வேலையை குறித்து, கவலைப்பட்டுக் கொண்டு, நாம் செய்ய வேண்டியதினை (வசனத்தினை விதைப்பது) செய்யாமல், தவறவிட்டுவிடுகின்றோம். விளையச் செய்கின்ற கர்த்தராலே எல்லாம் ஆகும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் விதைத்துக் கொண்டேயிருப்போம். 1 கொரி 3:7 அப்படியிருக்க, நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை. விளையச் செய்கின்ற தேவனாலே எல்லாமாகும்.

# உனக்காக வேண்டிக்கொண்டேன்.

I Have Prayed for You

**Bro. B. Arjunan**

நமக்காக யாராவது பரிந்துபேசமாட்டார்களா என்று ஏங்கிக்கொண்டிருக்கும் அநேகரைக் குறித்து நாம் கேள்விப்படுகிறோம். உங்களையும் என்னையும் மீட்கும்படியாகவும், நமக்காக பரலோக பிதாவை நோக்கி வேண்டிக்கொள்ளும்படியாகவும் ஆண்டவராகிய இயேசு இவ்வுலகிற்கு கடந்துவந்தார். அவர் அப்போஸ்தலர்களில் ஒருவனாகிய பேதுருவை நோக்கி சொல்லும்போது: பின்னும் கர்த்தர்; சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்: நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்'(லூக். 22:31,32). நம்மில் விசுவாசத்தை துவக்குகிறவரும் அதை டிக்கிறவரும் ஆண்டவர் இயேசுவே. அவரில் நாம் கொண்டுள்ள விசுவாசம் காக்கப்பட நமக்காக வேண்டிக்கொள்ளுகிற ஆண்டவராயிருக்கிறார். சிலவேளைகளில் நாம் விசுவாசத்தில் குறைந்து விடுகிறோம். கர்த்தர் நம்மிடம் எதிர்பார்ப்பது கடுகளவு விசுவாசம். இந்த கடுகளவு விசுவாசத்தை நாம் விட்டுவிடாதிருக்கவேண்டும். ஏனென்றால், குணமாக்கப்பட்ட அநேகரிடம் கர்த்தர் கேட்ட கேள்வி நீ விசுவாசிக்கிறாயா என்று கேட்டார். நமக்கு விசுவாசம் மிகவும் அவசியமான ஒன்றாயிருக்கிறது. அந்த விசுவாசம் வளரும்போது தேவனுடைய மகிமையான காரியங்களை நாம் காணடியும். இந்த விசுவாசத்தை ஒழித்துப்போடவும் அதை குழைத்துபோடவும் பிசாசு முயற்சிப்பான். ஆகையால், அந்த விசுவாசம் நம்மில் ஒழிந்துபோகாதிருக்க நமக்காக வேண்டுதல் செய்கிறார். நாம் ஒருவரையொருவர் விசுவாச விஷயத்தில் உற்சாகப்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம்.

யோபுவை பிசாசு சோதிக்கும்போது: அவனில் இருக்கும் விசுவாசத்தை எடுத்துப்போடும்படியாக வகைதேடினான். சாத்தான் கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக; தோலுக்குப் பதிலாகத் தோலையும், தன் ஜீவனுக்குப் பதிலாகத் தனக்கு உண்டான எல்லாவற்றையும், மனுஷன் கொடுத்துவிடுவான். ஆனாலும், நீர் உம்முடைய கையை நீட்டி, அவன் எலும்பையும் அவன் மாம்சத்தையும் தொடுவீரானால்: அப்பொழுது அவன் உமது முகத்துக்கு எதிரே உம்மைத்

தூஷிக்கானோபாரும் என்றான். (யோபு 2:4,5). பிசாசினால் யோபு மிகவும் வாதிக்கப்பட்டார். அவருடைய தோல் முதலானவைகள் அழுகி நாற்றம் எடுக்கும் அளவுக்கு கொடிய பருக்களால் யோபுவை வாதித்தான். யோபு தன்னுடைய வாயை திறந்து தேவனை தூஷிக்கவேண்டும் என்பதுவே பிசாசின் நோக்கமாயிருந்தது. ஆனால், கர்த்தர் யோபுவை அறிவார். அவனுடைய சோதனைக்காலங்கள் முடிந்தவுடன் கர்த்தர் அவனை இருமடங்காக ஆசீர்வதித்தார். சங்கீதக்காரன் சொல்லும்போது: **தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார். அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக்கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார்** என்று (சங். 145:18,19) வசனத்தின்படி யோபுவை கர்த்தர் இரட்சித்தார். நீங்கள் உங்களுக்கு வரக்கூடிய சோதனை. வேதனைகளிலிருந்து கர்த்தரை நோக்கி கூப்பிடுகிறீர்களா? அல்லது தேவனை தூஷிக்கிறீர்களா? நாம் கர்த்தரை பற்றிக்கொண்டிருப்பதில் உண்மை காணப்படவேண்டும். அநேகர் கர்த்தரைப் பற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களிடம் உண்மையில்லை. நாம் பற்றிக்கொண்டிருக்கும் கர்த்தர் சத்தியபரர். அவர் ஒரு மனிதனைப்போல பொய்பேசுகிறவர் அல்ல. உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.

மேலும், கர்த்தர் தமது மூலமாய் சேருகிறவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறார். இன்றைக்கு மனிதர்களை நம்பி அநேகர் சபைக்கு செல்லுகிறார்கள். ஊழியக்காரர்களை நம்பி சபையில் சேருகிறார்கள் அல்லது உறவினர்களை நம்பி சபையில் சேருகிறார்கள். வேதம் இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் சபையிலே அநுதினமும் சேர்த்துக்கெண்டுவந்தார் என்று (அப்.2:47). மேலும், 'தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை ற்றுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்' (எபி.7:25) என்று சொல்லுகிறது. இன்றைக்கு மனிதன் இரட்சிக்கப்பட ஒரே ஒரு வழி மட்டுமே உள்ளது அது இயேசுகிறிஸ்துவானவர் ஏற்படுத்தின வழி. அந்த வழி ஜீவ வழியாக இருக்கிறது. இவ்வழியே செல்ல அவரில்லாமல் செல்ல முடியாது என்பதுவே உண்மை. ஆகையால், என்னாலே அல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்றார். ஆகையால் அவர் மூலமாக செல்ல முற்படுங்கள்.

மனிதன் ஒவ்வொருநாளும் தான் செய்து வருகிற தவறை திரும்ப திரும்ப செய்கிறான். எந்த ஒரு மனிதனும் அல்லது மனுஷியும்

உங்களை இரட்சிக்க முடியாது. பிதாவாகிய தேவன் உலகத்திலே மனிதனை இரட்சிக்கும்படியாக தெரிந்துகொள்ளப்பட்டவர் ஆண்டவராகிய இயேசு ஒருவரே. இவரே பிதாவின் சித்தத்தை பூரணமாக நிறைவேற்றியவர். இவர் வானத்திலிருந்து வந்த கர்த்தர். பரிசுத்தர், உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கும்படியாக தேவன் தெரிந்துகொண்ட தேவ ஆட்டுக்குட்டி என்றெல்லாம் நாம் வேதத்தில் வாசிக்கிறோம். எனவே, இவர் தமது மூலமாய் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யக்கூடியவராகவும், உயிரோடிருக்கிறவராகவும் இருக்கிறார். இயேசுவைப் பெற்றெடுத்த மரியாள் மரித்துவிட்டாள். ஆனால், அவள் உயிர் பெறவில்லை. இயேசுவானவர் மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். பிதாவாகிய தேவன் அவரை மரித்தோரிலிருந்து உயிர்ப்பித்தார். அவர் உயிரோடிருந்து நமக்காக வேண்டுதல் செய்யக்கூடிய பிரதான ஆசாரியராயிருக்கிறார். மேலும், கர்த்தர் சொல்லுகிறார்: **நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல். இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்** என்கிறார் [யோவா.17:20]. இவ்வசனத்தின்படி உலகம் இருக்கும்வரை ஆண்டவருடைய வசனத்தை கேட்டு விசுவாசிக்கிற யாவருக்காகவும் அவர் பிதாவை நோக்கி வேண்டிக்கொள்ளுகிறவராயிருக்கிறார். இப்படி நமக்காக பிதாவிடம் பரிந்துபேசும் ஆண்டவர் ஒருவர் உயிரோடிருக்கும்போது உங்களுடைய கவலைகளை யெல்லாம் அவர்மீது வைத்துவிடுங்கள். கர்த்தர் உங்களை பாதுகாத்துக்கொள்ளுவார். நீங்கள் இயேசுவோடு நெருங்கி சேர ஒரு வழி இருக்கிறது. அது அவருடைய இரத்தம். இதைக்குறித்து பவுல் சொல்லும்போது; ‘**முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்**’ [எபே.2:13] என்கிறான். இயேசுவின் இரத்தத்தை விசுவாசிக்காத ஒருவர் அவருடைய சகத்திற்கு நெருங்கிசேர முடியாது. இன்றைக்கு பெயர் அளவில் அநேக கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய நிலைமை என்ன? அவர்கள் பாரம்பரியமாக கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருக்கிறார்கள் ஆனால், அவர்களுக்கு கிறிஸ்துவைப்பற்றியும் அவருடைய அன்பைப்பற்றியும் ஒன்றும் தெரியாது. அவர் தங்களுடைய குடும்பத்தின் கடவுள் என்றே சொல்லுவார்கள். இப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துவின் இரத்தத்திற்கு சமீபமாகவரவில்லை மிகவும் தூரமாக இருக்கிறார்கள்.

இயேசுவானவர் இப்பொழுது எங்கே இருக்கிறார் என்ற கேள்வி எழும்புமென்றால்; அவர் ‘....பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சகத்தில் பிரத்தியட்சமாகும்படி

பிரவேசித்திருக்கிறார்' (எபி.9:24). இந்த வசனத்தில் நமக்காக என்ற ஒரு வார்த்தையை நாம் வாசிக்கிறோம். நமக்காக வேண்டிக்கொள்ளும் படியாக தேவனுடைய சகத்தில் பிரவேசித்திருக்கிறார். பூமியிலே நம்முடைய பாவங்களை போக்கும்படியாக தம்முடைய சொந்த இரத்தத்தை சிந்தினார். மேலும், நாம் பாவத்தின்பிடியில், அதாவது பாவத்தின் வஞ்சனையில் சிக்கிக்கொள்ளாதிருக்கவும், மீண்டும் பாவத்தில் வீழ்ந்துபோகக்கூடியவர்களுக்காகவும் பிதாவிடம் பரிந்துபேசுகிறவராயும் இருக்கிறார். எனவே '**அவர் பரலோகத்திற்குப்போய், தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார். என பேதுரு குறிப்பிடுகிறார்** (1பேது.3:22).

அப்போஸ்தலனாகிய யோவான் குறிப்பிடும்போது: '**என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்**' (யோவா.2:1). பாவத்திலிருந்து மீட்டு எடுக்கப்பட்ட ஒருவன் மீண்டும் பாவஞ்செய்யாதபடி தன்னைக்காத்துக் கொள்ளவேண்டும். ஒருவேளை எதிர்பாராதவிதமாகவோ அல்லது பிசாசினால் வாஞ்சிக்கப்பட்டோ அவன் பாவஞ்செய்வானானால் அப்படிப்பட்ட மனிதனுக்காக அவர் பரிந்துபேசுகிறவராயிருக்கிறார். ஒரு முறை மாயவித்தைக்காரனாகிய சீமோன் என்பவன் அப்போஸ்தலர் தங்கள் கைகளை அவர்கள்மேல் வைத்ததினால் பரிசுத்த ஆவி தந்தருளப்படுகிறதை கண்டபோது, அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டுவந்து நான் எவன்மேல் என் கைகளைவைக்கிறேனோ. அவன் பரிசுத்த ஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும் என்றான். இது சீமோன் செய்த மாபெரும் பாவமாக இருந்தது. ஆகையால், பேதுரு அவனை நோக்கி; தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக்கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப் போகக்கடவது. உன் இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையாயிராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமில்லை. ஆகையால் நீ உன் துர்க்குணத்தைவிட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம் என்றான். இப்படி அநேகர் சத்தியத்தை அறிந்த பின்பும் பாவம் செய்யக்கூடும். அவர்களுக்கு ஒருவேளை அவர்களுடைய பாவம் மன்னிக்கப்படலாம். அவர்கள் அறியாது செய்திருக்கலாம். இதற்காக இயேசுவானவர் பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருந்து நமக்காக பரிந்துபேசுகிறார். அவர் அப்படியே பரிந்துபேசிக்கொண்டே இருப்பார் நாம் பாவம்

செய்துகொண்டே இருக்கலாம் என்று அர்த்தமல்ல. பாவத்திற்கு விலகி நாம் நீதியை செய்யத்தக்கதாக கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டுள்ளோம். ஆகையால், நம்முடைய பரிசுத்தத்தை பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு பாதுகாத்துக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்.

**இயேசுவானவர் சர்வலோகத்தின் பாவத்தையும் நிவர்த்திசெய்கிற பலியாயிருக்கிறாரா?**

ஆம். அவர் '**நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலி அவரே: நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல. சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திசெய்கிற பலியாயிருக்கிறார்**' என அப்போஸ்தலனாகிய யோவான் 1யோவா. 2:2–ல் குறிப்பிட்டுள்ளான். இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என இயேசுவுக்கு முன்னோடியாக வந்த யோவான் இயேசுவைப் பார்த்து சொன்னான். ஆம், அவர் சர்வலோகத்தின் பாவத்தை சுமந்துதீர்க்கிறதேவ ஆட்டுக்குட்டியாக வந்தார். அந்தப்படியாக உலகத்தாருடைய பாவத்தை சிலுவையில் சுமந்துதீர்த்தார். அவரை விசுவாசிக்கிற நீங்கள் அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெறுவீர்கள். பலவிதமான பலிகளை செலுத்தி வந்த காலங்கள் கடந்து இப்பொழுது ஒரே பலியாக இயேசுவை தேவன் பாவத்திற்காக ஒப்புக்கொடுத்தார். அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே பாவத்தை சிலுவையில் கொன்று வெற்றிசிறந்தார். இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் விசுவாசித்தால் உங்களுடைய ஆத்துமா பாவத்திலிருந்து காக்கப்படும். இயேசுவின் இரத்தத்தினாலே பாவமறக்கழுவப்படுவீர்கள். இன்றே உங்களை கர்த்தருக்கு ஒப்புக்கொடுங்கள். அவரை விசுவாசித்து பற்றிக்கொள்ளுங்கள். அவர் உங்களுக்காக பரிந்துபேசுகிற பிரதான ஆசாரியராயும், சதா காலம் உயிரோடிருக்கிறவராயும் இருக்கிறார். அவரை பிதாவாகிய தேவன் தெரிந்துகொண்டார். அவர்மூலமாக பிதாவிடம் சேரும் சிலாக்கியத்தையும் நீங்கள் பெறுவீர்கள். நீங்களும், உங்களுடைய குடும்பம் இரட்சிக்கப்பட்ட கர்த்தருடைய வசனத்திற்குச் செவிகொடுங்கள். ஒரு முறை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக தைரியமாய் போராடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

✝

தேவன்

# மாறாத நம் தேவன்

# Our unchanging God

*Ernest S.Underwood*

**நா**ன் கர்த்தர். நான் மாறாதவர் ஆகையால் யாக்கோபின் புத்திரராகிய நீங்கள் நிர்மூலமாகவில்லை (மல்கியா 3:6).



நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் சமுதாயத்தில், அரசியல் ரீதியாக பார்த்தால் ஜனங்களை கவருவதற்காக திட்டங்களிலும் கொள்கைகளிலும் அவ்வப்போது பல்வேறு மாற்றங்களைச் செய்து கொண்டிருப்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இத்தகைய மாறிவிடும் உலகில் மாறாத தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதை அறிந்து கொள்வது நல்லதாகும். தேவன் எந்தெந்த விதங்களில் மாறாதவராய் இருக்கிறார் என்பதை குறித்து நாம் சில காரியங்களைக் கவனிப்போம்.

**தேவன் தம்முடைய பண்புகளில் மாறாதவராய் இருக்கிறார்.**

தேவன் நீதி, வல்லமை நன்மை மற்றும் ஞானத்தில் மாறாதவராய் இருக்கிறார்.

**தேவன் தம்முடைய மனப்பான்மையில் மாறாதவராய் இருக்கிறார்.**

பாவியைக்குறித்தும், பாவத்தைக் குறித்தும், உண்மையுள்ள ஜனங்களை குறித்தும் தேவன் கொண்டிருக்கும் மனப்பான்மையில் மாறுவதே இல்லை.

**தேவன் தம்முடைய எதிர்பார்ப்புகளில் மாறுவதே இல்லை.**

தேவன் மனிதரிடமிருந்து எதிர்பார்க்கும் கீழ்ப்படிதல் அன்பு உண்மைத் தன்மை மற்றும் சேவை போன்றவைகளிலிருந்து மாறுவதில்லை.

**தேவன் பட்சப்பாதமில்லாதவர் என்னும் நிலையிலிருந்து மாறுவதில்லை.**

தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களை இரட்சிக்கிறார். ஆனால், அவர் தமக்குக் கீழ்ப்படிய மறுக்கிறவர்களைத் தண்டிக்கிறார் (2 தெசலோ 1:8–9)

**இந்த மாறாத தேவனை சந்திக்க நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா?**

# A Few great blessings in Christ jesus

## இயேசு கிறிஸ்துவுக்குள் சில மாபெரும் ஆசீர்வாதங்கள்

*Donald R. Fox*

1. **மாபெரும் விசுவாசம் நம்பிக்கை மற்றும் அன்பு :** இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது. இவைகளில் அன்பே பெரியது' (1 கொரிந்தியர் 13:13).

2. **கிறிஸ்துவுக்குள் தேவ பக்திக்குரிய இரகசியம் மகாமேன்மையுள்ளது:** அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகாமேன்மையுள்ளது தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார். ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார். தேவதூதர்களால் காணப்பட்டார். புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார். உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார். மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார் (1தீமோத்தேயு 3:16)




3. **கிறிஸ்துவுக்குள் மாபெரும் இரட்சிப்பு :** முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும் ...(எபிரேயர் 2:3).

4. **மாபெரும் வல்லமை:** தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமையின்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களை கொடுக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்' (எபேசியர் 1:19).

5. **கிறிஸ்துவுக்குள் மகாமேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள்:** இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது (2 பேதுரு 1:4).

# அவர் நம்மை மீட்கும்படி பிறந்தார்

## He was born to rescue us

*Cliff Holmes*

**ப**ரிசுத்த வேதாகமம் மாட்டுத் தொழுவத்தில் தாழ்மையான நிலையில் பிறந்த, தேவதூதர்களால் முன்னறிவிக்கப்பட்ட, எளிய மேய்ப்பர்களால் வாழ்த்தப்பட்ட, ஐசுவரியவான்களான ஞானிகளால் கனப்படுத்தப்பட்ட இயேசுவைப் பற்றி பேசுகிறது. இந்த இயேசு பாவ தண்டனையிலிருந்து மனித இனத்தை மீட்கும்படி பரத்திலிருந்து இறங்கி, இப்பூமியில் மனிதனாக அவதரித்தார். அவர் நமக்காகச் செய்த தியாகங்கள் மனித அறிவுக்கு அப்பாற்பட்டவைகளாகும். நமக்கு நாமே செய்து கொள்ள முடியாதவைகளுக்காக 2000 ஆண்டுகளுக்கு முன்பாக இயேசு இப்பூமிக்கு வந்தார். இயேசு மனிதனானபோது, அவர் மனித இனத்தை மீட்கும்படி வந்ததை புரிந்து கொண்டு அதை அறிவித்தார். இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது. நான் என்ன சொல்லுவேன். பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ, ஆகிலும் இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன்' (யோவான் 12:27) 'அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார் (மாற்கு 10:45). அவருடைய இரட்சிப்பின் அழைப்பை ஏற்றுக் கொள்ளும் எல்லோரையும் மீட்கும்படியாக பிறந்திருக்கிற நம்முடைய அருமை இரட்சகரை நாம் துதிப்போம்.' விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் (மாற்கு 16:16).




# உண்மையான விடுதலை

## True liberation

*Raymond Elliott*

இன்றைய நாட்களில் ஜனங்கள் அதிகமாக அதிகாரப் பிடியிலிருந்தும், ஒழுக்க நெறிகளிடமிருந்தும், இன்னும் பல்வேறுப்பட்ட உறவுகளிடமிருந்தும் விடுதலை பெற விரும்புவதைப் பற்றி அதிகமாக பேசுவதை நம்மால் அதிகமாக கேட்க முடிகிறது. ஜனங்கள் நல்லதுக்கோ அல்லது கெட்டதுக்கோ விடுதலையை விரும்புகிறார்கள். ஜனங்களை கொடுங்கோல் ஆட்சியிலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும், ஒடுக்குதலிலிருந்தும் விடுவிக்க பல்வேறுப் போர்கள் நடந்துள்ளன. ஜனங்களை கட்டுப்படுத்தும் எதிலிருந்தும் அவர்களை விடுவிக்க பல்வேறுப்பட்ட இயக்கங்கள் உருவாகியுள்ளன. ஆவிக்குரிய வட்டத்திலும் கூட, பல அமைப்புகளும், அநேக தனி நபர்களும் என்றும் மாறாத உண்மைகளை அடிப்படையாகக் கொண்ட அதிகாரப் புத்தகமாகிய வேதாகமத்திலிருந்து விடுபட விரும்புகிறார்கள். நாம் வாழும் இவ்வுலகிலும் கூட எல்லா ஒழுக்க நெறிகளையும் ஒதுக்கி வைத்து விட்டு, சுதந்திரமாக வாழ விரும்பும் மக்கள் அநேகர் இருக்கிறார்கள். சூழ்நிலைக்கேற்றவாறு ஒழுக்க நெறிகளை உருவாக்கும் அநேக தத்துவ ஞானங்கள் இவ்வுலகில் பரவிக்கிடக்கின்றன.

இருந்தபோதிலும், இப்போது நாம் மெய்யான விடுதலையைப் பற்றியும், ஜனங்களைப் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்தும், கொடூரமான எஜமானாகிய சாத்தானிடமிருந்தும் மெய்யாகவே விடுவிக்க வல்லவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றியும் பார்க்கப்போகிறோம். இந்த உலகம் இயேசு கிறிஸ்துவுக்குள் இருக்கும் விடுதலை, சந்தோஷம், மற்றும் சமாதானம் போன்றவைகளை ஒருபோதும் அறிந்திருக்கவில்லை. மனிதர்கள் இந்த பூமிக்குரிய இன்பங்களிலும், மனிதர்களுடைய உபதேசங்களிலும் இன்னும் உலக ஞானத்திலும்தான் விடுதலையை தேடியிருக்கிறார்கள். ஆனால், இந்தத்தேடல் வீணானது என்பதை அவர்களே அறிந்திருப்பார்கள். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒரு சந்தர்ப்பத்தில் யூதர்களைப் பார்த்து இவ்விதமாய்ச்சொன்னார் இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே



என் சீஷராயிருப்பீர்கள், சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார். [யோவான் 8:32] ஒருவரை பாவம், துக்கம், சந்தேகம் மற்றும் மரண கட்டுகளிடமிருந்து விடுவிக்கவல்லது சத்தியமாகிய தேவனுடைய வார்த்தை தான். மேலும் இயேசுகிறிஸ்து இவ்விதமாய்ச் சொன்னார் ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள் [யோவான் 8:36].

பவுல் ரோமருக்கு எழுதின நிருபத்தில் இவ்விதமாய் எழுதுகிறார்' முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்' [ரோமர் 6:18]. அதாவது இந்த ரோமாபுரியார் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்தார்கள்[ 1 கொரிந்தியர் 15:1–3]. அவர்கள் உண்மையான மனந்திரும்புதலுக்காக பாவத்திற்கு மரித்தார்கள், ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவோடு அடக்கம் பண்ணப்பட்டார்கள், புதிதான ஜீவன் உள்ளவர்களாக நடந்து கொள்ளும்படிக்கு தண்ணீரிலிருந்து எழுந்தார்கள் [ரோமர் 6:1–6]. இன்றைய நாட்களிலும் கூட ஜனங்கள் பாவத்திலிருந்து விடுதலை பெறஅவ்விதமாய் செய்ய வேண்டியது அவசியமாய் இருக்கிறது. மேலும் அப்போஸ்தலனாகிய பவுல் பாவம் மற்றும் மரணப் பிரமாணங்களிலிருந்து இயேசு கிறிஸ்து மூலமாக விடுதலை பெற அவ்வதைப் பற்றியும் எழுதி இருக்கிறார் 'ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை. கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே'[ரோமர் 8:2]. இவ்வுலகில் உண்மையாகவே விடுதலை ஆக்கப்பட்ட நபர்கள் மனப்பூர்வமாக தங்கள் ஜீவியங்களை இயேசு கிறிஸ்துவினிடத்தில் சமர்ப்பித்து நீதிக்கு அடிமையானவர்கள் தான். ✝

## மாம்சத்தின் கிரியைகள்

மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன: அவை யாவன; விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம். விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்க பேதங்கள். பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே;

இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னது போல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

கலாத்தியர் 5:19-21

# ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்தகம்

## Lamb Of God's Book of Life

**Bro. பென்னி மார்ட்டின்**

**ந**ம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களை இரண்டிரண்டு பேராக ஊழியத்திற்கு அனுப்பும் போது **புறப்பட்டுப் போங்கள் ஆட்டுக் குட்டிகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறது போல இதோ நான் உங்களை அனுப்புகிறேன்** என்றார் [லூக்கா 10:3]. சர்ப்பங்களையும், தேள்களையும் மிதிக்கவும், பிசாசுகளைத் துரத்தவும் சீஷர்களுக்கு இயேசு கிறிஸ்துவினால் அதிகாரங் கொடுக்கப்பட்டது. ஊழியத்தை வெறுப்புடனே அல்ல, வெற்றிகரமாகச் செய்ததன் விளைவாக வெற்றி மேல் வெற்றி அடைந்தனர். ஒரு கட்டத்தில் அவர்கள் நம் கர்த்தரிடத்தில் வந்து, ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது என்று சந்தோஷத்தோடே சொன்னார்கள். அதற்கு நம் ஆண்டவர் ஆவிகள் உங்களுக்கு கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல் உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்று சொன்னார் [லூக்கா 10:17,20].

### 1. நம் நாமங்கள் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது என்பது தேவன் நம் ஒவ்வொருவரையும் நெருக்கமாக அறிந்திருக்கிறார் என்பதைச் சொல்கிறது.

பரபரப்பும், அவசரமும் நிறைந்த இவ்வுலகை உண்டாக்கி, அதை இயக்கிக் கொண்டிருக்கிற தேவன் நம் ஒவ்வொருவரையும் பெயர் பெயராக அறிந்திருக்கிறார் என்னும் உண்மை உவகையின் உச்சிக்கே நம்மைக் கொண்டு செல்கிறது. தேவதாசனாகிய மோசேயின் மீது தாம் கொண்டிருந்த அதீத அக்கறையை வலியுறுத்து வதற்காக கர்த்தர் மோசேயை நோக்கி உன்னைப் பேர் சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேன் என்றார் [யாத்திராகமம் 33:17]. பரிசுத்த தேவனுடைய பாதுகாப்பும், பராமரிப்பும் பரிபூரணமாக நமக்கு உண்டு என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து யோவான் 10 ஆம் அதிகாரத்தில் தம்மை நல்ல மேய்ப்பராக அடையாளப்படுத்தி, ஆடுகளாகிய நம்மை பேர்சொல்லி அழைக்கும் போது அவருடனான நெருக்கமும் நெடுநாள் தொடருகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பி பட்டணத்தியிருந்த தன் உடன் ஊழியர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது அவர்களுடைய நாமங்கள் ஜீவபுத்தகத்தில்

இருக்கிறது என்று குறிப்பிடுகிறார். [பிலிப்பியர் 4;3] நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சர்தை சபைக்கு எழுதிய கடிதத்தில் ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ அவனுக்கு வெண் வஸ்திரம் தரிப்பிக்கப்படும். ஜீவபுத்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன் என்று நிச்சயப்படுத்துகிறார் [வெளிபடுத்தின விசேஷம் 3:5].

**2. தேவன் நம்மைப் பேர்பேராக அறிந்திருக்கிறார் எனும் உண்மை அது ஒருவர் தனிப்பட்ட ரீதியில் பெற்றுக் கொள்ளும் ஒன்று என்பதை நினைவுப்படுத்துகிறது.**

ஜீவ புத்தகம் உலகிலுள்ள நாடுகளின் பெயர்களை பரிசீலித்து பட்டியலிடவில்லை. மாறாக, தனிப்பட்ட நபர்களின் பெயர்களை தவிர்க்காமல் பட்டியலிடுகிறது. இரட்சிப்பு என்பது ஓர் இரவில் இரவலாக பெற்றுக் கொள்ளும் இயந்திரப் பொருளல்ல. ஒருவருடைய தனிப்பட்ட விசுவாசத்துடன் கீழ்ப்படிதலையும் இணைந்து பல சிரமங்களுடன் நாம் பெற்றுக் கொள்ளும் ஒன்றாகும். இரட்சிப்பு தேவன் நமக்கு இலவசமாகத் தரும் ஈவு என்றாலும் கூட தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய நாம் பிரயாசப்பட வேண்டியதாயிருக்கிறது. ஒருவர் தன் குடும்பப் பெயர் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கிறதினாலோ, சபையில் தான் அங்கம் வகிப்பதினாலோ, பரலோகம் போக முடியாது, தேவனோடு தனிப்பட்ட முறையில் நெருக்கமான உறவை கொண்டு அந்த உறவில் விரிசல் ஏற்படாதபடி முறை தவறாத வாழ்க்கை வாழ்வதன் மூலமாகத்தான் இரட்சிப்பை பெற்றுக்கொள்ள முடியும். இந்த ஜீவ புத்தகத்தில் பெயர்கள் தோராயமாக எழுதப்படுவதில்லை, மிகத்துல்லியமாக எழுதப்படுகிறது. எந்தப் பெயர்களை எழுத வேண்டும் என்பதை தேவன் அறிவார். கர்த்தர் தம்முடையவர்களை அறிவார் [11 தீமோத்தேயு 2:19] இப்புத்தகத்தில் பிழை ஏற்படுவதற்கு வாய்ப்பே இல்லை, தகுதியில்லாதவர்களுடைய பெயர்கள் ஒரு போதும் இடம் பெறுவதில்லை. அதே நேரத்தில் இடம் பெற வேண்டிய பேர்கள் ஒரு போதும் விடுபடுவதுமில்லை.

**3. புதிய பிறப்பின் போது ஜீவ புஸ்தகத்தில் பெயர்கள் பதிவு செய்யப்படுகின்றன.**

இவ்வுலகில் ஏழை, பணக்காரர், படித்தவர்கள் படிக்காதவர்கள் என ஏராளமான ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. ஆனால், வேதாகமத்தின் அடிப்படையில் இவ்வுலகில் இரண்டு வகையான மக்கள் தான் இருக்கிறார்கள். மறுபடியும் பிறந்தவர்கள், மறுபடியும் பிறக்காதவர்கள். வேறுவிதமாகச் சொன்னால், பரலோகத்தில் ஜீவ புஸ்தகத்தில் பெயர் எழுதப்பட்டவர்கள், எழுதப்படாதவர்கள். இதில் நாம் எந்த வகை

என்பதை நாம் தான் முடிவு செய்ய வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்த வருடைய வாழ்க்கையிலும் மறுபிறப்பு அல்லது புதிய பிறப்பு என்பது மிகவும் முக்கியமானது. மார்க்கப் பிரிவினை கூட்டத்தார், மத்தியில் மறுபிறப்பு என்னும் வார்த்தை மிகவும் பிரசித்த மாயிருக்கிறது. அவர் களுடைய பார்வையில் மறுபிறப்பு என்பது அந்நியபாஷைகளில் பேசுவது, அற்புத அடையாளங்களைச் செய்வது போன்றவைகளைக் குறிக்கும். இதற்கு வேதாகம ஆதாரம் ஒன்றுமில்லை. இருந்த போதிலும், அவர்கள் நம்மைப்பார்த்து மறுபடியும் பிறந்துவிட்டீர்களா என்று கேள்வி கேட்கும் போது நாம் இல்லை என்று பதிலளித்தால் அவர்கள் நம்மை வேற்று கிரகவாசிகளைப்போல் வேடிக்கைப் பார்ப்பார் கள். மறுபிறப்பைப் பற்றி நிக்கொதேமுக்கு நம் ஆண்டவர் ஆழமாக விளக்கிவிட்டார். ஒருவன் ஜலத்தினாலும், ஆவியானாலும் பிறவா விட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய் யாகவே மெய்யாகவே உனக்குச்சொல்லுகிறேன் (யோவான் 3:5). அதாவது, ஒருவர் தண்ணீர் ஞானஸ்நானத்தினாலும், ஆவியானவர் வெளிப்படுத்தியிருக்கிற ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழி வில்லாத வித்தினாலேயும் மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுகிறார் (Iபேதுரு1:23).

பரலோகத்தில் உள்ள ஜீவ புத்தகத்தில் நம் பெயர்கள் எழுதப்பட்டி ருக்கிறதா இல்லையா என்பது இப்பூமியில் தேவனால் நமக்காகத் தரப் பட்டிருக்கிற புத்தகமாகிய வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கி றவைகளை நாம் எப்படி விசுவாசிக்கிறோம், எப்படி கைக்கொள்கி றோம் என்பதைப் பொறுத்தே அமையும். நாம் தேவனுடைய வார்த்தை களைக் கேட்டு விசுவாசித்து, பழைய பாவங்களிலிருந்து மனந்தி ரும்பி, இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கை யிட்டு, தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறும் போது பரலோகத்தி லுள்ள ஜீவ புத்தகத்தில் நம் பெயர் எழுதப்படும். ஒரு கிறித்தவருடைய ஜீவியத்தில் ஜீவ புதத்தகத்தில் பெயர் எழுதப்படுவது மிகவும் அவசியமா னது, அதேநேரம் அந்தப் பெயரை தக்க வைத்துக் கொள்வது அதை விட அவசியமானது. ✝

## அவசியம்

**வெற்றி வந்தால் பணிவு அவசியம்**
**தோல்வி வந்தால் பொறுமை அவசியம்**
**எதிர்ப்பு வந்தால் துணிவு அவசியம்**
**எது வந்தாலும் தேவ நம்பிக்கை மிகஅவசியம்.**

செயலில் கிறிஸ்தவம்

# ஒன்றுக்கும் கவலைப்படாமல்

## Be Anxious in Nothing

*Wayne Barrier*

**அ**ன்றாட வாழ்க்கை என்பது கவலை மற்றும் பதற்றத்தை ஏற்படுத்துகின்ற சூழ்நிலைகளால் நிரப்பப்பட்டதுதான். நம் தனிப்பட்ட ஆரோக்கியம் தொடங்கி பொருளாதாரப் பாதுகாப்பு, தேசியப் பாதுகாப்பு, உலகளாவிய பாதுகாப்பின்மை போன்ற பிரச்சனைகளோடு அன்றாடம் இடைபடுகிறோம். ஒரு கிறிஸ்தவன் எப்படி எல்லா விதமான நெருக்கடிகள், தடைகள், சோதனைகள் மற்றும் நிச்சயமின்மையை கையாள வேண்டும்? அதற்கு வேதாகமப் போதனையின் அடிப்படையில் நான்கு காரியங்கள் மனதுக்கு வருகின்றன.




**முதலாவது நம் ஆசிர்வாதங்களை எண்ணிப்பார்க்க கற்றுக் கொள்ள வேண்டும்.** கடினமான காலகட்டங்களிலும் கூட, நாம் ஆசீர்வதிக்கப்பட்ட விதங்களை அடையாளம் காண முடியும். நமக்கு பொருளாதார பிரச்சினைகள் இருக்கலாம். ஆனால், நல்ல ஆரோக்கியத்தையும், சுதந்திரத்தையும், எண்ணற்றவர்களின் நட்பையும் அன்பையும் அனுபவிப்போம். இவைகள் எல்லாம் ஆசிர்வாதங்கள்தானே! நாம் கிறிஸ்துவுக்குள் சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் அனுபவிக்கிறோம் (எபேசியர் 1:3).

**இரண்டாவது ஜெபிக்க வேண்டும்.** (பிலிப்பியர் 4:4-7) வசனங்களில் பவுல் கூறுகிற சில ஆலோசனைகளை கவனியுங்கள் "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன் உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக கர்த்தர் சமீபமாயிருக்கிறார். நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்" (பிலிப்பியர் 4:4-7), நாம் ஞானத்திற்காக ஜெபிக்க வேண்டும் (யாக்கோபு1:5); உள் வலிமைக்காக ஜெபிக்க வேண்டும் (எபேசியர் 3:14-16); அன்றாடத் தேவைகள், மன்னிப்பு வழிநடத்துதல் மற்றும் எல்லா தீங்குகளிடமிருந்தும் விலக்கிகாக்கப்படும்படியாகவும் நாம் ஜெபிக்க வேண்டும் (மத்தேயு 6:9-12).

**மூன்றாவது, தம்முடைய பிள்ளைகள் மீதான தேவனுடைய அன்பு மனிதன் எதிர் கொள்ளும் எந்த ஒரு சக்தியையும் விட பெரிதானது** (ரோமர் 8:28-39) வசனங்கள் தேவன் எல்லாவற்றையும் தம்முடைய கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு, எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்று நாம் அறிந்திருக்கிறோம். தேவன் நம் பட்சத்தில் இருந்தால் நமக்கு விரோதமாய் இருப்பவன் யார்?கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே (ரோமர் 8:36,37).

கடைசியாக, மற்றவர்களுக்காக ஏதோ ஒன்றை செய்யுங்கள். (யாக்கோபு 2:14-15, 17) வசனங்கள் இவ்விதமாய் சொல்கின்றன "என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும். கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா? ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? அப்படியே விசுவாசம் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும் (யாக்கோபு 2:14-17). வியாதியஸ்தர்களுக்கு, தனிமையில் இருப்பவர்களுக்கு,

ஊனமுற்றவர்களுக்கு உதவுங்கள். நாம் மிகுந்த யோசனையுடனும், ஞானமுடமுனும் காரியங்களைச் செய்ய வேண்டும்.

நாம் அன்றாட வாழ்க்கையின் கஷ்டங்களிலிருந்து ஒருபோதும் தப்பவே முடியாது. நாம் ஒன்றிலே அவைகள் நம்மை அழிக்க அனுமதிக்க முடியும் அல்லது நாம் அவைகளை வேதாகம கண்ணோட்டத்தில் அணுகி, அவைகளை மேற்கொள்ளவும் முடியும். நேர்மறையான எண்ணம் கொண்ட விசுவாசத்தால் நிறைந்த தேவதாசர்கள் தீய சக்திகளின் எதிர்மறையான விளைவுகளை எதிர்கொள்ள அவசியப்படுகிறார்கள்.

பவுல் ரோமருக்கு எழுதின நிருபத்தில் இவ்விதமாய் எழுதுகிறார் "முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள் (ரோமர் 6:18). அதாவது இந்த ரோமாபுரியார் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்தார்கள்( 1 கொரிந்தியர் 15:1-3). அவர்கள் உண்மையான மனந்திரும்புதலுக்காக பாவத்திற்கு மரித்தார்கள். ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவோடு அடக்கம் பண்ணப்பட்டார்கள். புதிதான ஜீவனுள்ளவர்களாக நடந்து கொள்ளும்படிக்கு தண்ணீரிலிருந்து எழுந்தார்கள் (ரோமர் 6:1-6). இன்றைய நாட்களிலும்கூட ஜனங்கள் பாவத்திலிருந்து விடுதலை பெற இவ்விதமாய் செய்ய வேண்டியது அவசியமாய் இருக்கிறது. மேலும், அப்போஸ்தலனாகிய பவுல் பாவம் மற்றும் மரணப் பிரமாணங்களிலிருந்து இயேசு கிறிஸ்து மூலமாக விடுதலை பெறுவதைப் பற்றியும் எழுதி யிருக்கிறார். "ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்ட வர்களாயிருந்து மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை. கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே" (ரோமர் 8:2). இவ்வுலகில் உண்மையாகவே விடுதலையாக்கப்பட்ட நபர்கள் மனப்பூர்வமாக தங்கள் ஜீவியங்களை இயேசு கிறிஸ்துவினிடத்தில் சமர்ப்பித்து, நீதிக்கு அடிமையானவர்கள் தான். ✝

---

## மனிதனுடைய அளவுகோல்

- ☆ உலகப்பிரகாரமாக ஐசுவரியமுள்ள சபை சிறந்த சபை
- ☆ அழகான, விலையுயர்ந்த பொருட்களைக் கொண்ட கூடுமிடம் சிறந்த சபை
- ☆ அதிகமான அங்கத்தினர்களை உள்ளடக்கிய சபை சிறந்த சபை

செயலில் கிறிஸ்தவம்

# கிருபையிலும் அறிவிலும் வளர்தல்

# Growing in Grace and Knowledge

*Marilyn LaStrape*

**நா**ம் கடந்த வருடத்தை திரும்பிப் பார்க்கும் போதும் நம் கிறிஸ்தவ வாழ்க்கையின் எல்லா வருடங்களையும் திரும்பி பார்க்கும் போதும், கிருபையிலும் அறிவிலும் நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சியை நாம் எப்படி மதிப்பிட முடியும்? அதற்குரிய வளர்ச்சி தினம் ஏற்பட்டிருக்கிறதா? அல்லது வாரத்திற்கு ஒருமுறை மாதத்திற்கு ஒருமுறை ஏற்பட்டிருக்கிறதா ?

நாம் அப்போஸ்தலனாகிய பேதுருவின் வாழ்க்கையைப் பார்க்கும்போது அவருடைய வளர்ச்சி மாதிரியைப் பற்றிய ஒரு தெளிவு நமக்கு கிடைக்கும் பேதுருவின் வாழ்க்கையில் நடந்த சில சம்பவங்களை நாம் திரும்பிப் பார்க்கும் போது, அவருடைய ஆவிக்குரிய வளர்ச்சி நமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தும். நம் ஆண்டவரோடு பேதுரு நடந்த அந்த ஆரம்ப நாட்களை நாம் எண்ணிப் பார்த்தால், இயேசு யூதர்களுடைய வற்புறுத்தலினால் ரோமர்கள் தம்மை கொலை செய்வார்கள் என்று சொன்னபோது பேதுரு இயேசுவை கடிந்து கொண்டதாக நாம் வாசிக்கிறோம். ஆனால், அதே நேரத்தில் பேதுரு இயேசுவை மறுதலித்து அவரை சபிக்கவும் சத்தியம் பண்ணவும் தொடங்கின போது நாம் அதிர்ச்சியடைகிறோம். இயேசு பேதுருவை திரும்பிப் பார்த்தபோது பேதுருவோடு சேர்ந்து நம்முடைய இருதயமும் வேதனை அடைகிறது. அதன் பிறகு பேதுரு வெளியே போய் மனம் கசந்து அழுதது ஒரு உணர்ச்சிகரமான சம்பவமாகும். இருந்தபோதிலும், பேதுரு உறுதியோடு அந்த பெந்தெகொஸ்தே நாளிலே தைரியமாய் நின்று சுவிசேஷத்தை பிரசங்கித்தார். அதன் விளைவாக அந்த நாளிலேயே 3000 பேர் இரட்சிக்கப்பட்டு சபையிலே கர்த்தரால் சேர்க்கப்பட்டார்கள். சில நாட்களுக்குப் பிறகு பேதுரு கொர்நேலியு மற்றும் அவனுடைய வீட்டார் அனைவருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார் அதன் விளைவாக புறஜாதிகளில் முதல் முறையாக அந்த வீட்டார் கிறிஸ்தவர்களானார்கள். பேதுரு மறுபடியும் ஒரு தரம் கலாத்திய நாட்டு சகோதரர்களோடு மாயமாலத்தை வெளிப்படுத்தின போது தவறு செய்தார், பவுல் அதை கடுமையாக கடிந்து கொண்டார் என்று சொல்லி நாம் வாசிக்கிறோம். பேதுரு1 மற்றும் 2 நிருபங்களை எழுதினபோது அவர் கர்த்தருடைய சபையிலே மூப்பராக இருந்தார். அதனால், அவர் கிறிஸ்தவர்கள் வைராக்கியத்தோடும் வல்லமையோடும் பாடுகளை சகிக்க வேண்டும் என்று அவர்களை உற்சாகப்படுத்தினார். அது மாத்திரமல்ல

கிறிஸ்தவர்கள் கள்ளபோதகர்களை குறித்து அறிந்திருக்க வேண்டு மென்றும் எச்சரித்தார்.

கள்ளப்போதகர்கள், கிருபை மற்றும் அறிவிலே வளர்ச்சி இவைகளை மனதில் கொண்டவராய் பேதுரு தன்னுடைய இரண்டாம் நிருபத்தில் இங்கே குறிப்பிடுகிறார். எல்லா நிருபங்களிலும் இவைகளைக் குறித்து பவுல் எழுதினதாக பேதுரு பேசியிருக்கிறான். அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது. கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் மற்ற வேதவாக்கியங்களைப் புரட்டுகிறதுபோலத் தங்களுக்குக் கேடு வரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள் [2 பேதுரு 3:16]. மேலும், அடுத்த இரண்டு வசனங்களையும் கவனியுங்கள். ஆதலால், பிரியமானவர்களே, இவைகளை முன்னமே நீங்கள் அறிந்திருக்கிறபடியால், அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியிலிருந்து விலகி விழுந்துபோகதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து. நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென். [2பேதுரு 3:17,18].

The Gospel advocate என்னும் ஆங்கில கிறிஸ்தவ பத்திரிகையில் ஒரு கட்டுரையின் பெயர் சபையும் காயப்பட்டவர்களும் என்று வைக்கப்பட்டிருந்தது. அக்கட்டுரையின் ஆசிரியர் Timothy Matheny என்பவராவார். அதன் உபதலைப்புகளில் ஒன்று காயப்பட்டவர்களுக்கு உதவ ஒவ்வொருவரிடத்திலும் போதுமான ஆயுதம் உள்ளது. ஆனால், அதை பயன்படுத்துவதற்கு அவர்களுக்கு விருப்பம் இருக்க வேண்டும் என்பதாயிருந்தது.

நாம் வாழும் உலகம் ஒரு குறிப்பிட்ட துறையில் நிபுணத்துவம் அடைந்து பல சான்றிதழ்களை கொண்டிருப்பதை பெருமையாக நினைக்கிறது. நான் என்னை ஒரு மிகச் சிறந்த இருதய அறுவை சிகிச்சை நிபுணராக காட்டுவதற்கு முயற்சிக்க வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால், மருத்துவரீதியான அந்த கடினமான பாடங்களை நான் படிக்கவில்லை. ஆனால், தேவனுடைய வார்த்தையை கையாளுவதில் நாம் நிபுணத்துவம் அடையவில்லை என்றால் வேத வார்த்தைகளை படிப்பதற்கோ, தியானிப்பதற்கோ அதிக நேரம் ஒதுக்கவில்லை என்றும் அதற்காக நாம் கடினமான பயிற்சிகளை எடுக்க வில்லை என்றும் தான் பொருள்படும். எபிரெய ஆசிரியர் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலின் பேரில் அந்த நிருபம் யாருக்கு எழுதப்பட்ட தோ அவர்கள் வேத வாக்கியங்களில் தேர்ச்சி பெற்று காலத்தைப் பார்த்தால் அவர்கள் போதகர்களாயிருக்க வேண்டும் என்று கண்டிக்கிறார் [எபிரெயர் 5:11-14] மேற்சொல்லப்பட்ட வசனப் பகுதியிலும் சரி, எபிரெயர்

புத்தகத்தின் மற்றெந்த வசனப் பகுதியிலும் சரி ஆவிக்குரிய வளர்ச்சி அல்லது வேத வசனங்களில் தேர்ச்சி என்பது ஒரு குறிப்பிட்ட சாராருக்கு மாத்திரம்தான் பொருந்தும் என்று மறைமுகமாக கூட சொல்லப்பட வில்லை.

மேற்சொல்லப்பட்ட காரியங்களில் என்னை அதிகமாக கவர்ந்தது இந்த இயற்கையான ஆவிக்குரிய வளர்ச்சி என்பது ஏதோ ஒரு குறிப்பிட்ட சாராருக்கு மாத்திரமல்ல எல்லோருக்கும் பொருந்தக் கூடிய ஒன்றாக இருக்கிறது என்பதுதான். தேவன் தம்முடைய குமாரரும் குமாரத்திகளும் கிருபையிலும் அறிவிலும் தொடர்ச்சியாக வளர வேண்டும் அந்த வளர்ச்சி மரணம் வரை இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.

எனவே, நாம் எப்படி இருக்கிறோம்? நாம் வளர்ந்து கொண்டிருக்கிறே ாமா? மற்றவர்கள் நம்முடைய வாழ்க்கையை பார்க்கும்போது அது அவர்களுக்கு வெளிப்படுகிறதா? தேவன் நமக்கு அளவில்லாமல் கிருபையை அளித்திருக்கிறார். ஆனால், ஒரு கிறிஸ்தவராக வேதாகம அறிவில் நாம் அடைந்தாயிற்று என்னும் ஒரு கட்டம் எப்பொழுதுமே ஏற்படுவதில்லை (பிலிப்பியர் 3:12), இன்றும் வேதாகமம் அதைச் சார்ந்த புத்தகங்களும் நம்முடைய விருப்பமான புத்தகங்களாக இருக்கின்றனவா? இதற்கான விடை தேவனுக்கும் தனிப்பட்ட நபர்களாக நமக்கும்தான் தெரியும். ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள் கேட்கிறவனும் வா என்பானாக, தாகமாயிருக்கிறவன் வரக்கடவன், விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன் (வெளி 22:17).

### ஏன் அநேகர் இன்னும் இரட்சிக்கப்படவில்லை?

1. தேவனுடைய வார்த்தையை சாத்தான் தங்கள் இருதயங்களிலிருந்து பறித்துக் கொள்ள அனுமதிப்பதால் (மத்தேயு 13 : 19)
2. தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்புவதால் (யோவான் 16 : 43)
3. கர்த்தரை விட குடும்பத்தை அதிகமாக நேசிப்பதால் (மத்தேயு 10 : 37)
4. இரட்சிப்பு பற்றி கவலையில்லாமல் இருப்பதால் (எபிரெயர் 2 : 4).

# தெரிந்து கொள்ளுதல், வழி மற்றும் பலன்.

# A Choice. A path and a Reward

*Aaron cozort*

**தெரிந்து கொள்ளப்பட ஒன்று** (யோசுவா 24:14-15) ஆகையால் நீங்கள் கர்த்தருக்குப் பயந்து, அவரை உத்தமமும் உண்மையுமாகச் சேவித்து. உங்கள் பிதாக்கள் நதிக்கு அப்புறத்திலும், எகிப்திலும் சேவித்த தேவர்களை அகற்றிவிட்டு, கர்த்தரைச் சேவியுங்கள் கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள் நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம்பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம் என்றான் .

இங்கே யோசுவா ஜனங்கள் யாரை சேவிக்கப் போகிறார்கள் என்பதைப் பற்றி தெரிந்து கொள்ளுதலுக்கான அழைப்பை விடுக்கிறார் நீங்கள் தேவனுக்கு உண்மையாய் இருப்பீர்களா அல்லது இருக்க மாட்டீர்களா? அல்லது எகிப்தின் தெய்வங்களிடத்திற்கு மறுபடியும் சென்று விடுவீர்களா? அல்லது கர்த்தரையே சேவிப்பீர்களா? போன்ற கேள்விகளை எல்லாம் ஜனங்களிடம் கேட்டு அவர்களைத் தெரிந்து கொள்ள ஊக்கப்படுத்துகிறார். நம்முடைய ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் நாம் ஏதோ ஒன்றை தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாய் இருக்கிறது. நாம் கர்த்தரை சேவிக்கவும் முடியும் அல்லது சாத்தானை சேவிக்கவும் முடியும் நம்மால் நீதியை தெரிந்து கொள்ளவும் முடியும் அல்லது அநீதியைத் தெரிந்து கொள்ளவும் முடியும். சங்கீதம் 106:3 இவ்விதமாய் சொல்கிறது **நியாயத்தைக் கைக்கொள்ளுகிறவர்களும், எக்காலத்திலும் நீதியைச்செய்கிறவர்களும் பாக்கியவான்கள் .**

நீதியை சேவித்துக் கொண்டு, நீதியாய் இருக்க தீர்மானிப்பது என்பது ஒருமுறை எடுக்கும் தீர்மானம் அல்ல மாறாக அது ஒரு வழியாகவும், ஒரு பயணமாகவும், ஒரு வாழ்க்கை முறையாகவும் இருக்கிறது.

**பின்பற்ற ஒரு வழி** (சங்கீதம் 1:1,2,5) துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து. இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார். துன்மார்க்கரின் வழியோ அழியும்.

ஒவ்வொரு நாளும் நாம் எழுந்து சூரிய உதயத்தைப் பார்க்கும் போது நம்முடைய வழியை நாம் தீர்மானித்து விடுகிறோம். நாம் பரலோக பாதையில் நடந்து கொண்டிருக்கிறோமா அல்லது நரகத்திற்கான பாதையில் நடந்து கொண்டிருக்கிறோமா ? நம்மால் நீதியின் பாதையையும் தெரிந்துகொள்ள முடியும், அல்லது சுலபமான பாதையையும் தெரிந்து கொள்ளமுடியும். நாம் ஜீவனுக்குப் போகிற நெருக்கமான வழியில் பயணிக்கிறோமா அல்லது கேட்டுக்குப் போகிற விசாலமான வழியில் பயணிக்கிறோமா என்பதை நாம் இன்றே தீர்மானித்துக் கொள்ள வேண்டும். இந்தத் தீர்மானத்தை நாம் தான் எடுக்க வேண்டும் நமக்காக எவரும் எடுக்க முடியாது. நமக்கு தெரிந்து கொள்ளும் வல்லமை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு குழந்தை முதல் படி எடுத்து வைப்பதை பார்த்து ரசிக்கும் ஒரு அப்பாவைப் போல தேவன் நம்மையும் பரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருக்கிறார். நம் தடுக்கி விழுந்தாலும் கூட மறுபடியும் எழுந்து சரியாக நடப்போம் என்று அவர் நம் மீது நம்பிக்கை கொண்டிருக்கிறார் ஒவ்வொரு நாளும் நாம் பாதையில் தொடர்ந்து முன்னேற முயற்சிக்க வேண்டும். **நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும். அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார்** [சங்கீதம் 37:23].

நித்தியத்திற்கான பலன் [சங்கீதம் 37:18] **உத்தமர்களின் நாட்களைக் கர்த்தர் அறிந்திருக்கிறார். அவர்கள் சுதந்தரம் என்றென்றைக்கும் இருக்கும்** [சங்கீதம் 37:18]. நீதிமான்களுக்காக ஒரு சுதந்திரம் காத்துக் கொண்டிருக்கிறது. தேவனையும் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் பிரசன்னமாகுதலையும் விரும்பும் எல்லா நீதிமான்களுக்கும் பரலோகத்தில் அந்த நித்திய வாசஸ்தலத்தை தேவன் கொடுக்கிறார். ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன் [யோவான் 17:3] என்று இயேசு கிறிஸ்து சொன்னார். நல்ல போராட்டத்தை போராடுகிறவர் களுக்கும் நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்ளுகிறவர்களுக்கும் பரலோகத்தில் பலன் காத்துக் கொண்டிருக்கிறது [2 தீமோத்தேயு 4:7,8].

நாம் தெரிந்து கொள்ளும்போது நம்முடைய வழியை தீர்மானித்து, பலனை நாடுகிறவர்களாக இருக்க வேண்டும். நாம் பிதாவின் வழிநடத்துதலின்படி நடந்து, நீதிமான்களின் ஆலோசனையை நாடி வேதத்தின் வெளிச்சத்தில் பரலோகத்தை நோக்கி பயணிக்க வேண்டும். ✝

**நாமே பொறுப்பு**

**நாம் என்ன செய்கிறோமோ அதற்கு நாமே பொறுப்பாயிருப்பதால், இடறலுண்டாக்கு கிறவனுக்கு ஐயோ! என்று தேவன் சொல்லுகிறார். மற்றவர்களுக்கு நாம் இடறலாயிராதபடிக்கு நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.**

# தேவன் பரிணாம வளர்ச்சியை பயன்படுத்தினாரா?

# Did God use Evolution?

*Rodney Nulph*

தேவன் இவ்வுலகத்தை சிருஷ்டிக்க பரிணாம வளர்ச்சியை பயன்படுத்தினாரா? சமீபத்தில், கடவுள் நம்பிக்கை இல்லாத ஒருவரிடத்தில் உரையாடிக்கொண்டிருக்கும் போது இக்கேள்வி எழுப்பப்பட்டது. தேவன் இவ்வுலகத்தை உண்டாக்க பரிணாம வளர்ச்சியை பயன்படுத்தினாரா என்னும் கேள்வி ஒரு பொருட்டாக இருக்கிறதா? வேதாகமம் உலகத்தையும் அதில் உள்ளவைகளையும் உண்டாக்க பரிணாம வளர்ச்சியை பயன்படுத்தப்படவில்லை என்று தெளிவாக போதிக்கிறது. வேதாகமம் உண்மையானால், பரிணாம வளர்ச்சி பொய்யாகும். வேதாகமம் உண்மையாயிருக்கிறது. எனவே, பரிணாம வளர்ச்சி பொய்யாகும். இந்த ஒட்டு மொத்த கட்டுரையும் தேவனுடைய சிருஷ்டிப்பின் திட்டத்தில், பரிணாமம் பயன்படுத்தப்படவில்லை என்பதை ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கும். தேவனுடைய வார்த்தை சிருஷ்டிப்புச் சம்மந்தமாக தெளிவான தகவல்களைத் தருகிறது.

**சிருஷ்டிப்பின் போது யாரெல்லாம் இருந்தார்கள்?**

தேவன் இவ்வுலகத்தை உண்டாக்க கோடிக்கணக்கான ஆண்டுகளை எடுத்துக் கொள்ளவில்லை என்று வேதாகமம் தெள்ளத்தெளிவாகச் சொல்கிறது. ஆனால், பரிணாம வளர்ச்சிக் கொள்கை இவ்வுலகம் கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாக உருவாகி, படிப்படியாக பரிணாம வளர்ச்சி அடைந்தது என்று சொல்லுகிறது. மேலும், இவ்வுலகம் உண்டாக்கப்பட்டபோது. பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் இருந்தார்கள் என்று வேதாகமம் தெளிவாகச் சொல்கிறது (ஆதியாகமம் 1:26; ரோமர் 1:20) ஆதியாகமம்1.1 ல் தேவன் என்பதற்கு **ஏலோஹிம்** என்னும் எபிரேயப்பதம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இப்பதம் ஆண்பாலில் சொல்லப்பட்டது மாத்திரமில்லாமல், இது பன்மையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. சுவாரஸ்யமாக, ஏலோஹிம் என்று பன்மையில் பயன்படுத்தப்பட்டிருக்கும் இப்பதம்தான் பழைய ஏற்பாட்டில் சுமார் 2000 முறைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. பிதாவாகிய தேவன் இவ்வுலகத்தை உண்டாக்கினார் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு நினைப்பூட்டினார் (1 கொரிந்தியர் 8:6). அப்போஸ்தலனாகிய யோவான் தன்னுடைய வாசகர்களுக்கு தேவனுடைய குமாரனாகிய இயேசு உலகத்தை உண்டாக்கினார் என்று

நினைப்பூட்டினார் யோவான்1:3; கொலோசெயர் 1:16; எபிரேயர்1:1-2; எபேசியர்3:9; பக்தனாகிய யோபு இவ்வுலகத்தை உண்டாக்குவதற்கு பரிசுத்த ஆவியானவர் ஒரு கருவியாக இருந்தார் என்று சாட்சி கொடுத்தார் [யோபு 26:13 ; 33:4].

## சிருஷ்டிப்பின் செயல்முறை

இவ்வுலகம் உண்டாக்கப்பட்டது சம்மந்தமான செயல்முறையில் வேதாகமம் ஒருபோதும் பரிணாம வளர்ச்சியோடு ஒத்துப்போகாது. நாம் வாழும் இம்மிகப்பெரிய பிரபஞ்சத்தை தேவன் **சிருஷ்டித்தார்** என்னும் வினைச்சொல் நமக்கு விவரமாக விளக்குகிறது. **ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்** [ஆதியாகமம் 1:1]. இங்கே சிருஷ்டித்தார் என்பதற்கான எபிரேயப்பதம் "bara" என்பதாகும், இதன் பொருள் ஒன்றும் இல்லாமையிலிருந்து ஏதோ ஒன்றை உருவாக்குவது. உண்டாக்குவது, ஒன்றுக்கு வடிவம் கொடுப்பது போன்றவைகளாகும். இதனால்தான் "bara" என்னும் வினைச்சொல் தேவன் சம்மந்தமான காரியங்களுக்கு மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கே தேவனுடைய சிருஷ்டிப்பின் செயல்முறை கோடிக்கணக்கான ஆண்டுகளை உள்ளடக்கியதல்ல. அவர் பூமியையும்,அதில் உள்ளவைகளையையும் உண்டாகக் கடவது என்று சொன்னார் அவைகள் உண்டாயின. “**கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது. அவர் சொல்ல ஆகும். அவர் கட்டளையிட நிற்கும்**” [சங்கீதம் 33:6,9]. இங்கே தேவனுடைய சிருஷ்டிப்பின் செயல்றை வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கே தேவன் பயன்படுத்தின செயல்முறை பரிணாம வளர்ச்சி அல்ல மாறாக, தேவன் தம்முடைய சர்வ வல்லமையுள்ள வார்த்தையினாலே உலகத்தையும் அதில் உள்ளவைகளையும் உண்டாக்கினார்.

## சிருஷ்டிப்பின் திட்டம்

தேவன் தம்முடைய சிருஷ்டிப்பின் வல்லமையின் செயல்முறையை விரிவாக விளக்கினது மாத்திரமல்ல, சிருஷ்டிப்பின் திட்டத்தையும் தெளிவாக விளக்கியிருக்கிறார். தேவனுடைய சிஷ்டிப்பின் திட்டம் பரிணாமக் கொள்கைக்காரர்கள் சொல்வது போல கோடிக்கணக்கான வருடங்களை உள்ளடக்கியது அல்ல, மாறாக அவர் இவ்வுலகத்தை உண்டாக்க சொல்லர்த்த ரீதியாக 24 மணி நேரத்தை உள்ளடக்கிய ஒரு நாளைத் தான் பயன்படுத்தியிருக்கிறார். மோசே தேவனுடைய திட்டத்தை எழுதி கொடுக்கத்தக்கதாக தேவன் அவருடைய திட்டத்தை மோசேக்கு வெளிப்படுத்தினார். தேவன் தம்முடைய சிருஷ்டிப்பின் திட்டம் முழுவதும் நாள் என்னும் வார்த்தையை பயன்படுத்தியிருக்கிறார். நாள் என்பதற்கு தேவன் எப்படி விளக்கம் கொடுக்கிறார் என்பதை கவனியுங்கள் **தேவன் வெளிச்சத்துக்குப் பகல் என்று பேரிட்டார்.**

**இருளுக்கு இரவு என்று பேரிட்டார். சாயங்காலமும் விடியற்காலமுமாகி, முதலாம் நாள் ஆயிற்று** [ஆதியாகமம் 1:5]. சாயங்காலமும் விடியற்காலமுமானது தான் ஒரு நாள் அது ஒரு யுகம் அல்ல. நம்முடைய நாட்களில் 24 மணி நேரத்தை உள்ளடக்கியது தான் ஒரு நாள் என்று எப்படி இருக்கிறதோ, அப்படித்தான் சிருஷ்டிப்பின் போதும் இருந்திருக்கிறது. இங்கே 24 மணி நேரத்தை உள்ளடக்கிய ஒரு நாளைக் குறிப்பதற்காக எபிரேய பதம் "Yom" பயன்படுத்தப்பட்டிருக்கிறது. உதாரணமாக, ஏழாம்மாதம் பதினேழாம் தேதியிலே பேழை அரராத் என்னும் மலைகளின்மேல் தங்கிற்று [ஆதியாகமம் 8:4]. இங்கே Yom என்னும் எபிரேயப்பதம் மாதத்தின் 17 ஆம் நாளை குறிக்கிறது. சிருஷ்டிப்பின் 6 நாட்களும் மிக நீண்ட கால அளவை உடைய நாட்களாக இருந்தால், 24 மணி நேர கால அளவை உடைய ஏழாம்நாளை எப்படி யூதர்கள் ஓய்வு நாளாக ஆசரித்திருப்பார்கள் [யாத்திராகமம் 20:11]. இது பரிணாம கொள்கைக்காரர்களின் கூற்றோடு எவ்விதத்திலும் பொருந்தவில்லையே, வேதாகமம் தவறு என்று ஒருவரும் குற்றம் சாட்ட முடியாது. தேவன் தம்முடைய அநாதி திட்டத்தின் படி, 24 மணி நேர கால அளவை உள்ளடக்கிய ஆறு நாட்களிலே உலகத்தையும் அதிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினார்.



**சிருஷ்டிப்பின் நோக்கம்**

சத்தியத்தை உண்மையாக தேடுபவர்கள், பரிணாம வளர்ச்சி அல்ல தேவன்தான் இவ்வுலகத்தை உண்டாக்கினார் என்பதை நிச்சயமாக விசுவாசிப்பார்கள். தேவன் இவ்வுலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கினதற்கான காரணங்களுள் ஒன்று தாம் இருக்கிறதை மறுக்க முடியாத ஆதாரங்களுடன் காட்டுவதற்காகத்தான். பவுல் ரோமாபுரியாருக்கு இவ்விதமாக நினைப்பூட்டினார் எப்படியென்றால்,

காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும். ஆதலால், அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை (ரோமர் 1:20). சங்கீதக்காரனும் சிருஷ்டிப்பு சம்மந்தமாக இதே முடிவுக்குத்தான் வருகிறார் **வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது** (சங்கீதம் 19:1) தேவனுடைய கை ரேகைகள் எங்கும் இருக்கின்றன.

**முடிவுரை**

தேவன் இவ்வுலகத்தை உண்டாக்க பரிணாம வளர்ச்சியை பயன்படுத்தினாரா? இக்கேள்வி ஒரு பொருட்டாக இருக்கிறதா? அன்பான வாசகர்களே, தேவன் இவ்வுலகத்தை உண்டாக்க பரிணாமத்தை பயன்படுத்தவில்லை, மாறாக அவர் தம்முடைய வார்த்தையின் வல்லமையினாலே இவ்வுலகத்தை உண்டாக்கினார். இப்பாடத்தை குறித்தும் வேதத்தில் உள்ள மற்ற பாடங்களை குறித்தும் நாம் என்ன விசுவாசிக்கிறோம் என்பது முக்கியமானதாகும். தேவனுடைய பிள்ளைகளாகிய நம்மைப் பொறுத்தவரை தேவன் ஒன்று சொன்னால் அது அப்படியே நிறைவேறும். **ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்** (ஆதியாகமம் 1:1): “**தேவனே சத்தியபரர் என்றும், எந்த மனுஷனும் பொய்யன் என்றும் சொல்வோமாக**” (ரோமர் 3:4). ✝

---

## ஆராய்ந்து பாருங்கள்

- **அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள் (அப். 17:11).**

- **வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே (யோவான் 5:39).**

# இயேசு கிறிஸ்து எல்லாவற்றையும் உண்டாக்கினார் என்பதை வேத வாக்கியங்களிலிருந்து தீர்க்கமாக நிருபிப்பதற்கு

## come meet Jesus as the creator (John 1:1&3).

*Louis Rushmore*

**முன்னுரை:**

1. இயேசு கிறிஸ்து உண்டாக்கப்பட்டிருக்கிற எல்லாவற்றுக்கும் பிரதான காரணமாய் இருக்கிறார்.
2. மேலும் உண்டாக்கப்பட்டிருக்கிறவைகள் தொடர்ந்து நிலைத்திருக்க இயேசு கிறிஸ்து முக்கிய பங்கு வகிக்கிறார்.
3. இயேசு கிறிஸ்து சிருஷ்டிப்பில் முக்கிய பங்கு வகிக்கிறார் என்பதை விளக்க ஏராளமான வசனங்கள் அணிவகுத்து நிற்கின்றன.

**மையப்பகுதி**

தேவத்துவம் என்பது எல்லாவற்றையும் உண்டாக்கின மூன்று தெய்வீக நபர்களை உள்ளடக்கியதாகும்.

**அ. தேவத்துவம் மூன்று நபர்களை உள்ளடக்கிய ஒன்றாகும்.**

1. பொதுவான அடிப்படையில் இந்த வேதாகம உபதேசம் திரித்துவம் என்று அழைக்கப்படும். திரித்துவம் என்கிற வேதாகமப் பாடத்தை நாம் நேரமெடுத்து ஓர் அர்ப்பணிப்புடன் படிக்கவேண்டும் இந்த கட்டுரையில் கிறிஸ்தவத்தைப் பற்றிய அநேக காரியங்களை நாம் படிக்க முடியும்.
2. தேவத்துவத்தின் மூன்று நபர்களை நாம் ஒரே நேரத்தில் புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் வாசிக்க முடியும். மத்தேயு 3;16,17; மாற்கு 1;10,11; லூக்கா 1:30–35; யோவான் 14;16,17,25,26; அப்போஸ்தலர் 2:32–33; 1கொரிந்தியர் 12:4–6; 2.கொரிந்தியர் 13:14; எபேசியர் 4:4–6; 2 தெசலோனிக்கேயர் 2:13:14; தீத்து 3:4–6; எபிரேயர் 2:3–4; 1 யோவான் 5:4–6; யூதா 20–21;
3. பழைய ஏற்பாட்டு வசனப்பகுதிகளும் தேவத்துவத்தில் மூன்று தெய்வீக நபர்கள் இருப்பதை ஒப்புக்கொள்கின்றன. ( ஏசாயா 42:1;61:1–2; லூக்கா 4:8; எபிரெயர் 1:10; சங்கீதம் 102:25–27 ).

4. வேத வாக்கியங்கள் ஒரே தேவனில் மூன்று நபர்கள் இருப்பதைத்தான் தேவத்துவம் என்று சொல்லுகின்றன ரோமர்1:20; கொலோசெயர் 2:9].

5. அந்த தேவத்துவத்தில் பிதாவும் குமரனாகிய இயேசு கிறிஸ்துவும் ஒன்றாய் இருக்கிறார்கள் [யோவான் 10:30] இதைப் புரிந்து கொள்வதற்கு நமக்கு கடினமாக இருக்கலாம்.

**ஆ. தேவத்துவத்தில் உள்ள மூன்று நபர்களின் கூட்டு ஒத்துழைப்பால் தான் இருக்கிற எல்லாமே சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன.**

1. வேத வாக்கியங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள பன்மை பெயர்ச்சொல் சிருஷ்டிப்பின்போது மூன்று பேர்கள் இருந்ததற்கு ஆதாரமாக இருக்கின்றன [ஆதியாகமம் 1:26:3:22; 11:7].

2. தேவன் என்பதற்கான பன்மை பெயர்ச்சொல் ‘ஏலோஹீம்‘ சிருஷ்டிப்புக்கு காரணமான மூவர் இருப்பதை உறுதி செய்கிறது [ஆதியாகமம் 1:26].

தேவன் மனிதனை சிருஷ்டித்த போதுதான் சிருஷ்டிப்பின் மிக முக்கியமான தருணம் வந்தது. தேவன் திரித்துவம் அல்லது தேவத்துவத்தில் உள்ள இரண்டு நபர்களையும் அழைத்து, மனிதனை உண்டாக்கும் சம்பவத்தின் மீது முழு கவனத்தையும் செலுத்துமாறு கேட்டுக் கொண்டார் என்று “WYCLIFFE” என்னும் வேத வல்லுநர் வர்ணித்திருக்கிறார்.

வேத வசனம் மனிதன் ஏலோயீமின் கிரியை என்று சொல்கிறது. ஆதியாகமம் 1:26 தேவத்துவம் பன்மை யிலானது என்பதை வேறுபடுத்தி காட்டுகிறது. அதிலும் குறிப்பாக நமது, உண்டாக்குவோமாக போன்ற சொற்றொடர்கள் தேவத்துவத்தின் பன்மை தன்மையை உறுதி செய்கின்றன. தேவத்துவத்தில் உள்ள எல்லா நபர்களும் ஒன்றிணைந்து, ஆலோசித்து, ஆச்சரியமூட்டும் இந்த மனிதனை உண்டாக்கினார்கள். எனவேதான், மனிதன் தேவனுடைய சிருஷ்டிப்பின் மகுடமாக அழைக்கப்படுகிறான். சிருஷ்டிப்பில் இயேசு கிறிஸ்துவின் பங்கை வேத வாக்கியங்கள் வலியுறுத்துகின்றன .

**அ. பல புதிய ஏற்பாட்டு வேத வாக்கியங்கள் இயேசு கிறிஸ்து சிருஷ்டிப்பில் முக்கிய பங்கு வகித்தார் என்பதை வெளிப்படையாகவே சொல்கின்றன.**

1. இயேசு கிறிஸ்து நித்தியத்தில் பிதாவாகிய தேவனோடு இருந்தார், உண்டானதொன்றும் இயேசு கிறிஸ்துவாலேயல்லாமல் உண்டாகவில்லை. யோவான் 1:1–3]

2. சகலமும் இயேசு கிறிஸ்துமூலமாகத்தான் உண்டாக்கப்பட்டிருக்கிறது [1 கொரிந்தியர் 8:6; எபேசியர் 3:9].

3. உலகத்தின் சிருஷ்டிகராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்தார் [யோவான் 1:10].

**ஆ. இயேசு கிறிஸ்து சகலவற்றையும் தாங்குகிறார். சகலத்தையும் நிலைத்திருக்கச் செய்கிறார்.**

1. சகலவற்றையும் உண்டாக்க இயேசு கிறிஸ்து எந்த வல்லமையை பயன்படுத்தினாரோ, அதே வல்லமையை சிருஷ்டிப்பு நிலைத்திருக்கவும் பயன்படுத்துகிறார் [கொலோசெயர் 1:16,17; எபிரேயர் 1:2,3].

2. எனவே தான் இயேசு கிறிஸ்து சிருஷ்டிப்பின் அதிபதியாக இருக்கிறார்.

லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில் உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும், தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென் என்பவர் சொல்லுகிறதாவது, [வெளிப்படுத்தின விசேஷம் 3:14]

மேற்சொல்லப்பட்ட வசனத்தின் படி, இயேசு கிறிஸ்து தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிறார், ஆக இயேசு கிறிஸ்து தேவனுடைய சிருஷ்டிப்பு கிரியையின் ஆரம்பத்திலிருந்தே இருக்கிறார் யோவான்1:3; மற்றும் எபிரேயர்1:2 வசனங்கள் [வெளிப்படுத்தின விசேஷம்1:18]ஆல் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

**முடிவுரை:**

1. இயேசு கிறிஸ்து அநேக பங்குகளை வகிக்கிறார்; அவர் மாம்சத்தில் வந்த தேவனாய் இருக்கிறார். மாபெரும் போதகராயிக்கிறார்; அவர் பலியாக, இரட்சகராக, ராஜாவாக, நியாயாதிபதியாக இருக்கிறார்.

2. இயேசு கிறிஸ்து சிருஷ்டிகராகவும், சிருஷ்டிப்பைத் தாங்குகிறவராகவும் இருக்கிறார்

**அழைப்பு:**

1. சகலவற்றையும் உண்டாக்கின இயேசுகிறிஸ்துதான் மனிதர்கள் மீட்பைப் பெற்றுக் கொள்வதற்கும் தேவனிடத்தில் செல்வதற்கும் ஒரே வழியாய் இருக்கிறார் [மாற்கு 16:16, யோவான் 14:6]

2. வழி தப்பிப்போன தவறுசெய்கிற கிறிஸ்தவர்கள் மற்றுமொரு சுத்திகரிப்புக்கு கர்த்தரிடத்தில் திரும்பமுடியும் [ஏசாயா 44:22; எரேமியா 24:7; எபிரெயர் 8: 10–12 ].

✝

# ஏன் தேவனை விசுவாசிக்கிறோம்?

## Why we believe in God?

*Terry wheeler*

நாம் ஒன்றை அல்லது ஒருவரை விசுவாசிக்க வேண்டுமென்றால், அந்தப் பொருள் மீது அல்லது அந்த நபர் மீது நாம் முழுமையான நம்பிக்கையை கொண்டிருக்க வேண்டும் அப்போதுதான் நாம் விசுவாசிக்க முடியும்.

இந்த நம்பிக்கை என்பது நம் அன்றாட வாழ்வின் ஓர் அங்கமாகும். இது இல்லாமல் நம்மால் செயல்பட முடியாது. ஒரு விவசாயி தான் விதைக்கும் விதை நல்ல மகசூலை கொடுக்கும் என்கிற நம்பிக்கையில் தான் விதைக்கிறான். மண்ணிலிருந்து விண்ணுக்கு செயற்கைக் கோள்களை ஏவும் விஞ்ஞானிகள் செயற்கைக்கோள் உதிரி பாகங்கள் எல்லாம் சரியாகத்தான் இணைக்கப்பட்டிருக்கின்றன. எரிபொருளெல் லாம் சரியாகத்தான் நிரப்பப்பட்டிருக்கின்றன, விண்வெளிக்கு செலுத்தப்படும் செயற்கைக்கோள் சரியான நேரத்தில் போய் சேர்ந்து மறுபடியும் விண்வெளி வீரர்கள் மண்ணுக்கு திரும்புவார்கள் என்னும் நம்பிக்கையில் தான் செயற்கைக்கோள்களை செலுத்துகிறார்கள். ஒரு குழந்தையை பெற்றெடுக்கும் தாய் குழந்தை உட்கொள்ளும் ஆகாரத்தை நம்பித்தான் வாங்குகிறாள், அதேபோல் ஒரு வாடிக்கையாளர் வங்கியை நம்புகிறார். ஒரு நோயாளி தன் மருத்துவரை நம்புகிறார். ஒரு நாட்டின் பிரஜை தன் அரசாங்கத்தை நம்புகிறார். இவ்விதமாக அன்றாட வாழ்வில் நம்பிக்கை அடிப்படையில் தான் வாழ்க்கை நகர்கிறது.

மேற்சொல்லப்பட்டபடி நம்பிக்கையின் அடிப்படையில் நம்முடைய நாட்கள் நகர, பலர் கர்த்தரில் மாத்திரம் நம்பிக்கை இல்லாமல் இருப்பது வேடிக்கையாகவும், கேலிக்கூத்தாகவும் இருக்கிறது. வேதாகமம் தேவனுக்கு சாட்சியாய் இருக்க, அவருடைய சிருஷ்டிப்பு அவர் இருக்கிறார் என்பதை நிரூபிக்க, தேவனுக்குள் நம்பிக்கை வைப்பது தான் பகுத்தறிவு உள்ள ஒருவர் எடுக்கும் நியாயமான முடிவாய் இருக்கும். சிலர் காணாத தேவன் மீது விசுவாசம் வைப்பதை ஆழம் தெரியாமல் காலை விடுகிற ஒரு செயலாக பார்க்கிறார்கள். நம் உலகப்பிரகாரமான காரியங்களில் நம்பிக்கை வைத்துக்கொண்டு தேவனுடைய காரியங்களில் நம்பிக்கை அல்லது விசுவாசம் இல்லாமல் இருப்பது நாம்

தேவனிடத்தில் பட்சப்பாதமாய் நடந்து கொள்ளும் ஒரு செயலாகத்தான் இருக்கும். தேவனுடைய நித்திய வல்லமை. தேவத்துவம் என்பவைகள் உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு தெளிவாய்க் காணப்படுகிறபடியால் தேவன் இல்லை, அவரை அறிந்து கொள்ள முடியவில்லை என்று யாரும் சாக்குப் போக்குச் சொல்லவே முடியாது (ரோமர் 1:20).

இங்கே தேவனை நம்முடைய கண்களால் காண முடியாது என்பது உண்மையான பிரச்சினை யல்ல. விசுவாசம் என்பதே நாம் எதைக்காண முடியவில்லையோ அது இருக்கிறதென்று உறுதியாக நம்புவது தான். ✝

## இயேசுவின் போதனை ஏன் வல்லமையாக இருந்தது?

1. அவர் ஜனங்களை மரியாதையோடு நடத்தினார்
   - (மாற்கு 10:46,52)
2. அவர் வெளிப்படையாகப் பேசினார்
   - (யோவான் 3 : 1, 3; மத். 13; மத். 4 : 19; யோவான் 4 : 1, 4)
3. அவர் இரக்கம் நிறைந்தவராய் பேசினார்
   - (மாற்கு 8:2; லூக்கா 13:34 )
4. அவர் பட்சபாதமில்லாதவராக இருந்தார்
   - (மத். 8:2,3; மத். 19:14; மாற்கு 10:21 )
5. அவர் மனிதத் தேவைகளை சந்தித்தார்
   - (யோவான் 9:1,38)
6. அவர் அதிகாரம் உடையவராகப் பேசினார்
   - (மத் 7:28,29; 4:4,10 )
7. அவருடைய போதனையும், வாழ்க்கையும் ஒரே மாதிரியாக இருந்தது
   - (எபி 4:15; யோவான் 8:29,46; 1பேதுரு 1:19 )
8. ஜனங்கள் கேட்டறியும் திராணிக்குத்தக்கதாகப் போதித்தார்.
   - (மாற்கு 4:33 )

# பயந்திரு அதிகமாக பயந்திரு

## Be Afraid Be very Afraid

*Denny petrillo*

**த**லைப்பில் காணப்படும் வாக்கியத்தை நான் எங்கே படித்தேன் என்று எனக்கு நினைவில்லை. ஆனால், ஒருவருக்கு முன்பாக பதுங்கி இருக்கும் ஆபத்தை அந்த நபர் அறியாதிருக்கும் போது வேறொருவரால் அவருக்கு கொடுக்கப்பட்ட எச்சரிப்பின் வார்த்தைகள் தான் இவைகள்.

நீதிமொழிகள் 1:7 ல் சாலொமோன் ஞானி கர்த்தருக்கு பயப்படுதலைப் பற்றி பேசியிருக்கிறார். பயம் என்பது ஒரு சக்தி வாய்ந்த வார்த்தையாகும். பயம் என்னும் வார்த்தை கிரேக்க மொழியில், 'phobos' என்றழைக்கப்படுகிறது. இதிலிருந்துதான் 'Phobia' என்னும் ஆங்கில வார்த்தை உருவானது. சிலர் இந்த வார்த்தை எபிரேய மொழியில் மரியாதையை குறிக்கும் என்று எண்ணுகிறார்கள். ஆனால், இவ்வார்த்தை அதைவிட அதிகமான பொருள்களை உள்ளடக்கியதாகும்.

யாத்திராகமம் 20 ல் இஸ்ரவேலர்கள் சீனாய் பர்வதத்தை சுற்றி வந்த போது, தேவன் தம்முடைய பயங்கரமான பிரசன்னத்தை இடிமுழக்கங்கள் மின்னல்கள், எக்காளசத்தம் போன்றவைகள் மூலமாக காட்டினார். அவைகள் இஸ்ரேல் ஜனங்களை அதிகமாக பயப்படுத்தின, அதைத்தான் தேவன் விரும்பினார். அவைகளையெல்லாம் ஒரு நோக்கத்திற்காக செய்ததாக தேவன் சொல்கிறார், அதாவது அந்த ஜனங்கள் தமக்கு கீழ்படியத்தக்கதாக அவர்களிடத்தில் பயத்தை உண்டாக்கும்படி இப்படி செய்ததாகச் சொல்கிறார்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மனுஷனுக்கு பயப்படாமல் மாறாக தேவனுக்கு பயப்பட வேண்டுமென்று போதித்தார் (மத்தேயு 10:28), நம்முடைய ஜீவியங்களின் மீதும், ஆத்துமாக்களின் மீதும் அவர் கொண்டிருக்கும் வல்லமைக்காக நாம் அவருக்கு பயப்பட வேண்டும். இவ்வுலகில் தேவனைத் தவிர வேறு ஒருவரும் அத்தகைய வல்லமை உடையவராக இல்லையே.

எனவே, தேவன் நம்மை அவருக்கு பயப்பட செய்வதன் மூலமாக எதை நிறைவேற்றுகிறார்? சாலமோன் ஏன் இதை ஞானத்தின் ஆரம்பம் என்று சொல்லுகிறார்? நாம் நம்முடைய ஆசிரியருக்கு பயப்படவில்லை என்றால், அவருடைய போதனைகளுக்கும் நாம் பயப்பட மாட்டோம். மகா நியாயத்தீர்ப்பின் நாள் வரவிருக்கிறது. ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுவது பயங்கரமாயிருக்குமே (எபிரெயர் 10:31). நாம்

தேவனுடைய போதனைகளை அவமதித்தால், தேவனுடைய கோபத்திற்கு ஆளாவோம். (ரோமர் 2:6)

எனவே, நாம் தேவனுக்கு பயந்து, அவர் மகா பெரியவர் என்பதை ஏற்றுக் கொண்டு, நாம் ஒன்றும் இல்லை என்பதையும் ஏற்றுக்கொண்டு வாழவேண்டும். அது மட்டுமல்ல, அவருடைய பாதத்தில் அமர்ந்து அவரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். தெளிவாக இதுவே ஒவ்வொருவருடைய தொடக்கப் புள்ளியாகும். ✝

## ஒன்றின் வல்லமையைப் பாருங்கள்

**ஒரு நல்ல சமாரியன் எரிகோவுக்குப் போகும்பாதையில் காயமடைந்த ஒருவனை காப்பாற்றினான் (லூக்கா 10)**

**ஒரு வயதான மனிதன் ( நோவா ) மனித இனம் அழிந்து போகாத படிக்கு வாழ்ந்தான். (ஆத். 6).**

**ஒரு மனிதன் ( மோசே ) தன்னை தகுதியில்லாதவன் என்று எண்ணியபோதும் பார்வோனை எதிர்கொண்டு இஸ்ரவேலர்களை எகிப்திலிருந்து விடுவித்தார் (யாத்திராகமம் 3)**

**ஒரு பெண் ( எஸ்தர் ) நீண்டகாலமாக நடைமுறையிலிருந்த பாரம்பரியத்தை தகர்த்தெறிந்து ராஜ அரண்மனைக்குள் பிரவேசித்து ஒட்டுமொத்த தேசத்தையும் பெரிய இனப்படுகொலையிலிருந்து காப்பாற்றினாள் (எஸ்தர் 4)**

**ஒரு சிறுபையன் ( தாவீது ) ஒன்பது அடி உயரமுள்ள கோலியாத்தை எதிர்கொண்டு இஸ்ரவேலர்களை காப்பாற்றினான் ( I சாமுவேல் 17 )**

**ஒரு சிறுபையனின் ஐந்து அப்பமும், இரண்டு மீன்களும் ஐயாயிரம் பேரை போஷிக்க உதவியது (யோவான் 6)**

**ஒரு அடிமைப்பெண் இராணுவப்படை தளபதியின் வியாதி சுகமாகக் காரணமாக இருந்தாள் ( II ராஜாக்கள் 5 )**

**அப்படியானால், நானும், நீங்களும் எப்படி?**

ஆராதனை

# எங்களுக்கு ஜெபிக்க கற்றுத் தாரும்

## Teach us to Pray

*David Conley*

***மத்தேயு 6:9–13***

- "உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" — ஆராதனை
- "உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக" — தேவனுடைய சித்தம்
- "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" — தேவைகள்
- "எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்" — மன்னிப்பு
- "எங்களை சோதனைக்குட்படுத்த பண்ணாதேயும்" — ஆவிக்குரிய உதவி
- "ராஜ்ஜியம் உம்முடையதே" — ஆராதனை(மறுபடியும்)



பெரும்பாலான நேரங்களில் கிறிஸ்தவர்கள் ஜெபிக்க வேண்டிய அளவுக்கு ஜெபிக்காமல் இருப்பதற்கு அவர்கள் சொல்லும் காரணங்களில் ஒன்று எதைக் குறித்து ஜெபிக்க வேண்டும் என்பதை குறித்து தங்களுக்கு போதுமான அளவு அறிவு இல்லை என்பதாக இருக்கிறது. எதற்காக ஜெபிக்க வேண்டும் என்பதைக் குறித்து இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு சில காரியங்களை போதித்தார். அவைகளை என்றும் நாம் நம்முடைய ஜெபங்களில் சேர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாய் இருக்கிறது. அடுத்த முறை நீங்கள் ஜெபிக்கும்போது, மேற்ச்சொல்லப்பட்ட காரியங்களை உங்கள் மாதிரி ஜெபமாக பயன்படுத்துங்கள். அப்போது நீங்கள் ஜெப நேரத்தை குறைக்காமல் ஜெபிப்பதற்கென்று அநேக காரியங்கள் உங்களுக்கு இருக்கும். ✞

ஆராதனை

# பாடலில் கர்த்தரை ஆராதித்தல்

# Worshipping The Lord in Song

*Ronald D.Reeves*

ஆராதனை வேளையில் கிறிஸ்தவர்கள் உற்சாகமாக பங்கெடுக்கும்படி கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள் (எபேசியர் 5:19) பாடல் என்பது உண்மையாகவே நம் மனதுக்கு இதமான அதே நேரத்தில் ஒரு சரியான ஆவிக்குரிய செயல்பாடு என்பதை நாம் அறிந்திருக்கிறோம் (சங்கீதம்92:1–3) பழைய ஏற்பாட்டில் கர்த்தருடைய பரிசுத்தவான்கள் (சங்கீதம் 30:4) நீதிமான்கள் (சங்கீதம்33:1–2) பாடல்களை பாடும் படியாக உற்சாகப்படுத்தப்பட்டார்கள். பல்வேறுப்பட்ட சந்தர்ப்பங்களில் இஸரேல் புத்திரர் பாடல்களை பாடியிருக்கிறார்கள் என்பதற்கு நமக்கு ஆதாரம் உண்டு மோசே யாத்திராகமம் 15:1) லேவியராகமம் (2 நாளாகமம் 29:30), தாவீது ராஜா (2 சாமுவேல் 2:1) தெபோராள் மற்றும் பாராக் நியாயாதிபதிகள் 5:1 ) புதிய ஏற்பாட்டில் கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்கள் ஆராதனையில் பாடும்படியாக கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள்.

(1 கொரிந்தியர் 14:15,26) அதாவது எல்லா அங்கத்தினர்களும் பாடல் பாட வேண்டும் என்பதுதான் கட்டளையாயிருக்கிறது (எபேசியர் 5:19; கொலோசெயர் 3:16). இதற்கு முன்னுதாரணமாக இயேசு தம்முடைய சீஷர்களோடு சேர்ந்து பாடியிருக்கிறார் மத்தேயு 26:26–30; பவுலும் சீலாவும் சிறைச்சாலையில் பாடியிருக்கிறார்கள் (அப் 16:23–25).

பழைய ஏற்பாட்டிலும் சரி, புதிய ஏற்பாட்டிலும் சரி பரிசுத்தவான்கள் தேவனை நோக்கி பாடல்களை ஏறெடுத்திருக்கிறார்கள் (சங்கீதம்7:1; எபேசியர்5:19). அதேபோல், ஒருவருக்கொருவர் பாடல்களை பாடி இருக்கிறார்கள் (1 சாமுவேல்21:11 ; எபேசியர் 5:19) இத்தகைய எழுப்புதலை ஏற்படுத்தும் ஆவிக்குரிய செயல்பாடுகள் சபைகளிலே ஏறெடுக்கப்பட வேண்டும் 1 கொரிந்தியர் 14:15,26, எபிரேயர் 212 சிறை பிடிக்கப்பட்ட நேரத்திலும் பாடல்கள் ஏறெடுக்கப்பட வேண்டும் (அப்போஸ்தலருடைய நடபடிகள் 16:23–25).

வேதாகமத்தின் பல பக்கங்களில் பாடல்கள் எவ்விதமாக பாடப்பட வேண்டும் என்று தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது. நாம் முழு இருதயத்தோடு பாட வேண்டும் (சங்கீதம் 9:1) கருத்துடன் பாட வேண்டும் (சங்கீதம் 47:6,7) பணிவுடன் பாட வேண்டும் ( 2 நாளாகமம்29:30) மகிழ்ச்சியோடு பாட வேண்டும் (சங்கீதம் 9.1.2) புதிய ஏற்பாடு நாம் ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளும் போது சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும்

ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி (எபேசியர் 5:19), ஆவியோடும் கருத்தோடும் பாட வேண்டும் (1 கொரிந்தியர் 14:15 என்று கட்டளை யிடப்பட்டிருக்கிறோம். அது மாத்திரமல்ல, சங்கீதங்களினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பக்தியுடன் பாட வேண்டுமென்றும் கட்டளை பெற்றிருக்கிறோம் (கொலோசெயர் 3:16).

பாடல் பாடுவது ஆவிக்குரிய செயல்பாடுகளில் இரண்டாவது இடத்தைப்பிடிக்கிறதா? நாம் இதுகாறும் பார்த்த காரியங்கள் அப்படிச் சொல்லவில்லை நான் சங்கீதக்காரனைப் போல் உயிரோடு இருக்குமட்டும் பாடுவேன் என்றும் (சங்கீதம் 104:33) என்றைக்கும் பாடுவேன் என்றும் (சங்கீதம்61:8) சொல்வோமாக. (எபேசியர் 5:19) எழுதப்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பாகவே பரிசுத்தவான்கள் தங்கள் வாழ்க்கையின் பல்வேறுப்பட்ட சூழ்நிலைக்கேற்ப தேவனை நோக்கி பாடல்களை பாடும்படியாக ஊக்கப்படுத்தப்பட்டார்கள். பழைய ஏற்பாட்டு பதிவுகளிலிருந்து நாம் சில காரியங்களை பார்த்தோம்.



யூத மார்க்கத்தின் கடந்த கால தலைமுறையினர் தேவன் தங்கள் வாழ்வில் என்னவாய் இருக்கிறார் என்பதை உணர்ந்தவர்களாய் அவரை நோக்கி பாடல்களை பாடும் படியாக ஊக்கப்படுத்தப்பட்டார்கள். உதாரணமாக, தேவனை பூமியின் ராஜா என்னும் நிலையிலும், (சங்கீதம்47:6-7) அல்லது அவருடைய குணாதிசயங்களான நீதி சங்கீதம்...7:17 அவருடைய உண்மைத்தன்மை (சங்கீதம் 89:1), அவருடைய பரிசுத்தம் (சங்கீதம் 30:4) அவருடைய கனத்திற்குரிய நிலை (சங்கீதம் 6:1-2) பாடல் சம்மந்தமாக அந்த யூதர்களுடைய கடந்த கால செயல்பாடுகளும் கூட தேவனுடைய வல்லமையையும், அந்த வல்லமை ஏற்படுத்திய விளைவுகளையும் எண்ணி தேவனை துதித்து பாடுவதற்கு காரணிகளாக அமைந்திருக்கின்றன (சங்கீதம்21:13 சங்கீதம்9:1). தேவனுடைய வார்த்தையும் அவர்கள் பாடல்கள் பாட அவர்களை ஊக்கப்படுத்தியது, தேவனுடைய வார்த்தை மீது

அவர்களுக்கு தனிப்பட்ட விசுவாசமிருந்தபடியால், அவர்கள் அந்த விசுவாசத்தை பாடல்கள் மூலமாக வெளிப்படுத்தினார்கள் அதிலும் குறிப்பாக தேவனுடைய வார்த்தை அவருடைய சத்துருக்கள் மீது வெற்றியை முன்னுரைத்தபடியால் அவர்கள் அந்த கொண்டாட்டத்தை பாடல்கள் மூலமாக வெளிப்படுத்தினார்கள் [2 நாளாகமம்20:21-22] கடந்த கால யூத தலைமுறையினர் தேவாலயம் சம்மந்தமாக அதிலும் குறிப்பாக தேவாலயத்திற்கு அஸ்திபாரம் போடும் போது பாடல்களை பாடியிருக்கிறார்கள் [எஸ்றா 3:10,11] அதைப்போல், தேவ ஆலயத்தை பரிசுத்தம் பண்ணும் போதும் பாடியிருக்கிறார்கள் [2 நாளாகமம் 29:1-28]

குறிப்பாக இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய வல்லமையையும் அவர்களுடைய ஜீவியங்களிலே அவருடைய கிரியையையும் உணரும் போதெல்லாம் பாடல்களை பாடியிருக்கிறார்கள். சத்துருக்களிடமிருந்து தங்களை பாதுகாக்க தேவனுடைய உதவியை நாடும்போதெல்லாம் அவர்கள் பாடல்களை பாடியிருக்கிறார்கள் [சங்கீதம்:1] அதுபோல, தேவனை சார்ந்து இருக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் அதை அவர்கள் தங்கள் பாடல்கள் மூலமாகத்தான் வெளிப்படுத்தியிருக்கிறார்கள் சங்கீதம்[57:6-7] 1. இஸ்ரவேலர்கள் தேவனிடமிருந்து அபரிதமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும் பொழுது அவர்கள் தேவனைத் துதித்துப் பாடியிருக்கிறார்கள் [சங்கீதம் 13:6] குறிப்பாக இஸ்ரவேலர்கள் அவர்களுக்கு தண்ணீர் அவசியப்பட்டபோதெல்லாம் தண்ணீர் கிடைத்தமைக்காக தேவனை நோக்கி பாடல்களை பாடியிருக்கிறார்கள் [எண்ணாகமம்21:16-17]. இஸ்ரவேல் புத்திரர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்ட போது பாடல்களை பாடினார்கள் [யாத்திராகமம் 15:1 21]. இஸ்ரவேலர்களுடைய பாடல்கள் மேற்சொல்லப்பட்ட தருணங்களோடு நின்றுவிடவில்லை, தாங்கள் மீட்கப்பட்டதற்காக கூட பாடல்கள் பாடும்படி ஊக்கப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் [சங்கீதம் 71:22-23]. இஸ்ரவேல் ஜனங்கள் இரட்சிக்கப்படும் போதும் தெய்வீக இரக்கத்தை பெற்றுக் கொள்ளும் போதும் கர்த்தருடைய நீதியான தீர்ப்பின் போதும் பாடல்களைப் பாடி தேவனை துதித்திருக்கிறார்கள் [சங்கீதம்95:1; சங்கீதம்59:16-17 : சங்கீதம் 67:4]. இவ்விதமாக ஆசீர்வதிக்கப்பட்ட ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் தனிப்பட்ட முறையிலே மற்றவர்கள் மீது நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் விதத்திலும், ஒருவருக்கொருவர் பக்தி விருத்தியை உண்டாக்கவும் வாழ்நாள் முழுவதும் தேவனை துதித்து பாடக் கடவர்கள். ✝

---

**யோபு புத்தகத்திலிருந்து ...**

பாடுகளும், உபத்திரவங்களும் எல்லாச் சமயங்களிலும் நம்முடைய தண்டனைக்கானவைகள் அல்ல. மாறாக, அநேக நேரங்களில் நம்முடைய பயிற்சிக்காகவும், பக்தி மேம்பாட்டுக்கும் ஆனவைகள்.

# பயப்பட வேண்டாம்
# Have no Fear
*Tam Raynor*

**எ**ல்லோருக்கும் சத்துருக்கள் இருக்கிறார்கள். சில வேளைகளில் சத்துரு கோலியாத்தை போல ஒரே ஒரு மோசமான நபராக இருக்கலாம் அல்லது நம்மை முற்றிலுமாக அழிக்கத் துடிக்கும் பல சத்துருக்களாக இருக்கலாம். சிலர் நம்முடைய குணாதிசயங்களை நம்முடைய வேளைகளை நாசமாக்க விரும்புவார்கள். இத்தகைய சத்துருக்கள் எல்லோருமே சாத்தானுடையவர்கள் தான் (1 யோவான் 2:9–12). ஆனால், தேவனோ மனிதர்கள் எவ்வளவு சக்தி வாய்ந்தவர்களாக இருந்தாலும், ஆபத்தானவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு பயப்பட வேண்டாம் என்று தொடர்ச்சியாக சொல்லுகிறார். நம்முடைய சத்துருக்களை குறித்து நாம் கீழ்க்கண்டவாறு காண்போம்.

**மனிதர்கள்** வெறுப்பும், கசப்பும் நிறைந்தவர்கள். இஸ்ரவேல் ஜனங்களுக்கு மோசேயின் கடைசி வார்த்தைகள் இவ்விதமாய் இருக்கின்றன. “நீ உன் சத்துருக்களுக்கு எதிராக யுத்தஞ்செய்யப் புறப்பட்டுப் போகையில், குதிரைகளையும் இரதங்களையும், உன்னிலும் பெரிய கூட்டமாகிய ஜனங்களையும் கண்டால், அவர்களுக்குப் பயப்படாயாக, உன்னை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்”(உபாகமம் 20:1).

**சாத்தான்** நம் எதிராளியாகிய சாத்தான் கெர்ச்சிக்கிற சிங்கம் போலிருக்கிறான் ( 1 பேதுரு 5:8). சாத்தான் சக்தி உள்ளவன் தான். ஆனால், அவனுடைய முடிவு முத்திரை போடப்பட்டிருக்கிறது என்று தேவன் சொல்லுகிறார் (வெளிப்படுத்தின விசேஷம் 12:9). எனவே, இங்கே பயப்படுவதற்கு என்ன இருக்கிறது?

**பாவம்** பாவத்தை நம் முழு பலத்தோடும் பார்க்க வேண்டும். பாவத்தை மேற்கொள்ள தேவனுடைய பார்வையில் நாம் அருமையாக இருக்க தடையாய் இருக்கின்ற எல்லாவற்றையும் நாம் தோற்கடிக்க வேண்டும்.

**மரணம், வேதனை மற்றும் அவமானம்:** இயேசு தாம் சிலுவையில் மரித்ததினால் அவமானம் மற்றும் வேதனையின் வல்லமையை அழித்தார். அது மட்டுமல்லாமல், மரணத்தின் வல்லமையை அவருடைய உயிர்த்தெழுதலினால் முற்றிலுமாக ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம். ஆத்துமாவையும், சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள் (மத்தேயு 10:28).

தேவன் இஸ்ரவேலர்களுக்கு எப்படி போரிட வேண்டும் என்று போதித்தார் [உபாகமம் 20:1]. இன்று நாம் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்துக்கொண்டு போரிட வேண்டும் என்று தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார் [எபேசியர் 6:10–18] நாம் தேவனுக்காக ஒருங்கிணைந்து வேலை செய்ய வேண்டும் என்று தேவன் சொல்லுகிறார். "நான் வந்து உங்களைக் கண்டாலும், நான் வராமலிருந்தாலும், நீங்கள் ஒரே ஆவியிலே உறுதியாய் நின்று, ஒரே ஆத்மாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப்போராடி. எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்கிறீர்களென்று உங்களைக் குறித்து நான் கேள்விப்படும்படி, எவ்விதத்திலும், நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்துகொள்ளுங்கள்.

நீங்கள் மருளாதிருக்கிறது அவர்கள் கெட்டுப்போகிறதற்கும். நீங்கள் இரட்சிக்கப்படுகிறதற்கும் அத்தாட்சியாயிருக்கிறது. இதுவும் தேவனுடைய செயலே [பிலிப்பியர் 1:27,28]. மோசே எந்த போர்ச்சேவவர்களோடு பேசினாரோ அந்த போர்ச் சேவர்களாக நாம் இருக்கத் தீர்மானிப்போம். அப்படி இருந்தால்தான் தைரியமாக இவ்விதமாக சொல்ல முடியும் '**அதினாலே நாம் தைரியங்கொண்டு கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்னசெய்வான்** என்று சொல்லலாமே [எபிரேயர் 13:6].

✝

---

## இன்றே இயேசுவை நோக்கிப் பாருங்கள்

**அவருடைய கண்களில், ஜீவ ஒளியிருக்கிறது...**

**அவருடைய குரலில் சத்திய வாக்கிருக்கிறது...**

**அவருடைய பாதத்தில் சமாதானப் பாதைகள் இருக்கிறது...**

**அவருடைய கரங்களில் ராஜ்யத்தின் வேலையிருக்கிறது...**

**அவருடைய இருதயத்தில் பிதாவின் அன்பிருக்கிறது!**

# வீண் பேச்சு

## Gossip

*Emily Fisher*

மனிதர்களாகிய நமக்கு ஏன் புதிய காரியங்கள் அல்லது சுவாரஸ்யமான காரியங்களை பற்றிப்பேச வேண்டும் அல்லது கேட்க வேண்டும் என்னும் தேவை இருப்பதாக உணர்கிறோம்? ஒருவேளை இது மனோதத்துவத்திற்கான கேள்வியாக இருக்கலாம். ஆனால், இது தேவனுடைய ஜனங்களாகிய நமக்கு இப்பூமியில் ஆவிக்குரிய பயணத்திற்கு மிக முக்கியப்பங்கு வைக்கிறது. இன்றைய நாட்களில் நாம் பொருள்களை வாங்க ஒரு கடைக்கு சென்றால் கூட அங்கே கிசுகிசு பத்திரிகைகளை பார்க்காமல் நம்மால் வர முடிவதில்லை. கிறிஸ்தவர்களாகிய நாம் வேலைஸ்தலங்களில் சக ஊழியர்கள் ஒருவருக்கொருவர் பேசும் வீணான வார்த்தைகள் அல்லது அவர்களைப் பற்றிய வம்பளப்புகளை பற்றி நாம் அக்கறை படக்கூடாது. உலகத்தின் மக்களுக்கு ஒருவரைப் பற்றி அரட்டை அடிப்பது ஒரு பொழுதுபோக்கு அம்சமாக அமையலாம். நாம் மற்றவர்களை பற்றிய வீணான பேச்சுகளில் ஒருபோதும் ஈடுபடவே கூடாது. மற்றவர்களைப் பற்றி வீணான பேச்சுகளை பேசுவது. மற்றவர்களுடைய குறைகளைப் பற்றி பேசி நகைப்பது போன்றவைகளில் ஈடுபடுவதற்கு முன்பாக இப்படி செய்வது ஆவிக்குரியப் பிரகாரமாக வளர்வதற்கு உதவியாக இருக்குமா? அல்லது தடையாக இருக்குமா என்பதைப் பற்றி சிந்திப்பதற்கு நாம் ஒரு நிமிடம் நிற்கிறோமா? அது மட்டுமல்ல, நாம் எந்த நபரைப் பற்றி பேசுகிறோமோ அந்த நபர் நாம் அவரைப் பற்றி அவதூறாக பேசும்போது நமக்கு முன்னால் நின்றால் நாம் அப்படி பேசுவோமா என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வேறுவிதமாகச் சொன்னால், நம்முடைய உரையாடலில் ஒரு நபர் நம்மோடு சரீரப்பிரகாரமாக இல்லாதபோது, அந்த நபரைப் பற்றி வீணான வார்த்தைகளை பேசுவதற்கு முன்பாக நம்முடைய நோக்கங்களை நாம் பரிசோதித்து பார்த்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாளும் நம்முடைய நாவுகளை நாம் எப்படி பயன்படுத்துகிறோம் என்பது நாம் எந்த சபையின் அங்கமாக இருக்கிறோம் என்பதையும், நாம் சேவிக்கிற தேவன் யார் என்பதையும் பிரதிபலிக்கிறது என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

நாம் ஒருவருடைய தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி, அவருடைய குறைகளைப் பற்றி அவர் இல்லாத நேரத்தில் பேசுவது என்பது ஒரு கோழைத்தனமான செயலாகும். உலகத்தின் மக்கள் இத்தகைய காரியங்களை செய்வதில் ஒருவேளை ஆனந்தம் அடையலாம். ஆனால், தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் வீணான பேச்சுகளில் ஒருபோதும்

ஈடுபடவே கூடாது இது தேவனுக்கு எந்த விதத்திலும் பிரியமாயிராது. எனவே, அரட்டை வம்பளப்பு போன்றவைகள் ஒருபோதும் கிறிஸ்தவ தன்மைகளாக இருக்கவே முடியாது.

இது வேறு சில கேள்விகளை நம்முடைய மனதில் எழுப்புகிறது. ஒருவர் வெளிப்படையாகப் பாவம் செய்வதை நாம் அறிந்திருந்தால், நாம் அவரைப் பற்றி அவதூறாக பேசவேண்டாம் என்பதற்காக நாம் அமைதியாயிருக்கலாமா? இத்தகையச் சூழ்நிலையில் நான் முதலில் அந்த பாவம் செய்த நபரரோடு தனியாகப் பேசி, அந்த நபரை மறுபடியும் நம் தேவனிடத்திற்கு கொண்டு வர முயற்சி எடுக்க வேண்டும். அதன் பிறகும் அந்தக் நபர் மனந்திரும்பவில்லையென்றால் வேத வசனத்தின் படி அந்த காரியத்தை சபைக்கு தெரியப்படுத்த வேண்டும் [மத்தேயு 18:15-17; லூக்கா 17:3]. ஆனால், அதே நேரத்தில், ஒருவர் பாவத்தை குறித்து எந்த மனஸ்தாபமுமில்லாமல் வெளிப்படையாகவே பாவம் செய்து கொண்டிருந்தால், அந்த நபரை குறித்துக் கொண்டு, அந்த நபர் வெட்கப்படும்படிக்கு அவரோடு கலவாதிருக்க வேண்டும்[ 2 தெசலோனிக்கேயர் 3:14,15]. இது ஒருவரைப் பற்றிய அவதூறோஅல்லது வீண் பேச்சோ அல்ல, ஏனென்றால், நாம் இதை அந்த நபருடைய மனந் திரும்புதலுக்காக அதாவது அவருடைய நன்மைக்காக செய்கிறோம். மற்றவரைப் பற்றிய வீணான பேச்சு என்பது அவருடைய பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் விதத்திலோ அல்லது அவருடைய நற்பண்பை சீர்குலைக்கும் நோக்கத்திலோ செய்யப்படுவதாகும்.

நம்முடைய பேச்சை நாம் எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதைப் பற்றி தேவனுடைய வார்த்தை மௌனமாய் இருக்கவில்லை. பழைய ஏற்பாட்டிலும் சரி, புதிய ஏற்பாட்டிலும் சரி வீணான பேச்சைக் குறித்து ஏராளமான வசனங்கள் நமக்கு தரப்பட்டுள்ளன [சங்கீதம் 41:5-8; யோவான் 7:12-13; 3 யோவான் 1:9-10]. நம் நாவை அடக்குவதை குறித்து நீதிமொழிகள் மற்றும் பிரசங்கி புத்தகங்களின் ஆசிரியர்கள் அநேக வசனங்களை பதிவு செய்திருக்கிறார்கள் [நீதிமொழிகள் 10:18-19:21:23; 29:11]; பிரசங்கி 5:2-3]. கிறிஸ்தவர்களாகிய நாம் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மாதிரியை பின்பற்ற வேண்டும். அவர் இந்த பூமியில் வாழ்ந்த நாட்களில் எந்த ஒரு நபரையும் தவறாக அல்லது பொய்யாக குற்றம்சாட்டி தம்முடைய நேரத்தை செலவழிக்கவில்லை. மேலும், கிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத் தீர்ப்பு நாளிலே கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்று சொன்னார் [மத்தேயு 12:36,37].

இன்றைய நாட்களில் தேவன் அநேக தகவல் தொடர்பு சாதனங்களால் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார். ஆனால், நாம் தகவல்களை எப்படி பரிமாறிக்கொள்கிறோம் என்பது நம்முடைய விருப்பமாய் இருக்கிறது. துதித்தலும், சபித்தலும் நம்முடைய ஒரே

வாயிலிருந்து புறப்படக்கூடாது (யாக்கோபு 3:10). கிறிஸ்தவர்களாக நாம் அனாவசியமான வார்த்தைகள் நம்முடைய வாயிலிருந்து புறப்படுவதற்கு முன்பாகவே அதை கட்டுப்படுத்திவிட வேண்டும். அப்படி நாம் கட்டுப்படுத்தவில்லையென்றால், அதன் விளைவுகள் அபாயகரமாயிருக்கும் (நீதிமொழிகள் 11:13:16:28, 25:9-10: 26:20). இந்த பூமியில் நாம் வாழ்வதற்கான நோக்கமே இந்தக் குறுகியகால வாழ்க்கையில் நாம் தேவனை சேவித்து, அநேகரை தேவனை சேவிக்க வைப்பது தான். இந்த நோக்கத்தை நாம் நிறைவேற்ற, உண்மை உள்ளவைகள் எவைகளோ, ஒழுக்கமுள்ளவைளெவைகளோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருக்கவேண்டும் (பிலிப்பியர் 4:8). வீண் பேச்சு அல்லது மற்றவர்களைப் பற்றிய வீண் வம்பளப்பு என்பது கிறிஸ்தவர்களிடையே எந்தச் சூழ்நிலையிலும் காணப்படவே கூடாது. நாம் எல்லோரும் சங்கீதக்காரனைப் போல **கர்த்தாவே, என் வாய்க்குக்காவல் வையும், என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும்** (சங்கீதம் 141:3) என்று ஜெபிக்க கற்றுக் கொள்ள வேண்டும்.

- ★ ***மனிதர்கள் உங்களைப் பற்றி தவறாகப் பேசினால் யாருமே அதை நம்பாதபடி வாழ்ந்து காட்டுங்கள்.***

- ★ ***ஒருவருடைய இல்லத்தில் கிறிஸ்து வெளியே வைக்கப் பட்டால், உள்ளே ஏதோ பிரச்சனை இருக்கிறது என்று அர்த்தம்.***

- ★ ***நாம் நம் கவலைகளை தேவனுடைய கரங்களில் வைக்கும்போது அவர் தம்முடைய சமாதனத்தை நம் இருதயங்களில் வைக்கிறார்.***




# பிலிப்பியர் நிருபம் மூலமாக தேடுதல் வேட்டை

*Rebecca Rushmore*

1. எந்த இரு எதிர்மறையான நோக்கங்களுக்காக சிலர் கிறிஸ்துவை பிரசங்கித்தார்கள்?

2. பவுல் கிறிஸ்தவர்கள் ஒருவரையொருவர் எப்படியாக எண்ணிக் கொள்ள வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்?

3. எந்த நாமத்தில் எல்லோருடைய முழங்கால்களும் முடங்கும்?

4. பவுல் யாரை பிலிப்பி பட்டணத்திலிருந்து சபைக்கு சீக்கிரமாய் அனுப்ப திட்டமிட்டிருந்தார்?

5. பவுல் யாரை ஏற்கனவே அந்த பிலிப்பி பட்டணத்து சபைக்கு அனுப்பி இருந்தார்?

6. பவுல் எந்த கோத்திரத்தை சேர்ந்தவர்?

7. நம்முடைய குடியிருப்பு எங்கே இருக்கிறது?

8. தீமோத்தேயுவைத் தவிர இந்த நிருபத்தில் பவுல் குறிப்பிட்டிருக்கும் மூன்று பெயர்களை எழுதுக?

9. நாம் எந்த நிலையில் மனரம்மியமாய் இருக்க வேண்டும்?

10. பவுல் மூலமாக கிறிஸ்தவர்களுக்கு விசேஷமாக யார் வாழ்த்துதல் சொன்னார்கள்?

அனுதின கிறிஸ்தவ ஜீவியம்

# நீங்கள் உண்மையுள்ள கிறிஸ்தவ மாதிரியாக இருக்கிறீர்களா?

# Are you a Faithful Christian Example?

*Mark N.posey*

ஒருவருடைய உதாரணம் அல்லது மாதிரி மிகவும் வல்லமை வாய்ந்ததாகும். நாம் மாதிரியால் கற்றுக் கொள்கிறோம், கவனிக்கிறோம். வாழ்கிறோம். ஜனங்கள் மற்றவர்கள் எதைச் செய்கிறார்களோ அதை அப்படியே பின்பற்றுகிறார்கள். உதாரணமாக, திரைப்படங்களில் நடிகர் நடிகைகள் செய்வதை பார்த்து அதைப் போல சாதாரண ஜனங்களும் செய்வதை நாம் காணமுடிகிறது. திரைப்பட நட்சத்திரங்கள் அணியும் ஆடைகள் மற்றும் ஆபரணங்களைப் போலவே ஜனங்களும் அணிய ஆசைப்படுவதால் அல்லது அதைப் பின்பற்ற விரும்புவதால் பல நிறுவனங்கள் அந்த ஆடைகளையும், ஆபரணங்களையும் ஆயத்தப்படுத்துவதில் அதிக அக்கறை காட்டி லாபம் ஈட்டுகிறார்கள். அதைப்போல் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் உபயோகப்படுத்தும் ஆடைகள் மற்றும் காலணிகளைப் போலவே பெரும்பாலான மக்களும் அணியவிரும்புகிறார்கள். எனவே, அந்த ஆடைகள் மற்றும் காலணிகளின் வியாபாரம் அமோகமாக நடைபெற்றுக் கொண்டு வருவதை நாம் அறிந்திருக்கிறோம்.

உலகத்தின் மக்கள் திரைப்பட நட்சத்திரங்களையும், விளையாட்டு வீரர்களையும் அப்படியே பின்பற்ற விரும்பும்போது கிறிஸ்தவர்களாகிய நாம் வேதாகம கதாபாத்திரங்களின் மாதிரியைப்பின்பற்ற வேண்டாமா? இப்போது நாம் சில மாபெரும் வேதாகம மாதிரிகளைப் பார்ப்போம் ஆபிரகாம் மாபெரும் விசுவாசம் உடையவராக இருந்தார்.(ரோமர் 4:20) யோசேப்பு மாபெரும் மன்னிக்கும் குணாதிசயத்தைப்பெற்றிருந்தார் (ஆதியாகமம் 50:20) மோசே ஒரு மாபெரும் தலைவராக இருந்தார் (யாத்திராகமம் 14) தாவீது மிகுந்த தைரியம் உடையவராய் இருந்தார்(1 சாமுவேல் 17). ஆனால், எல்லோரையும் விட நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே நமக்கு மிகச்சிறந்த முன்மாதிரியாய் இருக்கிறார் (2 கொரிந்தியர் 5:21). (1 தீமோத்தேயு 4:12-16) வசனங்களில் மிகச்சிறந்த கிறிஸ்தவர்களின் ஏழு பண்புகள் கொடுக்கப்பட்டுள்ளன அவைகளை நாம் கவனிப்போம்.

**1. கிறிஸ்தவ ஒழுக்க நெறிக்கான மாதிரி** (வசனம் 12) உன்னுடைய வார்த்தைகள், நடக்கைகள், அன்பு, ஆவி, விசுவாசம் மற்றும் கற்பு போன்றவைகள் நம் எண்ணங்கள் மற்றும் செயல்பாடுகளில் நிரூபிக்கப்பட வேண்டும். நாம் பிரசங்கிக்கும் மிகச் சிறந்த பிரசங்கம் நம்

வாழ்க்கையால் மற்றவர்களுக்கு பிரசங்கிக்கும் பிரசங்கமேயாகும் (1கொரிந்தியர் 4:16, 11:1, பிலிப்பியர் 3:17).

**2. வேதாகம அஸ்திபாரம்** (வசனம் 13). வேத வாக்கியங்களை வாசிப்பதிலும், அதைப்பற்றி சொல்வதிலும், அதிக நேரத்தை செலவிட வேண்டும்.

3. **தேவனால் கொடுக்கப்பட்டிருக்கிற தாலந்துகளை பயன்படுத்துதல்** (வசனம் 14) தீமோத்தேயு அற்புத அடையாளங்களைச் செய்யும் வரத்தை பெற்றிருந்தார் முதல் நூற்றாண்டின் இறுதியில் அற்புத அடையாளங்கள் செய்யும் வரம் முடிவுக்கு வந்தது (1 கொரிந்தியர் 13:8-12). இருந்தபோதிலும், தேவன் நமக்கு தந்திருக்கும் தாலந்துகளை சிறப்பாக பயன்படுத்த நாம் கற்றுக்கொள்ள வேண்டும். தாலந்துகளின் உவமை தேவன் நமக்கு தந்திருக்கிற தாலந்துகளை நாம் வீணடிக்காமல் அவைகளை தேவனுடைய நாம மகிமைக்காக பயன்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது ( மத்தேயு 25: 1 கொரிந்தியர் 10:31).



**4. நோக்கம் கொண்ட வாழ்க்கை :** நாம் பரிசுத்த ஜீவியத்தை ஜீவிக்க நம்மை நாம் முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும். நம் நோக்கம் நம்முடைய பாதையையும் பலனையும் தீர்மானிக்கும். பவுல் தன்னுடைய நோக்கத்தைப் பற்றி விரிவாகச்சொல்லி யிருந்தார். "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" (பிலிப்பியர் 1:21; (கலாத்தியர் 2:20).

**5. உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கக்கடவது :**

கிறிஸ்தவம் என்பது ஒரு விபத்தல்ல, மாறாக நன்கு தீர்மானிக்கப்பட்ட ஓர் அர்ப்பணிப்பாகும். கிறிஸ்தவர்கள் உறுதியாக இருக்க வேண்டும், தங்கள் ஒளியை மற்றவர்கள் மீது பிரகாசிக்கச் செய்ய வேண்டும். நாம் உண்மையாய் வாழ வேண்டும். நம்முடைய ஜீவியங்கள் மற்றவர்கள் பார்த்து பின்பற்றமத்தக்க மிகச்சிறந்த பரிசுத்த ஜீவியத்தை உள்ளடக்கிதாகயிருக்க வேண்டும் (1 பேதுரு 1:13-16).

**6. சகிப்புத்தன்மையுடன் நிலைத்திருத்தல் (வசனம் 16) :** நாம் நம் வாழ்க்கையின் இரண்டு பகுதிகளில் கவனம் செலுத்தி அவைகளில் நிலைத்திருக்க வேண்டும். முதலாவது சுயம், இரண்டாவது உபதேசம். நாம் பாடுகளின் போதும், உபத்திரங்களின் போதும் சகிப்புத்தன்மையை வெளிப்படுத்தினால் மற்றவர்களுக்கு முன்பாக மிகச்சிறந்த முன்னுதாரணங்களாக இருப்போம். (எபிரேயர் 10:32-37).

**7. தெளிவான நோக்கம் (வசனம் 16) :** நம்முடைய மிகப்பெரிய தேவை இரட்சிப்பு தான். நம்மை நாமே பரிசோதித்து, உபத்திரங்களை சகித்து, நித்தியத்தைக் குறித்து சிந்திக்கிறவர்களாக இருந்தால் நம்முடைய சிந்தை சரியாகத்தான் இருக்கும். Thomas Jefferson என்னும் வேத வல்லுநர் இவ்விதமாய்ச் சொன்னார் **கிறிஸ்தவர்களாகிய நாம் இவ்வுலகம் கிறிஸ்தவத்தை நம்மைப் பார்த்து தீர்ப்பு செய்கிறது என்பதை உணர்ந்துச் கொள்ள வேண்டும்** என்றுச் சென்னார். ✝

## வசனம் தரும் ஆறுதல்

- ✓ நீங்கள் ஆவிக்குரிய போராட்டம் கடுமையாக இருக்கிறதே என்று நினைத்தால் சங்கீதம் 27 ஐ தியானியுங்கள்.
- ✓ நீங்கள் ஆவிக்குரிய காரியங்களில் குறைவுள்ளவர்கள் என உணர்ந்தால் ரோமர் 8 ஐ தியானியுங்கள்.
- ✓ நீங்கள் மற்றவர்களிடத்தில் காட்டும் அன்பிலும், தேவனிடத்தில் காட்டும் அன்பிலும் பெலவீனமாக இருந்தால் I கொரி 13 ஐ தியானியுங்கள்.
- ✓ நீங்கள் தேவனுடைய பிரமாணத்தைப் பற்றிய அறிவில் குறைவுள்ள வர்களாக இருந்தால் யாத்திராகமம் 20 : மத்தேயு 23 : 34 - 40 பகுதிகளைத் தியானியுங்கள் .
- ✓ நீங்கள் மன்னிக்க சிரமப்பட்டாலோ அல்லது மன்னிப்பைத் தேட சிரமப்பட்டாலோ சங்கீதம் 32 மற்றும் மத்தேயு 18 ஐ தியானியுங்கள்.

**வேதாகம கதாபாத்திரம்**

# நமக்கு பினெகாஸின் புதிய தலைமுறை தேவை

## We Need a New Generation of Phinachases

*Hiram Kemp*

**இ**ஸ்ரவேல் பிள்ளைகள் எகிப்திலிருந்து கானான் தேசத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்களுக்கு வழியில் காணப்பட்ட தடைகளை மேற்கொள்வது அவசியமாய் இருந்தது. அவர்களுக்கு விசுவாசத்தோடு மாத்திரமல்ல ஆகாரம் மற்றும் அந்திய சத்துருக்களோடும் பிரச்சினைகள் இருந்தன. அந்த வனாந்தர யாத்திரையில் இஸ்ரேல் ஜனங்கள் எதிர்கொண்ட மிகப் பெரிய பிரச்சினைகளில் ஒன்று பாலாக் ராஜா கூலி கொடுத்து பிலேயாம் தீர்க்கதரிசியை தூண்டி தேவனுடைய ஜனங்களை சபிக்க சொன்னது தான். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களை சபிக்க கூடாதென்று தேவன் தடுத்தார். மேலும், பிலேயாம் இஸ்ரவேல் ஜனங்களை சபிக்க அல்ல ஆசீர்வதிக்கும்படியாகவே அனுமதிக்கப்பட்டிருந்தார் (எண்ணாகம் 23:1-12, 25-26) பிலேயாம் தன்னுடைய பேச்சால் இஸ்ரவேல் ஜனங்களை சபிக்க முடியாது. என்று உணர்ந்து கொண்ட போது இஸ்ரவேல் புத்திரர் மோவாபிய ஸ்திரீகளோடு வேசித்தனம் பண்ணும்படி சிக்க வைத்தான் (எண்ணாகமம் 25:1) இஸ்ரவேல் புத்திரர் பிலேயாமின் வலையில் விழுந்து வேசித்தனம் செய்ததோடு மோவாபியரின் விக்கிரங்களையும் சேவித்தார்கள். இப்படி இஸ்ரவேலர் பாகால்பேயோரைப் பற்றிக்கொண்டார்கள், அதனால் இஸ்ரவேலர்மேல் கர்த்தருடைய கோபம் மூண்டது எண்ணாகமம் 253) இதன் காரணமாக தேவன் மோசேயை நோக்கி விக்கிரக ஆராதனை செய்தவர்களினிமித்தம் பொல்லாப்பு அங்கே இராதபடிக்கு அவர்களை கொன்று போடும் படியாகச் சொன்னார் (எண்ணாகமம் 25:4-5; யாத்திராகமம் 20:2-6)



இஸ்ரவேல் ஜனங்கள் வேசித்தனத்தோடு சேர்த்து விக்கிரக ஆராதனையிலும் ஈடுபட்ட படியால் தேவன் தம்முடைய கோபத்தை அவர்கள் மீது வெளிப்படுத்தின பிறகு, சிம்ரி என்னும் பேர் கொண்ட இஸ்ரவேலன் ஒருவன் (எண்ணாகமம் 25:14) ஒரு மீதியானிய ஸ்திரீயை அழைத்துக் கொண்டு தன் சகோதரரிடத்தில் வந்தான் அந்த மீதியானிய ஸ்தீரியின் பெயர் கஸ்பி என்பதாகும் (எண்ணாகமம் 25: 15)

அந்த இஸ்ரவேலன் தடை செய்யப்பட்ட மீதியானிய ஸ்திரீயை அழைத்து வந்ததுமல்லாமல் எல்லோருக்கும் முன்பாகவும் அவன் அந்த காரியத்தை செய்தான். அந்த நேரத்தில் ஆசாரியனாகிய ஆரோனின் பேரனான பினெகாஸ் நடுச்சபையிலிருந்து எழுந்து ஒரு ஈட்டியை தன் கையிலே பிடித்து வேசித்தனம் பண்ணின இருவரையும் ஈட்டியாலே கொன்று போட்டான் (எண்ணாகமம்25:7,8) தேவன் பினெகாசை ஆசீர்வதித்து இஸ்ரவேலின் மீது தான் கொண்டிருந்த கோபத்திலிருந்து விலகினார் (எண்ணாகமம் 25 10-15) இந்த பழைய ஏற்பாட்டு சம்பவத்தில் தேவகோபாக்கினை வெளிப்படுத்தப்பட்ட விதமும், அங்கு கொடுக்கப்பட்ட தண்டனையும் பலரால் ஏற்றுக் கொள்ளப்பட கடினமாக இருந்தாலும் கூட, நாம் நினைவில் கொண்டு நடைமுறைப்படுத்த, ஆழமான உண்மைகளை அது நமக்கு போதிக்கிறது. இன்றைய நாட்களில் பினெகாசின் முன்னுதாரணத்தைப் பின்பற்ற அநேகர் அவசியப்படுகிறார்கள்

**பெருங்கூட்டத்தை பின்பற்ற விரும்பாத தைரியம்**

சிம்ரி என்னும் பெயர் கொண்ட அந்த இஸ்ரவேலன் ஒரு மீதியானிய ஸ்திரீயை ஜனங்களுக்கு முன்பாக அழைத்து வந்தபோதுஅங்கே இருந்தவர்கள் அந்த செயல் தவறுதான் என்று சொல்லி முணுமுணுத்திருப்பார்கள், ஆனால், அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. சில வேளைகளில் நாம் சில காரியங்களை பார்க்கிறோம் அவர்கள் தவறு செய்கிறார்கள் என்று நமக்கு நன்றாய் தெரியும். ஆனாலும், அதை குறித்து நாம் தைரியமாய் பேசுவதற்கோ அதற்காக ஏதோ ஒன்றை செய்வதற்கோ நமக்கு தைரியம் வருவதில்லை. எப்போதுமே பெரும்பான்மை சரியாக இருப்பதில்லை. அது மட்டுமல்ல, பெரும்பாலானோர் மௌனமாய் இருப்பதினால் நாமும் மௌனமாய் இருக்க வேண்டுமென்று அவசியமில்லை.

(யாத்திராகமம் 23:2) உலகில் பெரும்பாலான மக்கள் அழிவுக்கு அழைத்துச் செல்லும் விரிவான வாசலில் தான் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள், அப்படிப்பட்டவர்கள் அநீதிக்கு எதிராக குரல் எழுப்புவார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது மத்தேயு 7:13,14) இங்கே பினெகாஸ் தவறான காரியத்தைக் கண்டபோது, சரியாக செயல்படுவதற்கு மற்றவர்களுடைய ஒப்புதலைப் பெற விரும்பவில்லை. ஏனென்றால், இந்த பினெகாஸ் சிம்ரி மற்றும் கஸ்பியின் விபச்சாரம் மற்றும் விக்கிரக ஆராதனை தேவனை காயப்படுத்தியிருக்கும் என்று அறிந்திருந்தார் (சங்கீதம் 139:21-22).

இன்றைய நாட்களில் இவ்வுலகத்தின் குருட்டுத்தனமான கலாச்சாரத்தைப் பின்பற்றாத பினெகாசைப் பின்பற்றும் புதிய தலைமுறை தேவைப்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்களால் தான் இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டை பின்பற்ற முடியும் (மத்தேயு 15:14) மற்றவர்கள் தவறு செய்யும் போது நாம் மௌனமாய் இருப்பதன் மூலமாக

அந்தச் செயலை நாம் அங்கீகரிக்கிறோம். அப்படி நாம் செய்தால் தேவனுக்கு கணக்கு கொடுக்க வேண்டும். ரோமர்1:32] ஜனங்கள் பெரும்பான்மையை பின்பற்றாமல் சிலுவையின் வழியை பின்பற்றும்போது தேவன் பிரியப்படுகிறார். ஆம் பினெகாசைப்போல் நாம் இருந்தால் எல்லோரும் செய்வது போல செய்யும் அந்த சோதனையிலிருந்து நாம் தப்பித்துக் கொள்ள முடியும்.

**தேவனுக்காக பக்தி வைராக்கியம்**

தேவன் பினெகாசை ஆசீர்வதித்தபோது அவன் தேவனுக்காக பக்தி வைராக்கியம் உடையவனாய் இருந்தபடியினால்தான் அவனால், தேவனுக்காக நிற்கமுடிந்தது [எண்ணாகமம் 25:11] விபச்சாரத்தில் ஈடுபட்ட சிம்ரி மற்றும் கஸ்பி ஆகிய இருவரையும் இந்த பினேகாஸ் அவர்கள் மீது இருந்த வெறுப்பின் காரணமாக கொன்று போடவில்லை மாறாக தேவன் அச்செயலை வெறுக்கிறார் என்பதற்காகவே தேவனுக்காக நின்று கொன்று போட்டார் என்று நாம் உணர வேண்டும். பினெகாஸ் தேவனுடைய அங்கீகரிப்பைப் பெற வேண்டுமென்றால் தேவ விரோத செயல்களுக்கு எதிராக நிற்க வேண்டியது அவசியமாய் இருந்தது. ஆனால், அந்த மனப்பான்மையை தேவன் வைராக்கியம் என்று விவரிக்கிறார். இங்கே பினெகாஸ் தேவனுக்காக பக்தி வைராக்கியத்தை காண்பித்தான் என்பது எபிரெய பாஷையில் ஆதரவாக பேசுவது அல்லது ஒருவருக்காக பிரச்சாரம் செய்வது என்று பொருள்படும். இங்கே உண்மையாகவே இந்த பினெகாஸ் பரலோகத்தின் தேவனுடைய பக்கம் நின்று அவருக்கு ஆதரவாக செயல்பட்டிருக்கிறான் [யாத் 32:25,26].

வனாந்திரத்தில் இந்த பினெகாஸ் செய்தது போல நாம் கர்த்தருக்காக பக்தி வைராக்கியம் உடையவர்களாயிருந்து, கர்த்தருக்காக பேசுகிறவர்களாகக் காணப்பட வேண்டும். தேவன் ஓரினச்சேர்க்கை அருவருப்பானது என்று சொல்லும் போது, நம்மைச் சுற்றிலும் உள்ள உலகத்திற்கு நாம் தேவன் பக்கத்தில் இருக்கிறோம் என்பதை காட்டுவதற்காக தேவன் என்ன சொன்னாரோ அதையே நாம் சொல்ல வேண்டும். [ரோமர் 1:26.27 லேவியராகமம் 18:22] அதே போல் நாம் மனித உபதேசங்களிலிருந்து விடுபட்டு இருக்கிற புதிய ஏற்பாட்டு தூய ஆராதனையைக் குறித்து பேசும்போது நாம் கர்த்தருக்காக பக்தி வைராக்கியம் உடையவர்களாக இருக்க வேண்டும் [மத்தேயு 15:7-9]. தேவனுக்காக பக்தி வைராக்கியமாய் இருப்பது என்பது தேவனைப் பற்றியும், அவருடைய காரியங்களைப் பற்றியும் பரவசமாய் இருப்பதைக் குறிக்கும். தேவனுக்காக பக்தி வைராக்கியமாய் இருப்பது என்பது ஓர் உணர்வு மாத்திரமல்ல. அதைத் தாண்டி நாம் எப்படி தேவனுக்காக நடந்து கொள்கிறோம் என்பதைப்பற்றியதாகும். ஆனால், நம்முடைய வைராக்கியம் அறிவுக்கேற்ற வைராக்கியமாய் இருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கதாகும் [ரோமர் 10:1-4] தேவனுக்கான நம்முடைய வைராக்கியம் கடினமான காலகட்டங்களில் கூட தேவனுக்காக பேசவும்,

அவருக்காக சேவை செய்யவும் நம்மை தூண்ட வேண்டும் [மத்தேயு 16:24,25].

## இவன் தேவனோடு சமாதானத்தை அனுபவித்தான்

பினெகாஸ் தேவனுக்காக காட்டிய தைரியம் மற்றும் உறுதிபாட்டின் விளைவாக தேவன் அவனுக்கு சமாதானத்தைக் கொடுத்தார் [எண்ணாகமம் 25:12] மனிதர்களோடு சமாதானமாய் இருப்பதை காட்டிலும் தேவனோடு சமாதானமாய் இருப்பது தான் முக்கியமானது. இந்த பினெகாஸ், சிம்ரி மற்றும் கஸ்பி ஆகிய இருவரையும் கொன்று போட்டதன் மூலமாக பலரால் சமாதானத்தை சீர் குலைக்கிறவனாக பார்க்கப்பட்டான் உண்மையில் இவன் அப்படிச் செய்ததால் தேவகோபாக்கினையை ஜனங்களிடமிருந்து எடுத்துப்போட்டான் அதன் விளைவாக தேவனோடு சமாதானத்தைக் கொண்டிருந்தான் நாம் சமாதானம் பண்ணுகிறவர்களாக இருக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார் [மத்தேயு 59] தேவன் இயேசுவின் சிலுவையிலிருந்து வழிந்தோடிய இரத்தத்தால் சமாதானத்தை உண்டு பண்ணினார் [கொலோசெயர் 1:20] நாம் மனிதர்களோடு சமாதானமாய் இருப்பதை காட்டிலும் தேவனோடு சமாதானமாய் இருப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

## முடிவுரை

நாம் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் பழைய ஏற்பாடு எழுதப்பட்டு, பாதுகாக்கப்பட்டிருக்கிறது [ரோமர் 15:4] இவ்வுலகம் கிறிஸ்தவர்களாகிய நம்முடைய வாயை அடக்கிநம்டைய கைகளைக்கட்ட விரும்புகிறது. ஆனால், நாம் இந்த உலகத்தை முழு மூச்சோடு எதிர்க்க வேண்டும். [I யோவான் 5:4] நீதியைப் பற்றி நமக்குள்ளே பேசிக்கொள்வது போதுமானதல்ல. நாம் கிறிஸ்தவத்தைக் குறித்து வெளிப்படையாகவே உலகத்திற்கு சொல்ல வேண்டும். நாம் மற்றவர்களிடம் மரியாதையாகவும் அன்பாகவும் இருந்து கொண்டே தேவனுக்காக நிற்கவும் பாவத்திற்கு எதிராக போராடவும் முடியும். [2 தீமோத்தேயு 2:24-26] இன்றைய நாட்களில் தேவனுக்காக நிற்கவும் தீமையை எதிர்கொள்ளவும் அதன் விளைவாக தேவ சமாதானத்தை பெற்றுக் கொள்ளவும் அநேக பினெகாஸ்கள் அவசியப்படுகிறார்கள். ✝

---

### இவைகளில் வளர வேண்டும்

- விசுவாசத்தில் முதிர்ச்சி அடைந்து **வளர வேண்டும்**
- நம்பிக்கையில் **வளர வேண்டும்**
- நன்றியாய் இருப்பதில் **வளர வேண்டும்**
- பிறருக்கு உதவி செய்வதில் **வளர வேண்டும்**
- போதுமென்கிற மனதிருப்தியில் **வளர வேண்டும்.**

# அப்போஸ்தலருடைய நடபடிகள் ஆறாம் அதிகாரத்திலிருந்து தலைமைத்துவப் பாடங்கள்
# Leadership Lessons from Acts 6

*Cecil may.Jr*

**அ**ந்நாட்களிலே, சீஷர்கள் பெருகினபோது, கிரேக்கரானவர்கள், தங்கள் விதவைகள் அன்றாடவிசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லையென்று எபிரெயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள். அப்பொழுது பன்னிருவரும் சீஷர் கூட்டத்தை வரவழைத்து, நாங்கள் தேவவசனத்தைப் போதியாமல், பந்திவிசாரணைசெய்வது தகுதியல்ல.

ஆதலால் சகோதரரே, பரிசுத்தஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்துகொள்ளுங்கள் அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம் நாங்களோ ஜெபம்பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள். இந்த யோசனை சபையாரெல்லாருக்கும் பிரியமாயிருந்தது. அப்பொழுது விசுவாசமும் பரிசுத்தஆவியும் நிறைந்தவனாகிய ஸ்தேவானையும் பிலிப்பையும், பிரொகோரையும், நிக்கானோரையும், தீமோனையும். பர்மெனாவையும், யூதமார்க்கத்தமைந்தவனான அந்தியோகியா பட்டணத்தானாகிய நிக்கொலாவையும் தெரிந்துகொண்டு. அவர்களை அப்போஸ்தலருக்கு முன்பாக நிறுத்தினார்கள். இவர்கள் ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள். (அப்போஸ்தலர் 6:1–6)

## முறுமுறுப்பு

அந்நாட்களிலே, சீஷர்கள் பெருகினபோது, கிரேக்கரானவர்கள். தங்கள் விதவைகள் அன்றாட விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லையென்று, எபிரெயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள் (அப்போஸ்தலர் 6:1). முறுமுறுப்பு ஒரு பயங்கரமான பாவம் என்று (1கொரிந்தியர் 10:10)ல் நாம் வாசிக்கிறோம். கிறிஸ்தவர்களாகிய நாம் அதில் ஒருபோதும் ஈடுபடக் கூடாது என்று எச்சரிக்கப்பட்டிருக்கிறோம் (பிலிப்பியர் 2:14). முறுமுறுப்பு ஒருபோதும் கிறிஸ்தவ பண்பாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. ஆனால்,



இங்கே அப்போஸ்தலர்கள் முறுப்பை கண்டிப்பதற்கு பதிலாக முறுமுறுப்பை கவனித்து அங்கே உண்மையாகவே பிரச்சனை உண்டானதைப் புரிந்து கொண்டார்கள். பிரச்சனைகளை தீர்ப்பது, மக்களை சாந்தப்படுத்துவது, சமாதானம் பண்ணுவது போன்றவைகளெல்லாம் முக்கியமானது தான் எனவே அப்போஸ்தலர்கள் அங்கே எழுந்த பிரச்சனைக்கு உடனடியாகத் தீர்வு காணமுயன்றார்கள்.

**பிரதிநிதித்துவம்**

அப்போஸ்தலர்கள் தொடர்ந்து ஜெபம்,பிரசங்கம் மற்றும் போதனைகளுக்குக் கவனம் செலுத்த வேண்டும். ஆனால், அதே நேரத்தில் தேவையானவர்களுக்கு கொடுக்க வேண்டிய உதவிகளும் சமமாக கொடுக்கப்பட வேண்டும். எனவே, பந்தி விசாரணை மற்றவர்களிடத்தில் மாற்றி விடப்பட்டது. அதைப்போல் மூப்பர்களுக்கு சபையை மேய்ப்பது மற்றும் கண்காணிப்பது போன்ற மிக முக்கியமான பணிகள் உள்ளன. உதவிக்காரர் தங்கள் பொறுப்புகளை புரிந்து கொள்ளும் போது இந்த பிரதிநிதித்துவம் நன்றாக வேலை செய்கிறது. அதே நேரத்தில் மூப்பர்களும் உதவிக்காரரை நம்பி அந்தப் பொறுப்புகளை கொடுக்க வேண்டும்.

**சபை தெரிந்தெடுக்கிறது, அப்போஸ்தலர்கள் நியமிக்கிறார்கள்**

சபையில் தலைமைத்துவத்திற்கு நபர்களை தெரிந்தெடுப்பதற்கான வேதாகம மாதிரி இதோ: ஆதலால் சகோதரரே, பரிசுத்தஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்துகொள்ளுங்கள். அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம்' [அப்போஸ்தலர் 8:3]. இன்றைய நாட்களில் மூப்பர்கள் தாங்களாகவே முடிவெடுக்கும் தன்மை கொண்டவர்களாக இருக்கிறார்கள். தற்போது பொறுப்பிலிருக்கும் மூப்பர்கள் புதிய மூப்பர்களை தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால் நாம் பார்த்துக் கொண்டிருக்கிற வேதாகம மாதிரியில் மூப்பர்களுக்கான தகுதி அம்சங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன சபை தான் அவர்களை தேர்ந்தெடுக்கிறது.

**பின்பற்றப்பட வேண்டிய மாதிரி**

இங்கே விசாரிக்கப்படாத விதவைகள் எபிரேய விதவைகள் அல்ல, மாறாக கிரேக்க விதவைகளாய் இருந்தார்கள். இங்கே சபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு பேர்களில் எல்லோருமே கிரேக்கர்கள்தான். அவர்களில் ஒருவர் கூட சவுலோ, சாமுவேலோ சிமியோனோ அல்ல. இங்கே விசாரிக்கப்படாதவர்கள் தான் பிரச்சனையை சரி செய்ய தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

# சிலர் வேத வாக்கியங்களைப் பற்றி அறியாமல் தவறான எண்ணம் கொண்டிருக்கிறார்கள்.

# Some are Mistaken not Knowing the Scriptures

*Sunny David*

இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்த நாட்களில் யூதர்கள் மத்தியில் மிகப்பிரபலமான மதப்பிரிவுகளாக பரிசேயர்களும், சதுசேயர்களும் இருந்தார்கள். அவர்கள் கிறிஸ்துவின் வெளிப்படையான, உண்மையான போதனைகளை தங்களுக்கு அச்சுறுத்தலாகப் பார்த்தார்கள். எனவே தான் அவர்கள் பலமுறை இயேசு கிறிஸ்துவை சிக்கவைக்க பல வகையான கேள்விகளைக் கேட்டார்கள். அதுமாத்திரமல்லாமல், இயேசுவை அவருடைய பேச்சில் பலமுறை சிக்க வைக்க முயற்சித்தார்கள். அவ்விதமான உள்நோக்கத்துடன் அவசியமில்லாத தந்திரமான கேள்விகளை இந்த பரிசேயர்களும், சதுசேயர்களும் இயேசுவிடம் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தார்கள். இருந்தபோதிலும், இயேசு கிறிஸ்து ஒவ்வொரு முறையும் அவர்களுடைய குற்றச்சாட்டுகளை தவறென்று சுட்டிக்காட்டினார். அவர்களை மௌனமாக்கினார். ஒரு சந்தர்ப்பத்தில் இயேசு கிறிஸ்து அந்தப் பரிசேயர்களின் கேள்விகளுக்கு தக்க பதிலடி கொடுத்ததை நாம் பின்வருமாறு காண முடியும். உயிர்த்தெழுதல் இல்லை என்று சாதிக்கிற சதுசேயர் அன்றையதினம் அவரிடத்தில் வந்து போதகரே, ஒருவன் சந்தானம் இல்லாமல் இறந்துபோனால், அவனுடைய சகோதரன் அவன் மனைவியை விவாகம் பண்ணி, தன் சகோதரனுக்குச் சந்தானம் உண்டாக்கவேண்டும் என்று மோசே சொன்னாரே எங்களுக்குள்ளே சகோதரர் ஏழுபேர் இருந்தார்கள், மூத்தவன் விவாகம் பண்ணி, மரித்து, சந்தானமில்லாததினால் தன் மனைவியைத் தன் சகோதரனுக்கு விட்டுவிட்டுப்போனான். அப்படியே இரண்டாம் மூன்றாம் சகோதரன் முதல் ஏழாம் சகோதரன் வரைக்கும் செய்தார்கள். எல்லாருக்கும் பின்பு அந்த ஸ்திரீயும் இறந்துபோனாள்.

ஆகையால், உயிர்த்தெழுதலில் அவ்வேழுபேரில் எவனுக்கு அவள் மனைவியாயிருப்பாள்? அவர்கள் எல்லாரும் அவளை விவாகம்பண்ணி யிருந்தார்களே என்று கேட்டார்கள் இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தர மாக: நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள் ளுகிறீர்கள். உயிர்த்தெழுதலில் கொள்வனையும் கொடுப்பனையும் இல்லை. அவர்கள் பரலோகத்திலே தேவதூதரைப்போல் இருப்பார்கள்.

மேலும் “மரித்தோர் உயிர்த்தெழுதலைப்பற்றி நான் ஆபிரகாமின்

தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிறேன் என்று தேவனால் உங்களுக்கு உரைக்கப்பட்டிருக்கிறதை நீங்கள் வாசிக்கவில்லையா?

தேவன் மரித்தோருக்குத் தேவனாயிராமல் ஜீவனுள்ளோருக்குத் தேவனாயிருக்கிறார் என்றார்" (மத்தேயு 22:23– 32).

மேற்சொல்லப்பட்ட கேள்விகளுக்கெல்லாம் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வசனத்தின் அடிப்படையில் பொருத்தமாக பதிலடி கொடுத்தார். அவர்கள் உயிர்த்தெழுதலை குறித்து வேத வாக்கியங்களின் உபதேசத்தை அறிந்திருந்தால், அவ்விதமாக கேள்வி கேட்டுடிருக்க மாட்டார்கள். மேலும், அவர்கள் தேவனுடைய வல்லமையை நன்றாக அறிந்திருந்தால் இவ்விதமான கேள்விகளை கேட்டிருக்கமாட்டார்கள். ஆனால், இங்கே இயேசு கிறிஸ்து அவர்களுடைய கேள்விகளுக்கு பதில் அளிப்பதற்கு முன்பாக சொன்ன வார்த்தைகளை கவனியுங்கள் இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: "நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்" (மத்தேயு 22:29).

இன்றைய நாட்களில் கிறிஸ்தவத்தில் ஏன் இத்தனை நம்பிக்கைகளும், முரண்பாடான உபதேசங்களும் காணப்படுகின்றன என்று ஜனங்கள் ஆச்சரியப்படுகிறார்கள். சிலர் வேத வாக்கியங்களை வியாக்கியானம் செய்வதில் தான் பிரச்சனை ஏற்படுகிறது என்று சொல்லுகிறார்கள். இந்த கூற்று உண்மையாயிருக்குமானால், அது பாவமாகும் ஏனென்றால், "தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்" என்று 2 (பேதுரு 1:21)ல் நாம் வாசிக்கிறோம். இங்கே உண்மையான பிரச்சனை என்னவென்றால், வேத வாக்கியங்களை அவர்கள் ஆராய்ந்து பார்ப்பதற்குப்பதிலாக பெரும்பாலான ஜனங்கள் வேத வாக்கியங்களை படிக்க வேண்டிய அளவுக்கு அவர்கள் படிக்காத காரணத்தினால் வேத வாக்கியங்களை பகுத்து போதிக்க அவர்களால் இயலாது( 2 தீமோத்தேயு 2:15). மேலும், பெரும்பாலான ஜனங்கள் வேத வாக்கியங்களை தாங்கள் முன்கூட்டியே தீர்மானித்த மார்க்கப்பிரிவினை (யோவான் 5:39) மனிதர்களால் எழுதப்பட்ட வியாக்கியான கண்ணோட்டத்தால் காண்கிறார்கள். மேலும், அவர்கள் மனிதனால் உண்டாக்கப்பட்ட புத்தகங்களையும், வர்ணனைகளையும் படிக்கிறார்கள் அவைகளைப் படித்து விட்டு அந்த வார்த்தைகளை தேவனுடைய சத்தியம் என்று நம்புகிறார்கள்.

ஒரு வியாக்கியான புத்தகத்தையோ,அல்லது ஒரு வர்ணனை புத்தகத்தையோ படித்துப் பார்ப்பதில் எந்த தவறும் இல்லை. அதாவது அந்த வியாக்கியான புத்தகத்தின் ஆசிரியருடைய வார்த்தைகளால் ஜனங்கள்

இழுக்கப்படாத வரை வெறுமனே அவைகளை படித்துப் பார்ப்பதில் தவறு ஏதுமில்லை. ஆனால், பெரும்பாலான நேரங்களில் ஜனங்கள் மனிதர்களால் எழுதப்பட்ட வியாக்கியான புத்தகங்களுக்கும் வர்ணனை புத்தகங்களுக்கும் கொடுக்கின்ற முக்கியத்துவத்தை தேவ ஆவியால் அருளப்பட்டிருக்கிற வேத வாக்கியங்களுக்கு கொடுக்காமல் போய்விடுகிறார்கள் அதுதான் வேதனைக்குரிய விஷயமாகும். சில வேளைகளில் ஜனங்கள் புகழ்பெற்ற புத்தக ஆசிரியர்களால் ஈர்க்கப்பட்டு, அவர்களுடைய வார்த்தைகளை வேதாகமத்திற்கான அதிகாரமாக ஏற்றுக்கொள்கிறார்கள் எனவே ஒரு குறிப்பிட்ட பாடத்தை பற்றி ஒரு வேத வித்தகர் தவறான காரியங்களை போதித்தாலும் கூட அதை உண்மை என்று நம்பி விடுகிறார்கள். கடந்த சில நூற்றாண்டுகளில் காரியங்கள் இவ்விதமாகத்தான் நடந்தேறி இருக்கின்றன. அதன் விளைவுகளைத் தான் நாம் இப்போது அறுத்துக் கொண்டிருக்கிறோம்.

தங்களை வேத வித்தகர்கள் என்று அழைத்துக் கொள்ளும் தேவ ஆவியால் ஏவப்படாத இந்த மனிதர்கள் வேறு விதமாகச் சொன்னால் பல்வேறுபட்ட நாமகரண கூட்ட ஸ்தாபகர்கள் முன்பெல்லாம் விசுவாசத்தினாலே மாத்திரம் இரட்சிப்பு ஆதாமின் பாவத்தை நாம் இன்னும் சுமக்கிறோம். குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்தல் தெளிப்பு ஞானஸ்நானம் போன்றவைகளுக்கு ஆதரவாகப் பேசினார்கள். அதுமாத்திரமல்ல மார்க்கப்பிரிவினை சபை தலைவர்கள் கர்த்தருடைய பந்தியை ஒரு சடங்காச்சாரமாகவும் மாற்றி வேதாகமம் சொல்கிறபடி வாரந்தோறும் கர்த்தருடைய பந்தியை அனுசரிக்காமல் மாதத்திற்கு ஒருமுறை அல்லது வருடத்திற்கு ஒருமுறை கூட அனுசரிக்கிறார்கள். இன்னும் பெரும்பாலான ஜனங்கள் கிறிஸ்துமஸ் மற்றும் ஈஸ்டர் போன்ற பண்டிகைகளை வெகு விமரிசையாக அவர்கள் கொண்டாடுவதை நாம் அறிந்திருக்கிறோம். உலகம் முழுவதிலும் லட்சக்கணக்கான மக்கள் மனித உபதேசங்களைப் பற்றி வேத வாக்கியங்கள் என்ன சொல்லுகின்றன என்பதை அறியாமல் அவைகளை உயர்த்திப் பிடித்துக் கொண்டு அவர்களைப் பின்பற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மார்க்கப் பிரிவினை சபைகளும் வித்தியாசமான நம்பிக்கைகளையும் கொள்கைகளையும் கொண்டிருக்கின்றன. அப்படி இல்லையென்றால் ஒருவரும் பிரிந்து போகாமல் எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களே அவர்கள் எல்லோரும் வேதாகமத்தை விசுவாசிக்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில் மனித கொள்கைகளையும் ஒழுக்க நெறி புத்தகங்களையும், விசுவாச அறிக்கை புத்தகங்களையும் விசுவாசிக்கிறார்கள். உண்மையில், அவர்கள் எல்லோரும் வேதாகமம் எவைகளை போதிக்கிறதோ அவைகளால் பிரிந்திருக்கவில்லை மாறாக, மனித உபதேசங்களில் என்ன போதிக்கப்பட்டிருக்கிறதோ அதில் தான் பிரிந்திருக்கிறார்கள். இந்த உலகத்தில் வேதாகமத்தை மாத்திரம் பின்பற்றும் ஒரு மார்க்கப்பிரிவினைசபை கூட இல்லை. அதே நேரத்தில்

ஒரு சபை வேதாகமத்தை மாத்திரம் பின்பற்றினால் பிரிவினை சபையாக இருக்க முடியாது.

வேதாகமம் போதிக்கிறதை நாம் எல்லாரும் ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால், மனிதர்கள் போதிக்கிறதை நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால், மனிதர்கள் ஒருவரிடமிருந்து ஒருவர் வித்தியாசமாகவும் வேதாகமத்திலிருந்து வேறுபட்டும் போதிக்கிறார்கள். உதாரணமாக, நாம் கிறிஸ்தவர்களாக மாத்திரமே இருக்கிறோம் என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வோம். ஏனென்றால், ஆரம்ப நாட்களில் கிறிஸ்துவை பின்பற்றினவர்கள் இவ்விதமாகத்தான் அழைக்கப்பட்டதாக வேதாகமம் போதிக்கிறது (அப் 11:26; 1 பேதுரு 4:16). ஆனால், நாம் ஒருவரும் மெதடிஸ்டுகள் என்றோ பெந்தக்கோஸ் தேகாரர்கள் என்றோ பாப்டிஸ்ட்கள் என்றோ அழைக்கப்படுவதை ஏற்றுக்கொள்ளமாட்டோம். மேலும், இன்றைய நாட்களில் உலகத்தில் காணப்படும் எல்லா மார்க்கப் பிரிவினை சபைகளும் தேவனுடைய சித்தத்திற்கு எதிராகத்தான் இருக்கின்றன ( 1 கொரிந்தியர் 1 :10–13 யோவான் 17:20–21). அவர்கள் வேதவாக்கியங்களை அறியாத காரணத்தினால் தவறு செய்கிறார்கள்.

சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று , நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். ஏனெனில், என் சகோதரரே, உங்களுக்குள்ளே வாக்குவாதங்கள் உண்டென்று குலோவேயாளின் வீட்டாரால் உங்களைக்குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது.

உங்களில் சிலர்: நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும், நான் கேபாவைச் சேர்ந்தவனென்றும், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால், நான் இப்படிச் சொல்லுகிறேன்.

கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையிலறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? (1 கொரிந்தியர் 1:10 –13).

✝

**எப்போதாவது நினைத்துப் பார்த்ததுண்டா ?**

பாவ மன்னிப்புக்காக முழுக்கு ஞானஸ்நானம் பெறுவது ஒரு எளிமையான செயலாயிருந்தாலும் கூட பெரும்பாலான மதப் போதகர்களால் ஏன் அது தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது, குழப்பப்படுகிறது, மறுக்கப்படுகிறது? குழப்பத்தால் மறுபிறப்பை தடுக்க முடியும் என்பதை சாத்தான் அறிந்திருப்பதால் அப்படி யிருக்குமோ?

தேவனுடைய வார்த்தை

# கீழ்படிதலுக்கான அழைப்பு

# The Call for Obedience

*Michael L. King*

இஸ்ரவேல் ஜனங்கள் ஏறத்தாழ 400 வருடங்களாக எகிப்தில் பல்வேறுப்பட்ட பார்வோன்களால் அடிமைப்படுத்தப்பட்டார்கள். அதிலும் குறிப்பாக, கோசேன் பகுதியில்தான் அவர்கள் அடிமைகளாக இருந்தார்கள், அங்கே அவர்கள் அதிகமாக ஒடுக்கப்பட்டபடியால் அவர்களுடைய கூக்குரலை தேவன் கேட்கவே கேட்டு மோசேயின் தலைமையின் கீழ் அவர்களை அடிமைத்தனத்திலிருந்து அதாவது எகிப்திலிருந்து வெளியே கொண்டு வந்தார். இருந்தபோதிலும், அந்த வனாந்திர யாத்திரையில், அவர்களுடைய முறுமுறுப்பும், பிடிவாதமும் தொடர்ந்து, கொண்டே தான் இருந்தது. மோசே தேவனோடு இருக்கவும், பத்து கட்டளைகளை பெற்றுக் கொள்ளவும் சீனாய் பர்வதத்திற்கு ஏறின போது மலையின் கீழ் இஸ்ரவேல் ஜனங்கள் பொற்கன்று குட்டியை செய்து அதை ஆராதிக்கத் தொடங்கி விட்டார்கள். மலையிலிருந்து இறங்கிய மோசேக்கு இது அதிர்ச்சியையும், கோபத்தையும் உண்டாக்கியது.ஜனங்கள் எல்லாரும் தங்கள் காதுகளில் இருந்த பொன்னணிகளைக் கழற்றி ஆரோனிடத்தில் கொண்டுவந்தார்கள். அவர்கள் கையிலிருந்து அவன் அந்தப் பொன்னை வாங்கி, சிற்பக்கருவியினால் கருப்பிடித்து. ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்தான். அப்பொழுது அவர்கள். இஸ்ரவேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்றார்கள். [யாத்திரகாமம் 32 : 34].

இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பாக மோசே அவர்களை எல்லாம் ஒன்று கூட்டி அவர்களுக்கு புத்திமதி சொன்னார். மோசேயால் அந்த கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க முடியாவிட்டாலும் கூட, அவர்கள் அந்த புதிய தேசத்திற்குள் பிரவேசிக்கும் முன்பாக அவர்களுக்கு தேவனுடைய சித்தத்தை நினைப்பூட்ட விரும்பினார். தேவன் தம்முடைய பலத்த கரத்தினால் அவர்களை வழிநடத்தினபடியால் தேவனுடைய நாமத்திற்கு மகிமையைக்கொண்டு வரும் வாழ்க்கையே அவர்கள் வாழ வேண்டும் என்பதுதான் மோசேயின் புத்திமதிகளாய் இருந்தன. உபாகமம் நான்காம் அதிகாரத்தில் மோசே தேவனுடைய கட்டளைகளை இவ்விதமாக குறிப்பிட்டுச் சொல்லுகிறார். “ஆகையால் அவைகளைக் கைக்கொண்டு நடவுங்கள், ஜனங்களின் கண்களுக்குமுன்பாகவும் இதுவே உங்களுக்கு ஞானம் விவேகமாய் இருக்கும், அவர்கள் இந்தக் கட்டளைகளையெல்லாம் கேட்டு இந்தப் பெரிய ஜாதியே ஞானமும்

விவேகமுமுள்ள ஜனங்கள் என்பார்கள் நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்ளுகிறபோதெல்லாம் அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதுபோல தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது? இந்நாளில் நான் உங்களுக்கு விதிக்கிற இந்த நியாயப்பிரமாணம் முழுமைக்கும் ஒத்த இவ்வளவு நீதியுள்ள கட்டளைகளையும் நியாயங்களையும் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதியும் எது? (உபாகமம் 4:6–8).


எகிப்திலிருந்து புறப்பட்ட ஜனங்களில் யோசுவாவும், காலேபும் மாத்திரமே அந்த கானான் தேசத்தில் பிரவேசித்தார்கள். இங்கே மோசே இஸ்ரவேல் ஜனங்களின் இரண்டாம் தலைமுறையினிடத்தில் பேசிக் கொண்டிருக்கிறார். அவர்கள் தேவன் தங்கள் முற்ப்பிதாக்களுக்கு செய்தவைகளை நினைவில் வைத்திருக்கலாம் அல்லது நினைவில் வைக்காமலும் இருந்திருக்கலாம்.

மோசே அந்த இஸ்ரேல் ஜனங்களை ஒன்று கூட்டின போது. தேவனுடைய வார்த்தைகளை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும் என்று அவர்களுக்கு புத்திமதிச் சொன்னார் "உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம், நீயும் உன் குமாரனும் உன் குமாரத்தியும், நான் உனக்கு விதிக்கிற அவருடைய எல்லாக் கற்பனைகளையும், கட்டளைகளையும் கைக்கொள்ளுகிறதினாலே உன் வாழ்நாட்கள் நீடித்திருக்கும்படி நீங்கள் சுதந்தரிக்கப்போகிற தேசத்திலே கைக்கொள்வதற்காக, உங்களுக்குப் போதிக்க வேண்டும் என்று உங்கள் தேவனாகிய கர்த்தர் கற்பித்த கற்பனைகளும் கட்டளைகளும் நியாயங்களும் இவைகளே இஸ்ரவேலே, நீ நன்றாயிருப்பதற்கும். உன் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடி, பாலும் தேனும் ஓடுகிற தேசத்தில் நீ மிகவும் விருத்தியடைவதற்கும், அவைகளுக்குச் செவிகொடுத்து, அவைகளின்படி செய்யச் சாவதானமாயிரு (உபாகமம் 6:1–3). நான்காம் அதிகாரம் இஸ்ரவேல் ஜனங்களிடத்தில் தேவனைப் பற்றிய மரியாதை கலந்த பயத்தை உண்டாக்கும்படி எழுதப்பட்டதாகும். ஆறாம் அதிகாரம் தேவனுடைய சித்தத்தை எப்படி நினைவில் வைத்து அதை செயல்படுத்துவதென்பதைப் பற்றிய தகவல்களை உள்ளடக்கியதாகும். (உபாகமம் 6:4–10) வசனங்கள் வீட்டுக்கான தேவனுடைய கட்டளைகளாகும். அந்தக் கட்டளைகள் வீடுகளில் கடைபிடிக்கப்பட்டால் அந்த வீடுகளில் சந்தோஷமும். சமாதானமும் நிலைத்திருக்கும்.

இங்கு இஸ்ரவேலே கேள் என்று தேவனுடைய கட்டளை ஆரம்பமாகிறது. கேள் என்பதற்கான எபிரேய பதம் "ஷமா" என்பதாகும். இதன் பொருள் கேட்டு புரிந்து கொள் என்பதாகும். அவர்கள் தேவனை நெருக்கமாகவும், தனிப்பட்ட ரீதியாகவும் அறிய வேண்டியதாக இருந்தது. இந்தத் தனிப்பட்ட அறிவும், தேவனுடனான நெருக்கமான

உறவும் வேத வாக்கியங்களின் சத்தியத்தினால் உண்டாக வேண்டியதாய் இருந்தது. அவர்கள் தேவனுடைய கட்டளைகளைத் தங்கள் வீட்டு நிலைகளிலும், அவர்கள் வாசல்களிலும் எழுத வேண்டியதாக இருந்தது. தேவனுடைய வார்த்தைகள் அவருடைய கண்களுக்கு நடுவே ஞாபகக் குறியாய் இருக்க வேண்டியதாய் இருந்தது.

மோசே அந்த இஸ்ரேல் ஜனங்களைப் பார்த்து தேவனுடைய பிரமாணங்களை கையின் மேல் அடையாளமாக கட்டிக் கொள்வாயாக, அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபக குறியாய் இருக்கக்கடவது என்று உருவக நடையில் சொன்னது போல் தான் தெரிகிறது. இஸ்ரவேல் ஜனங்களின் தனிப்பட்ட வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும் தேவனுடைய பிரமாணங்கள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே மோசே அவ்விதமாகச் சொன்னார். ஆனால் இஸ்ரவேலர்கள் மோசேயின் வார்த்தைகளை சொல்அர்த்த ரீதியாக எடுத்துக் கொண்டார்கள். அதனால்தான் அவர்கள் (உபாகமம் 64-9) வசனங்களை உள்ளடக்கிய தோல்ச்சுருளை அவர்களுடைய வீட்டு நிலைகளிலே வைத்தார்கள். மேலும், அந்த யூதர்கள் தங்கள் வீட்டு நிலைகளிலேயே வைக்கப்பட்டிருக்கும் தேவனுடைய பிரமாணங்கள் வீட்டில் நடந்து கொள்ள வேண்டிய விதத்தை குறித்து நினைவுபடுத்தும் என்று நம்பினார்கள். அது மாத்திரமில்லாமல், தங்கள் வீட்டு வாசலில் வைக்கப்பட்டிருக்கும் தேவனுடைய பிரமாணங்கள் அவர்கள் வெளியே செல்லும்போது மற்றவர்களுக்கு முன்பாக எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தங்களுக்கு போதிப்பதாக எண்ணினார்கள். யூதர்கள் அதோடு நின்று விடாமல், அந்த தோல்ச்சுருளை தங்கள் தலைகளிலும், கால்களிலும் அணிந்திருந்தார்கள். அதிலும் குறிப்பாக ஜெப வேளைகளில் அந்த தோல் சுருளை அவர்கள் அணிந்து கொள்ள தவறுவதே இல்லை. தேவனுடைய பிரமாணங்களை உள்ளடக்கிய தோல்ச்சுருள் தங்கள் சிந்தனைகளை கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காக தலையிலும், அவர்கள் சரியான பாதையில் செல்ல வேண்டும் என்பதற்காக தங்கள் கண்களிலும், தாங்கள் எப்போதும் சரியான காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதற்காக தங்கள் கைகளிலும் எப்போதும் அணிந்திருந்தார்கள். இவ்விதமாக அவர்கள் செய்த காரியங்கள் எல்லாம் தேவன் அவர்களோடு இருந்ததை நினைவுபடுத்தின.



இன்றைய நாட்களில் தேவன் நம்மிடமிருந்து எவைகளை எல்லாம் எதிர்பார்க்கிறார் என்பவைகளைக் குறித்து தொடர்ந்து நமக்கு நினைவு படுத்தப்பட வேண்டும். நாம் தேவனுடைய பிரமாணங்களை ஒருபோதும் மறந்து போகாதபடிக்கு நாம் தொடர்ச்சியாக தேவனுடைய வார்த்தைகளால் நிரப்பப்பட வேண்டும். நாம் தேவனுடைய பிரமாணங்களை நம் இருதயங்களில் வைத்துக்கொண்டு இளம் தலைமுறையினருக்கு அவைகளை நினைப்பூட்டவில்லையென்றால் தேவனுடைய பிரமாணங்களை இளைய தலைமுறையினர் ஒருபோதும் அறிந்து கொள்ள மாட்டார்கள். இந்த உலகில் எனக்கு அருமையாக உள்ளவைகள் எல்லாமே, என்னுடையவைகள் அல்ல, மாறாக அவைகள் எல்லாம் இரவலாக உம்மிடமிருந்து இரவலாகப் பெறப்பட்டவைகள் கர்த்தாவே எனக்கு நினைப்பூட்டும் நினைவூட்டும் என்பதை; கர்த்தாவே; நான் மானிடன், மானிடர்கள் மறக்கக் கூடியவர்கள், எனவே எனக்கு நினைப்பூட்டும். என்னும் பழைய பாடல் வரிகள் எவ்வளவு சரியானவைகள்!

✝

---

## அந்த நாள்...

**அது உக்கிரத்தின் நாள்**

**அது இக்கட்டும் இடுக்கமுமான நாள்**

**அது அழிவும் பாழ்க்கடிப்புமான நாள்**

**அது இருளும் அந்தகாரமுமான நாள்**

**அது மப்பும் மந்தாரமுமான நாள்.**

தேவனுடைய வார்த்தை

# வேதாகம விளக்கம்

# Biblical interpretation

*Tom Baxley*

**வே**தாகமத்தை விரிவாக விளக்குவது என்பது ஓர் ஆழமான பாடம், அதைப் பற்றி விளக்கமாக ஒரு சிறு கட்டுரையில் எழுதவோ, அதை அடக்கவோ முடியாது. எனவே, வேதபாட வகுப்புகளை நாம் முழுமையாக பயன்படுத்திக் கொள்ளவும். சில காரியங்களை நம் நினைவில் வைக்கவும் சில விதிகளை நான் நினைவு படுத்த விரும்புகிறேன். முதலாவது வேதாகமத்தின் ஒரு குறிப்பிட்ட புத்தகம் யாருக்கு எழுதப்பட்டது என்பதை கருத்தில் கொள்ளுங்கள். வேதாகமம் நமக்காக எழுதப்பட்டது என்றாலும் கூட அது நேரடியாக நமக்கு எழுதப்படவில்லை. எனவே, எல்லாமே நமக்கு நேரடியாகப் பொருந்தாது. உதாரணமாக, நாம் நோவாவைப் போல பேழையை கட்ட வேண்டிய அவசியமோ, அல்லது மோசேயைப் போல ஆசிரிப்பு கூடாரத்தைக் கட்ட வேண்டிய அவசியமோ நமக்கு இல்லை. அதேப்போல முதல் நூற்றாண்டு சபையை போல பரிசுத்த ஆவியினால் அற்புத அடையாளங்களைச் செய்யும்படி நாம் கட்டளையிடப்படவில்லை.

**இரண்டாவது. ஒரு புத்தகம் எழுதப்பட்ட காலத்தை கருத்தில் கொள்ள வேண்டும்.** பழைய உடன்படிக்கையின்படி சில காரியங்கள் அனுமதிக்கப்பட்டன. ஆனால், புதிய உடன்படிக்கையின்படி அவைகள் அனுமதிக்கப்படவுமில்லை, கட்டளையிடப்படவுமில்லை. உதாரணமாக பழைய ஏற்பாடு ஆசரிக்கும்படி சில பண்டிகைகளை கட்டளையிட்டது. சில உணவுப் பதார்த்தங்களை தவிர்க்க வேண்டும் என்று கட்டளையிட்டது. ஆனால், புதிய ஏற்பாடு பண்டிகைகளைக் கொண்டாட வேண்டுமென்றோ, உணவுப்பதார்த்தங்களை விலக்க வேண்டுமென்றோ எந்தக் கட்டளையையும் கொடுக்கவில்லை. மேலும், புதிய ஏற்பாட்டில் பதிவு செய்யப் பட்டிருக்கிற சம்பவங்கள் எல்லாம் பழைய ஏற்பாட்டில் நடந்தவைகளாகும். எனவேதான் சிலுவையில் தொங்கிய கள்ளனைப்பற்றி ஞானஸ்நானம் பெறாத பலர் விவாதிப்பது நியாயமற்றதும், அர்த்தமற்றதும ாகும். ஏனென்றால், அவன் சிலுவையில் தொங்கிய போது சபை ஸ்தாபிக்கப்படவுமில்லை [அப் 2:47]; ஞானஸ்நானம் பெறும்படி கட்டளை கொடுக்கப்படவும் இல்லை [மாற்கு 16:16].

**மூன்றாவது. வேதாகமத்தின் ஒருங்கமைவைக் கருத்தில் கொள்ளுங்கள்.** வேதாகமம் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்ட மனிதர்களால் எழுதப்பட்டது. [2 பேதுரு 121]. வேறு விதமாகச் சொன்னால் வேத வாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது [2 தீமோத்தேயு 3:16]. இதன் பொருள் வேதாகமம் ஒரு போதும் முரண்படாது என்பதாகும். எனவே, ஒருவர் இரு வசனங்களுக்கிடையே முரண்பாடு இருப்பதைக் கண்டால், அந்த நபர் தான் ஒரு வசனத்திலோ அல்லது இரு வசனத்திலோ ஏதோ ஒன்றை தவற விட்டு விட்டு தவறான முடிவை எடுத்திருக்கிறார் என்றுதான் பொருள்.

வாழ்வதற்கான உபதேசம்

# மரணமும் நித்தியமும்

# Death and eternity

*Royce Frederick*

ஒருவர் மரிக்கும் போது என்ன நடக்கிறது? சிருஷ்டிப்பின் ஆறாம் நாளில் தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான் [ஆதியாகமம் 2:7]. ஒருவருடைய சரீரத்திலிருந்து ஆத்துமா அல்லது ஆவி பிரிந்து போகும்போது அங்கே மரணம் ஏற்படுகிறது. இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்கு முன்னும், அவரை உன் வாலிபப்பிராயத்திலே நினை[பிரசங்கி 12:7] ராகேல் மரிக்கும்போது அவள் ஆத்துமா அவளை விட்டுப்பிரிந்தது [ஆதியாகமம் 35:18] ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது என்று யாக்கோபு மிக எளிமையாக சொல்கிறார் [யாக்கோபு 2:26].

மரணத்திற்குப் பிறகு ஒவ்வொரு ஆத்துமாவும் காத்திருப்பு ஸ்தலமாகிய பாதாளத்திற்குச் செல்கிறது இந்தப் பாதாளம் இரு பாகங்களை கொண்டுள்ளது. [1] இரட்சிக்கப்பட்டவர்களுக்கான ஆறுதல் ஸ்தலம் [2] இழக்கடிக்கப்பட்டவர்களுக்கான பாடுகளின் ஸ்தலம். நீதிமான்களின் ஆத்துமாக்கள் காத்திருப்பு ஸ்தலமாகிய ஆறுதலின் ஸ்தலத்திற்குப் போகிறது. இயேசு மரித்துப்போன பிச்சைக்காரனாகிய லாசருவை பற்றி பேசும்போது இவ்விதமாய்ச் சொன்னார். பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டு போய் விடப்பட்டான், ஐசுவரியவானும் மரித்து அடக்கம்பண்ணப்பட்டான் [லூக்கா 16:22] இந்த லாசரு ஆபிரகாமுடன் நெருங்கிய உறவு கொள்ளும் இடத்திற்குப் போய்விட்டார். லூக்கா 29:39-43] வசனங்களில் இயேசுவோடு சிலுவையில் தொங்கிய கள்வன்களில் ஒருவன் மனந்திரும்பிய பிறகு இயேசு அவனிடம் இவ்விதமாய் சொன்னார் இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனே கூடப்பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார் [லூக்கா 23:43]. மேற்சொல்லப்பட்ட வசனங்கள் நீதிமான்களின் ஆத்துமாக்கள் மரணத்திற்குப் பிறகு இனிமையான காத்திருப்பு ஸ்தலத்திற்கு கடந்து செல்கிறது என்பதைக் காட்டுகின்றன.

அதே நேரத்தில் பாவிகளின் ஆத்துமாக்கள் பாதாளத்தில் பாடுகளின் ஸ்தலத்திற்கு போகின்றன. லாசருவின் சம்பவத்தில் நாம் இதைத்தான் பார்க்கிறோம், பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான். ஐசுவரியவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான். பாதாளத்திலே

அவன் வேதனைப் படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான் [லூக்கா16:23]. பிற்பாடு அந்த ஐசுவரியவான் தான் அந்த அக்கினி ஜுவாலையிலே வேதனை படுகிறதாகச் சொன்னார்.

இவ்வுலகில் உள்ள எல்லோரும் கிறிஸ்துவுக்கு முன்பாக நியாயந் தீர்க்கப்படும்படி மரணத்திலிருந்து உயிரோடு எழுப்பப்படுவார்கள் [யோவான்5:28,29]. மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார். அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு. பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார் என்று [அப்போஸ்தலர் 17:31] ல் நாம் வாசிக்கிறோம். அந்த நியாயத் தீர்ப்பு நாளிலே இவ்வுலகில் உள்ள எல்லோருமே கிறிஸ்துவால் நியாயந்தீர்க்கப்பட அவருக்கு முன்பாக நிற்பார்கள் [வெளி20:11-15]. இவ்வசனத்தையும் கவனியுங்கள் '**ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையம்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்** [2 கொரிந்தியர் 5:10].

இயேசு கிறிஸ்து எல்லோரையும் நியாயந்தீர்க்கும் போது இரட்சிக்கப்பட்டவர்களை பார்த்து இவ்விதமாய்ச் சொல்வார் 'அப்பொழுது, ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து **வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே.** உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள் [மத்தேயு 25:34] அதே நேரத்தில் அவர் துன்மார்க்கரைப் பார்த்து இந்தவிதமாய் சொல்வார் **அப்பொழுது, இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர் சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண் ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்' [மத்தேயு 25:41]**, அந்த வருங்காலத்தைப் பற்றி பேசும்போது யோவான் இவ்விதமாய் எழுதினார் **அப்பொழுது மரணம் பாதாளம் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம். வாழ்வதற்கான உபதேசம்**

**ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான். [வெளி 20:14,15].**

நாம் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து உண்மை உள்ளவர்களாக இருந்தால் மரணத்தைப் பற்றியும் சத்தியத்தைப் பற்றியும் கவலைப்பட வேண்டிய அவசியம் மில்லை. நாம் ஞானஸ்நானம் பெறும் போது தேவனுடைய கிருபையால் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய பாவங்களை நீக்குகிறது நாம அவரோடு நடக்கும்போது இயேசுவின் இரத்தம் நம்மைத் தொடர்ந்து சுத்திகரிக்கிறது. [அப்போஸ்தலருடைய நடபடிகள் 22:16; ரோமர்6:3,4, 1 யோவான் 1:7] இப்படியிருக்க, பிள்ளைகளே, அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில்

அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப்போகாமல் தைரியமுள்ளவர்கள ாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள் (1 யோவான் 2:28).

இரட்சிக்கப்பட்ட எல்லோருக்கும் அந்த நியாயத்தீர்ப்பு நாள் மகிழ்ச்சியின் நாளாய் இருக்கும். எனவேதான் இயேசு கிறிஸ்து இவ்விதமாய்ச் சொன்னார் உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள். என்னிடத்திலும் விசுவாசமாயி ருங்கள் என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு, அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன், ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன்.

நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன் (யோவான் 14:1-3).

✝

# என் ஜெபம்

*நான் பெலனுக்காக ஜெபித்தேன்*
*தேவன் என்னைப் பெலப்படுத்தக் கடினமான*
*பாதைகளில் கடந்து போகும்படிச் செய்தார்.*

*நான் ஞானத்திற்காக ஜெபித்தேன்*
*தேவன் நான் தீர்வுகண்டு ஞானத்தில் தேறும்படி*
*பல பிரச்சனைகளைத் தந்தார்.*

*நான் செழிப்புக்காக ஜெபித்தேன்*
*தேவன் எனக்கு வேலைச் செய்வதற்கு தேவையான*
*மூளையையும், உடல் வலிமையையும் கொடுத்தார்.*

*நான் உதவிக்காக ஜெபித்தேன்*
*தேவன் எனக்கு வாய்ப்புக்களைத் தந்தார்*

**நான் கேட்டது எதுவுமே எனக்கு கிடைக்கவில்லை**
**இருந்தபோதிலும் எனக்குத் தேவையானதெல்லாம் கிடைத்தது.**

வசன ஆராய்ச்சி

# (1 கொரிந்தியர் 15:1-11)

*Jerry Bates*



- 1. எதினால் கொரிந்தியர் இரட்சிக்கப்பட்டார்கள் ? [வசனம் 1–2]
- 2. கொரிந்தியர் இரட்சிக்கப்படுவதற்கு பவுல் எந்த நிபந்தனைகளை விதித்தார் ? [வசனம் 2]
- 3. பவுல் அந்தப் பட்டணத்தாருக்கு சுவிசேஷத்தின் எந்த மூன்று உண்மைகளை பிரசங்கித்ததாகச் சொல்கிறார்? [வசனம் 4–3].
- 4. கேபாவின் மற்றுமொரு பெயர் என்ன ? [வசனம் 5]
- 5. கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிறகு அவரை எத்தனை பேர் கண்டார்கள்? [வசனம் 6]
- 6. பவுல் இந்த நிருபத்தை எழுதின போது உயிர்த்தெழுதலுக்கு பிறகு கிறிஸ்துவை கண்டவர்களில் எத்தனை பேர் உயிரோடு இருந்தார்கள்? [ வசனம் 6]
- 7. கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிறகு அவரைக் கண்ட கடைசி நபர் யார் [வசனம் 8] ?
- 8. அப்போஸ்தலர் எல்லாரிலும் சிறியவன் என்று பவுல் யாரைச் சொல்கிறார் ? [வசனம் 9]
- 9. ஏன் பவுல் தான் அப்போஸ்தலனென்று பேர் பெறுவதற்கு பாத்திர னல்ல என்று சொல்லுகிறார்?
- 10. ஏன் பவுல் தன்னை அப்போஸ்தலன் என்று சொல்லுகிறார் ? [வசனம்10]
- 11. ஏன் பவுல் தேவன் தனக்கு அருளிய கிருபை விருதாவாய் இருக்கவில்லை என்று சொல்லுகிறார்? [வசனம் 10]

♦ 12. எது பவுலோடு கூட பிரயாசப்பட்டது?

1 கொரிந்தியர் 15 ஆம் அதிகாரத்தில் பவுல் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பற்றி விவாதிக்கிறார். அவர் சுவிசேஷத்தை 3 அடிப்படை உண்மைகளாக சுருக்கி இந்த விவாதத்தை ஆரம்பிக்கிறார். அந்த அடிப்படை உண்மைகள் இயேசு மரித்தார் அடக்கம் பண்ணப்பட்டார் மூன்றாம் நாளிலே மறுபடியும் உயிர்த்தெழுந்தார் என்பவைகளாகும். எல்லாமே இந்த மூன்று உண்மைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. ஒருவர் இந்த உண்மைகளை விசுவாசித்து. இவைகளுக்காக தன்னைத் அர்ப்பணித்துக் கொள்ளவில்லை என்றால் அவருடைய இரட்சிப்பு உண்மையானதல்ல இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு ஆதாரமாக பவுல் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு அவரைக் கண்டவர்களை பட்டியலிடுகிறார். இந்தப் பட்டியிலும் கூட முழுமையான விவரங்களை உள்ளடக்கியது அல்ல. ஏனென்றால் சுவிசேஷ புத்தகங்கள் இயேசு உயிர்த்தெழுந்த பிறகு அவரை அநேக ஸ்திரிகள் கண்டதாக குறிப்பிடுகின்றன. ஆனால், பவுல் இந்த அதிகாரத்தில் அந்த ஸ்திரிகளைக் குறிப்பிடவில்லை.

## இயேசு எப்படியெல்லாம் புறக்கணிக்கப்படுகிறார்?

**1. அவருடைய தெய்வீகத் தன்மையில் .....** (லூக்கா. 1:35).

**2. அவருடைய அதிகாரத்தை ஏற்றுக்கொள்வதில் .....** (மத். 28:18).

**3. அவருடைய நாமத்திற்குக் கீழ்ப்படிவதில் .....** (பிலி. 2:9–11).

**4. அவருடைய சபையை அங்கீகரிப்பதில் .....**(மத் 16:18;அப்.20:28).

**5. அவருடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதில் .....**(மாற்கு 16:15,16; ரோமர். 1:16).

**6. அவரை உண்மையாய் ஆராதிப்பதில்** (யோவான் 4:24; அப். 2:42;).

### வாழ்வதற்கான உபதேசம்

# எனக்குப்பிறன் யார்?

# Who is My Neighbor?

*John kar*

நல்ல சமாரியன் உவமையில் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நாம் நம் அயலகத்தாரிடத்தில் எவ்விதமாக அன்பு கூரவேண்டும் என்பதை போதித்திருக்கிறார். நியாய சாஸ்திரி ஒருவன் இயேசு கிறிஸ்துவைப் பார்த்து எனக்குப் பிறன் யார் என்று கேட்டான் (லூக்கா 10:29). இருந்தபோதிலும், இயேசு கிறிஸ்து இங்கே ஒரு நல்ல அயலகத்தாராக இருக்கும்படி அழுத்தம் கொடுக்கிறார். மேலும், இங்கே இயேசு அந்த நியாயசாஸ்திரி, தனக்குத்தானே நான் ஒரு நல்ல அயலாகத்தானாக இருக்கிறேனா என்று கேள்வி கேட்க விரும்பினார்.

கிறிஸ்துவுக்குள்ளிருக்கும் நாம் காயப்பட்டவர்களை கண்டறிய வெகுதூரம் பயணித்து, அவ்விதமாக காயப்பட்டவர்களை கண்டறிந்து அவர்களுக்கு இரக்கம் செய்ய வேண்டும். கிறிஸ்தவர்களாகிய நாம் மேசியாவைப் போல இருதயம் நொறுங்குண்டவர்களுடைய காயங்களை கட்டுகிறவர்களாக இருக்க வேண்டும். நாம் மற்றவர்களுக்காக அக்கறைப்பட என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அவைகளையெல்லாம் செய்ய வேண்டும். கிறிஸ்தவர்களால் தான் நல்ல அயலகத்தாராக இருக்க முடியும்.

இயேசு கிறிஸ்து அந்த நியாய சாஸ்திரியிடம் ஒரு முக்கியமான கேள்வி ஒன்றை கேட்டார் 'இப்படியிருக்க கள்ளர்கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்றுபேரில் எவன் பிறனாயிருந்தான்! உனக்கு எப்படித் தோன்றுகிறது என்றார். அதற்கு அவன் அவனுக்கு இரக்கஞ் செய்தவனே என்றான் அப்பொழுது இயேசு அவனை நோக்கி நீயும் போய் அந்தப்படியே செய் என்றார் (லூக்கா 10:36,37).



மேலும், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிறரிடத்தில் அன்பு கூருவதைப்பற்றி சொன்ன வார்த்தைகளை கவனிப்போம் "இயேசு அவனை நோக்கி உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக இது முதலாம் பிரதான கற்பனை இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே

இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார் (மத்தேயு 22: 37–40)

மற்றவர்களுடைய இனம், தேசம், அல்லது பின்னணி எதுவாக இருந்தாலும் சரி நாம் அவைகளைப் பற்றி அக்கறைப்படாமல் அவர்களும் நம்மைப் போல தேவ சாயலில் உண்டாக்கப்பட்டவர்கள் என்பதை மாத்திரம் நம் மனதில் வைத்து அவர்களை நாம் அயலகத்தாராக நன்றாய் நடத்த வேண்டும். நாம் கிறிஸ்துவுக்குள் இருந்து கொண்டு இதை விட குறைவாக செய்யவே முடியாது.

✝

## நீங்கள் கேட்கும் பிரசங்கங்கள் எப்படி?

இது ஒரு பரிச்சயமான கேள்வி. எந்த வழிமுறைகளை வைத்து நாம் ஒரு நல்ல பிரசங்கத்தைத் தீர்மானிக்கிறோம்? ஒரு பிரசங்கம் கீழ்கண்டவாறு இருந்தால் வெற்றிகரமான பிரசங்கமாயிருக்குமென்று நாம் சொல்ல முடியும்.

1. தேவனுடைய வார்த்தைக்கு உண்மையாக இருந்தால்
2. அன்புடன் பிரசங்கிக்கப்பட்டால்
3. தேவையை சந்திக்கும் விதத்தில் ஆயத்தமாக்கப்பட்டிருந்தால்
4. எல்லோரும் புரிந்து கொள்ளும்படி பேசப்பட்டால்
5. தேவனை மகிமைப்படுத்துவதாக இருந்தால்
6. மக்கள் சிந்திக்கத்தக்கத் தூண்டினால்

பிரசங்கங்கள் மக்களின் மகிழ்ச்சி மற்றும் ஏற்றுக்கொள்ளுதலை அடிப்படையாக வைத்து அளவிடப்படக்கூடாது. மாறாக, அவர்களுடைய பரிசுத்த ஜீவியம், தேவ பக்தியுள்ள செயல்பாடு, உண்மையான கிறிஸ்தவ அர்ப்பணிப்பு போன்றவற்றால் அவர்கள் அளிக்கும் பதிலை அடிப்படையாக வைத்து அளவிடப்பட வேண்டும்.

✝

# குடும்பத்திற்கு என்னவெல்லாம் நடந்தது?

# Whatever Happened to Family?

*J.J.Turner*

நம்மில் சிலர் இந்த புகழ்பெற்ற வாக்கியத்தை நினைவில் வைத்திருக்கிறோம். எந்தக் குடும்பம் சேர்ந்து ஜெபிக்கிறதோ அந்தக் குடும்பம் சேர்ந்து வாழ்கிறது. குடும்பம் தான் தேசத்தின் முதுகெலும்பாக இருக்கிறது. சமுதாயம் என்பது அதில் வாழும் குடும்பங்களின் பிரதிபலிப்பே ஆகும்

குடும்பம் என்னும் வார்த்தையை கேட்கும் போது உங்கள் மனதில் வருவது எது? ஆனால் சோககரமாக, சிலர் குடும்பம் என்னும் வார்த்தையை கேட்கும் போது அது அவர்களுக்குள் வேதனையான நினைவுகளை உண்டாக்குகிறது. சிலருக்கு அது மகிழ்ச்சிகரமான நினைவுகளை உண்டாக்குகிறது. முதல் குடும்பமாகிய ஆதாம் ஏவாள் தொடங்கி சமீபத்திய குடும்பம் வரை இவ்வுலகத்திற்குரிய குடும்பங்கள் பல சவால்களை எதிர்கொண்டு தான் வருகின்றன. சில குடும்பங்கள் பாடுகளின் மத்தியிலும் பலப்படுகின்றன. சில குடும்பங்கள் சீரழிந்துவிடுகின்றன.

சமுதாயத்தைப் பற்றி முன்னாள் இங்கிலாந்து பிரதமர் **Margret Thatcher** கூறும் போது சமுதாயம் என்று தனியாக எதுவுமில்லை, ஆண்களையும் பெண்களையும் உள்ளடக்கியது தான் குடும்பங்கள் என்று கூறினார். எனவே, ஒரு சமுதாயம் குடும்பங்களால் ஆனதென்றால் சமுதாயத்தில் ஒரு பிரச்சனை என்றால் நிச்சயமாகவே குடும்பங்களில் ஏதாவது பிரச்சனை இருக்க வேண்டும். இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

சமீப காலங்களில் பல்வேறுபட்ட குடும்பங்களின் பின்னணி, வாழ்க்கை முறை போன்றவற்றை சித்தரித்துக் காட்டும் தொலைக்காட்சி தொடர்களின் ஆதிக்கம் அதிகரித்து விட்டதை நம்மால் காண முடியும் இந்த தொலைக்காட்சி தொடர்களெல்லாம் நிச்சயமாகவே குடும்பங்களில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

சமூக அறிவியல் பாடங்கள் மட்டும் அரசாங்க ஆய்வு அறிக்கைகள் இந்த 21 ஆம் நூற்றாண்டின் குடும்ப முறிவுகளை அலசி ஆராய்ந்து அறிக்கைகளை வெளியிட்டிருக்கின்றன.

அந்த அறிக்கையில் பல வீடுகள் அவைகளின் தன்மைகளை இழந்து விட்டு, வெறுமனே தங்கும் விடுதிகளாகவும், உணவகங்களாகவும் மாறிவிட்டன என்று தெரிவிக்கப்பட்டிருப்பது மிகவும் வேதனைக்குரிய ஒரு காரியமாகும். அது மட்டுமல்லாமல், இன்றைய நாட்களில் ஒரே

வீட்டில் இருந்து கொண்டு அப்பா, அம்மா, பிள்ளைகள் என்று எல்லோரும் ஒவ்வொரு மூலையில் அமர்ந்து தங்கள் கைபேசிகளில் நேரத்தை செலவழிப்பது இன்னும் அதிக வேதனையை கொடுக்கிறது அமெரிக்க தேசத்தில் ஒரு சராசரி குடும்பம் மாதத்திற்கு ஒரு முறை தான் சேர்ந்து உணவு உட்கொள்கிறார்களாம். இந்த நாட்களில் காளான்களைப் போல பெருகியிருக்கும் துரித உணவகங்கள் குடும்பங்கள் எப்படி உணவு உட்கொள்கின்றன என்பதற்கு ஆதாரங்களாக இருக்கின்றன. சில மனைவிகளும் அம்மாமார்களும் தாங்கள் தங்கள் வீடுகளில் சமைப்பதில்லை என்பதை பெருமையாகச் சொல்லிக் கொள்கிறார்கள்.

முன்பெல்லாம் அமெரிக்க திருமணங்களில் தம்பதிகள் ஒரே பகுதியைச் சேர்ந்தவர்களாகவும். ஒருவரை ஒருவர் அறிந்தவர்களாகவும் தான் இருந்தார்கள். இன்றைய நாட்களில் அந்த கலாச்சாரம் கேலிக்கூத்தாகிவிட்டது. இன்றைய நாட்களில் தம்பதிகள் தங்கள் திருமணத்தை இணையத்தளங்களிலும் உணவகங்களிலும், சுற்றுலா தலங்களிலும், வேலை ஸ்தலங்களிலும் நிச்சயித்துக் கொள்கிறார்கள். இது போன்ற காரணங்களால் தேசத்தில் விவாகரத்து விகிதம் விண்ணை முட்டிக் கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சனையோடு தன் பாலின திருமணங்களும் சேர்ந்து கொள்வதால் சமுதாயத்தில் பிரச்சனை வெடித்து விடுகிறது.

**குடும்பத்திற்குள் என்ன வெல்லாம் நடந்தது?**

அன்பின் உறைவிடமாகவும். பயிற்சி மையமாகவும் பாதுகாப்பின் இடமாகவும், ஆவிக்குரிய செயல்பாடுகளின் ஆதாரமாகவும், மற்றவர்களின் நலனில் அக்கறை கொள்ளும் இடமாகவும் திகழ்ந்த குடும்ப அமைப்பு இன்று கொஞ்சம் கொஞ்சமாக செத்துக் கொண்டிருக்கிறது. பல குடும்பங்களில் அது ஏற்கனவே செத்துவிட்டது. அதற்கான பிரதான காரணம் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினரும் தன் தன் வேலையை பார்த்துக் கொண்டு மற்றவர்கள் மீது அக்கறை கொள்ளாதது தான் என்பது நிச்சயம். முன்பொரு காலத்தில் குடும்பத்திலும், வேலை ஸ்தலத்திலும், பள்ளிக்கூடத்திலும் போதிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்த ப்பட்ட ஒழுக்க நெறிகள் இன்று காணாமல் போய்விட்டன.

முன்பெல்லாம் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் தங்கள் வீட்டின் கொல்லைப்புறத்தின் கம்பி வேலியில் நின்று பேசும் பழக்கம் உடையவர்களாக இருந்தார்கள். இன்றைய நாட்களில் ஜனங்கள் தங்கள் கதவுகளை இழுத்து அடைத்துக் கொண்டு, பாதுகாப்புக்கு காவல் நாய்களை வைத்துக் கொண்டு, ஒரு உப்பு சப்பற்ற வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பல அக்கம் பக்கத்து வசிப்பிடங்கள் எல்லாம் தனியே விடப்பட்ட அந்நியர்களை உள்ளடக்கிய தீவுகளைப் போல மாறிவிட்டன. அயலகத்தார் அடுத்த வீட்டில் என்ன நடக்கிறது என்பதை அறிவதற்காக ஜன்னல்கள் வாயிலாக எட்டிப் பார்ப்பதோடு நின்று

விடுகிறார்கள். இந்த இயந்திரமயமான வாழ்க்கை சுவாரசியமற்ற ஒரு வாழ்க்கையாகவே இருக்கிறது.

**இப்போது குடும்பத்தின் மீது தாக்கங்களை ஏற்படுத்தும் சில காரணிகளை காண்போம்**

1. பொருளாதார நிர்பந்தங்கள் காரணமாக கணவனும் மனைவியும் வேலைக்குச் செல்வதால், ஒருவருடைய வேலையை மற்றவர் செய்ய விருப்பமில்லாமல் கோபத்தையும், கசப்புணர்வையும் ஒருவருக்கொருவர் வெளிப்படுத்துவது இன்றைய குடும்பங்களில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

2. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வேலையில் பரபரப்பாக இருக்கிறபடியால், அது என்னுடைய வேலை அல்ல என்னும் மனப்பான்மையுடன் மற்றவர்களுடைய வேலையை பகிர்ந்து கொள்ள மனமில்லாமல் இருப்பதும் குடும்பத்தில் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

3. குடும்ப ஒழுக்க நெறிகள் மற்றும் சட்ட திட்டங்களைச் சொல்லிக் கொடுப்பதற்கு ஆட்கள் இல்லாதபடியினாலும், அவர்களை ஏற்றுக் கொள்ள ஆட்கள் இல்லாதபடியினாலும் குடும்பங்கள் திசை மாறிச் சென்று கொண்டிருக்கின்றன.

4. குடும்பத்தில் தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடகங்களின் செல்வாக்கு அதிகரித்துவிட்டதால் அது குடும்பத்தில் மிக மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது

5. சபை முந்தைய காலத்தைப்போல் இன்றைய நாட்களில் குடும்பத்தில் செல்வாக்கை செலுத்த முடிவதில்லை ஏனென்றால் இன்று சபைகள் தாங்கள் வாழும் பகுதியில் மிகப்பெரிய கூட்டத்தைச் சேர்ப்பதிலேயே குறியாய் இருக்கிறது. அதேபோல சுவிசேஷம் அன்று போல இன்று பக்தி விருத்தி உண்டாக்கும் அளவுக்கு பிரசிங்கிக்கப் படுவதில்லை.

6. விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களின் மீது அதீத கவனம் செலுத்துவது அல்லது அவைகளை ஆராதிப்பது.

7. குடும்பத்தில் திட்டம் தீட்டப்படும் போதும், சில தீர்மானங்கள் எடுக்கப்படும் போதும் தேவன் அவைகளில் சேர்க்கப்படுவதில்லை.

பல சபைகள் தாங்கள் ஒரு குடும்பம் என்று சொல்லிக்கொண்டு தங்கள் சரீர குடும்பங்களில் குடும்பத் தன்மைகளை வெளிப்படுத்தாமல் இருப்பது வேடிக்கையாயிருக்கிறது. எது முதலில் வருகிறது? ஒரு குடும்பம் எப்படி குடும்பமாக இருப்பது என்பதை வீட்டிலேயே கற்றுக் கொண்டு, பின்பு அதை சபைக்கு எடுத்துச் செல்கிறதா? அல்லது ஒரு குடும்பம் எப்படி குடும்பமாய் இருப்பது என்பதை சபைச் சூழலில் கற்றுக்கொண்டு பின்பு அதை வீட்டுக்கு எடுத்துச் செல்கிறதா? எது முதலில் வருகிறது?

இன்றைய நாட்களில் குடும்ப அமைப்பு முற்றிலுமாக மாறிவிட்டது என்பதற்கு ஏராளமான காரணங்கள் உண்டு என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இருந்தபோதிலும், நாம் எப்போதும் போலவே முதல் குடும்பத்திற்கு திரும்பிச் செல்வோம். முதல் குடும்பத்தின் அங்கத்தினர்களான ஆதாமுக்கும், ஏவாளுக்கும் என்ன நடந்தது? அவர்களுடைய குமாரனான காயின் தன் சகோதரனான ஆபேலை கொன்றுப்போட்டான். அந்த முதல் குடும்பத்தில் பிரச்சனை அதற்கு முன்பாகவே ஆரம்பித்துவிட்டது. ஆதாம் ஏவாளும் சாத்தானின் சத்தத்திற்கு செவிக் கொடுத்து தேவனுக்கு கீழ்ப்படியாமல் போனார்கள். (ஆதியாகமம் 1-3). பாவம் என்பதற்கான கிரேக்க வார்த்தை குறி அல்லது இலக்கு தவறுவது என்று பொருள்படும். குடும்பத்தை குறித்து தேவனுக்கு ஒரு இலக்கு உண்டு. அந்த இலக்கு அவரை மகிமைப்படுத்துவதாகும் (எபேசியர் 3:21).

தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு சில கட்டளைகளைக் கொடுத்தார். அதில் அந்த ஜனங்கள் வீட்டிலும், அன்றாட வாழ்விலும் நடந்து கொள்ள வேண்டிய வழிமுறைகள் கொடுக்கப்பட்டிருந்தன. (உபாகமம் 6:4-9) வசனப் பகுதிகளை கவனியுங்கள் இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும் வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக்குறித்துப் பேசி, அவைகளை உன் கையின்மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்வாயாக, அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் அவைகளை உன் வீட்டு நிலைகளிலும், உன் வாசல்களிலும் எழுதுவாயாக (உபாகமம் 6:4-9).

மேற்ச்சொல்லப்பட்ட பிரதான நடக்கைகளிலிருந்து தான் தேவனை ஆராதிப்பது உட்பட, இஸ்ரவேலர்களின் அன்றாட வாழ்க்கை ஒழுக்க நெறிகளும் வர வேண்டும். இது இன்றைய குடும்பங்களுக்கு வேதாகம அடிப்படையிலான, நடைமுறைப்படுத்தக் கூடிய ஒரு மாதிரியாக உள்ளது.

குடும்பங்களை குற்றம் சாட்டி குடும்பங்களின் வீழ்ச்சிக்கான அறிகுறிகளைப் பற்றி பேசுவது எளிதானது. ஆனால், அந்தப் பிரச்சனைகளுக்கு முடிவு காண வேதாகம அடிப்படையிலான, நேர்மறையான. நடைமுறைப்படுத்தக்கூடிய தீர்வுகளை கொடுக்க மிகப்பெரிய அவசியம் இருக்கிறது. அந்தத் தீர்வுகளுள் சில இதோ குடும்பங்களில் யோசுவா எடுத்த உறுதியான தீர்மானங்களைப் போல் உறுதியான தீர்மானங்களை எடுக்க தகப்பன்மார்கள் அல்லது

குடும்பத்தின் தலைவர்கள் அவசியப்படுகிறார்கள். '**கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள்** என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள். நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம்பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? **நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்** என்றான் [யோசுவா 24:15]. நீங்கள் என்னுடைய குடும்பத்திற்கு பொறுப்பாளிகள் அல்ல, அதைப்போல் நானும் உங்கள் குடும்பத்திற்கு பொறுப்பாளிகள் அல்ல அரசாங்கமும், சபையும் என் குடும்பத்திற்கு பொறுப்பல்ல ஒரு குடும்பத்தை பொறுத்தவரை தகப்பன்மார்கள் தான் உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

அதேபோல் குடும்பத்தைப் பொறுத்தவரை தங்கள் கணவன்மார்களிடத்திலும், பிள்ளைகளிடத்திலும் அன்பு காட்ட தாய்மார்கள் அவசியப்படுகிறார்கள் "நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப்பேசு. முதிர்வயதுள்ள புருஷர்கள் ஜாக்கிரதையுள்ளவர்களும் நல்லொழுக்க முள்ளவர்களும் தெளிந்த புத்தியுள்ளவர்களும், விசுவாசத்திலும் அன்பிலும் பொறுமையிலும் ஆரோக்கியமுள்ளவர்களுமாயிருக்கும்படி புத்திசொல்லு. முதிர்வயதுள்ள ஸ்திரீகளும் அப்படியே பரிசுத்தத்திற்கேற்ற விதமாய் நடக்கிறவர்களும், அவதூறுபண்ணாதவர்களும், மதுபானத்திற்கு அடிமைப்படாதவர் களுமாயிருக்கவும் தேவவசனம் தூஷிக்கப்படாதபடிக்குப் பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும் தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும் வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்யபடி, அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களை ஸ்திரிகளுக்கு புத்தி சொல்லுல [தீத்து 2:1-5] போதிக்கிறவர்களுமாயிருக்கவும் முதிர்வயதுள்ளக் குடும்பத்தைப் பொறுத்தவரை பெற்றோருக்கு கீழ்ப்படிகிற அவர்களை மதிக்கிற பிள்ளைகள் அவசியமாய் இருக்கிறார்கள் எபேசியர்5:1-3].

எல்லாவற்றைப் பார்க்கிலும் குடும்பங்களில் தகப்பன் தான் பிள்ளைகளுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும். அவர்களைப் படிப்பிக்க வேண்டும் **பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக** [எபேசியர் 6.4] உங்கள் குடும்பங்களில் காரியங்கள் எப்படியாக இருக்கிறது? தேவன் விரும்புகிறபடி உங்கள் குடும்பம் போதிக்கப்பட, வழிநடத்தப்பட, உற்சாகப்படுத்தப்பட உங்கள் திட்டம் என்னவாயிருக்கிறது?

## கிறிஸ்தவ இல்லம்

# ஆயத்தமாகு, ஸ்திரப்படு,வளர்

# Ready, set grow!

*Martha Lynn Rushmore*

**நா**ன் இப்போது உங்களிடம் ஒரு சில கேள்விகளை கேட்கவிருக்கிறேன் அந்த கேள்விகளுக்கு உண்டான பதில்களை நீங்களும் நானும் தான் கொடுக்க முடியும். நீங்கள் தேவனுடைய பிள்ளை யாகும்படி ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவை தரித்துக்கொள்வதைப் பற்றி எப்போதாவது நினைத்திருக்கிறீர்களா? அப்படி இல்லை என்றால் ஏன் இல்லை? இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று விட்டீர்களா? (அப் 2:38) நீங்கள் கிறிஸ்துவுக்குள் குழந்தையாயிருக்கிறீர்களா ? நீங்கள் இன்னும் கிறிஸ்துவுக்குள் பாலை உண்ணத்தக்கவர்களாக இருக்கிறீர்களா? அல்லது பலமான ஆகாரத்தை உட்கொள்ள தயாராகி விட்டீர்களா? நீங்கள் கர்த்தருக்காகவும், அவருடைய சபைக்காகவும் வேலை செய்ய விருப்பமுள்ளவர்கள ாயிருக்கிறீர்களா? சபை ஆவிக்குரிய பிரகாரமாகவும் எண்ணிக்கை அடிப்படையிலும் வளர உங்களால் உதவிச் செய்ய முடியுமா? அப்படி என்றால் நீங்கள் ஆயத்தமாகி ஸ்திரப்பட்டு, வளருங்கள்!

ஒருவர் தேவனுடைய பிள்ளையாக மாற அவர் சுவிசேஷத்தைக் கேள்விப்பட வேண்டும். ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்(ரோமர் 10:17). இரண்டாவது, நீங்கள் தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்க வேண்டும் (மாற்கு 16:16)ல் நாம் விசுவாசித்து ஞானஸ்நானம் பெறும்படியாக கட்டளையிடப்பட்டிருக்கிறோம் அப்படியே லூக்கா 13:3,5 ல் நம் பாவங்களிலிருந்து மனந்திரும்பாமல் போனால் அப்படியே கெட்டுப் போவோம் என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. மனந்திரும்புவது என்பதன் பொருள் என்ன ? ஒருவர் மனந்திரும்ப வேண்டுமென்றால் அவர் தன் மனதை மாத்திரம் மாற்றினால் போதாது தன் செயல்களையும் மாற்ற வேண்டும். நாம் சிறந்த கிறிஸ்தவர்களாக இருக்க எப்போதுமே தேவனுடைய பிள்ளைகளோடு ஐக்கியத்தையும் சகவாசத்தையும் வைத்துக் கொள்ள வேண்டும். அது இன்னும் நம்மை உறுதியான கிறிஸ்தவர்களாக மாற்றும். நாம் உறுதியான கிறிஸ்தவர்களாய் வளரவும் கிறிஸ்துவை பற்றி அறியாதவர்களுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்லவும் எல்லையுல்லா வழிகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளை நாம் ஆழமாக சிந்தித்து செயல்படுவோம்.

**நமது முதலாம் போதனை களம் நம்முடைய வீடுதான்.**

நம்முடைய கணவன்மார்களும், பிள்ளைகளும் கிறிஸ்தவர்களாய் இல்லையென்றால் அவர்களுக்கு போதிக்க வேண்டியது நம்முடைய பொறுப்பாக இருக்கிறது. நாம் நம்முடைய மனப்பான்மையாலும் செயல்களாலும் போதிக்கிறோம். பல வேளைகளில் நம்முடைய வாயின் வார்த்தைகளை விட நம்முடைய செயல்பாடுகளும் மனப்பான்மையும் உரத்த சத்தமாய் பேசும், நம் பிள்ளைகள் நாம் வேத வாக்கியங்களை வாசிப்பதையும் தியானிப்பதையும் பார்க்கட்டும்.



ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட அமைதியான நேரத்தை எடுத்து பிள்ளைகளோடு தேவனுடைய வார்த்தைகளை படியுங்கள். அவர்கள் சிறு பிள்ளைகளாயிருக்கும்போது, வேதாகம சம்பவங்களை வாசிக்க அதிக விருப்பம் காட்டுவார்கள். அதேபோல் இரவு நேரத்தில் படுக்கைக்கு செல்வதற்கு முன்பாக பிள்ளைகளோடு சேர்ந்து ஜெபிப்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். சிறு வயதிலேயே வேத காரியங்களில் அவர்கள் பழக்கினால் அவர்களுக்கு வயதான பிறகும் கூட அவைகளை பிடித்துக் கொள்வார்கள். ஒவ்வொரு முறையும் உணவுக்கு முன்பாக அந்த உணவுக்காக தேவனுக்கு நன்றி சொல்ல பிள்ளைகளைப் பழக்க வேண்டும். ஏனென்றால், இந்த உலகில் எத்தனையோபேர் உண்ண உணவில்லாமல் இருக்கிறார்களே.

பவுல் எபிரேய கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது பலமான ஆகாரத்தை உட்கொண்டு மற்றவர்களுக்கு போதகர்களாயிருக்க வேண்டிய உங்களுக்கு தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்க வேண்டியதாய் இருக்கிறது என்று சாடுகிறார். "காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்கவேண்டிய உங்களுக்கு தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது. நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள்.

பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்" (எபிரேயர் 5:12-14) அதைப்போல் பவுல் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களிடம் பேசும்போது ( 1 கொரிந்தியர் 3:1,2 வசனங்களில் இவ்விதமாய் சொல்லுகிறார். மேலும், சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல், மாம்சத்துக்குரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேசவேண்டியதாயிற்று.

நீங்கள் பெலனில்லாதவர்களானதால், உங்களுக்குப் போஜனங்கொடாமல், பாலைக் குடிக்கக்கொடுத்தேன். இன்னமும் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருக்கிறபடியால், இப்பொழுதும் உங்களுக்குப் பெலனில்லை. (1 கொரிந்தியர் 3:1,2)

மேற்சொல்லப்பட்ட வேத வாக்கியங்களை வைத்துப் பார்த்தால் நாம் எபிரேய கிறிஸ்தவர்களைப் போலவும் இருக்கக்கூடாது,கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களைப் போலவும் இருக்கக் கூடாது. தேவன் தம்முடைய வேத வாக்கியங்களில் கிறிஸ்தவர்களாக எப்படி இருக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறாரோ அப்படியே நாம் இருக்க வேண்டும்.

ஆவிக்குரிய பிரகாரமாக முதிர்ச்சியடைய கிறிஸ்தவ பெண்களுக்கும் பொறுப்பு உண்டு என்பதை நாம் கவனிக்க வேண்டும். கிறிஸ்தவர்களாகிய நாம் எப்படியெல்லாம் தேவனுடைய பார்வையில் இருக்கிறோம் என்பதை (1 பேதுரு 2:9,10 ) வசனங்கள் விவரிக்கின்றன? நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை ஆறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான அசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். 1 பேதுரு 2:9.

10 முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை. இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள் முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள். (1 பேதுரு 29,10), எல்லா கிறிஸ்தவர்களுக்குமான வேதாகம போதனைகளைத் தாண்டி கிறிஸ்துவுக்குள் இருக்கும் சகோதரிகளுக்கென்று பிரத்தியேகமாக வேத வாக்கியங்கள் சில காரியங்களை அறிவிக்கின்றன. அந்தப்படி மனைவிகளே உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள். அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால் பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள். மயிரைப் பின்னி பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிரு க்கக்கடவது. அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது.

இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரிகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள். அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று

சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள் நீங்கள் நன்மைசெய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளா யிருப்பீர்கள் (1பேதுரு 3:1–6).

இன்னும் தீத்து மற்றும் தீமோத்தேயு நிருபங்களில் மும்பொருள் மற்றும் மூப்பர்களுக் கான தகுதி அம்சங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பெண்களே, தங்கள் கணவன்மார்களை மூப்பர் மற்றும் உதவிக்காரர் ஆகிய பொறுப்புகளை கர்த்தருக்காக வகிக்க முடியாமல் அவர்களை தகுதி இழக்கச்செய்ய முடியும் அந்த தகுதி அம்சங்கள் (1 தீமோத்தேயு 3:1 – 7) மற்றும் (தீத்து 1:4 – 9) வசனங்களில் தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளன கண்காணிப்பை விரும்புகிறவன் நல்லவேலையை விரும்புகிறான். இது உண்மையான வார்த்தை.

ஆகையால், கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கியமுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதகசமர்த்தனுமாய் இருக்கவேண்டும்.

அவன் மதுபானப்பிரியனும், அடிக்கிறவனும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல் பொறுமையுள்ளவனும், சண்டைபண்ணாதவனும், பணஆசையில்லாதவனுமாயிருந்து, தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப் பண்ணுகிறவனுமா யிருக்க வேண்டும்.

ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான் அவன் இறுமாப்படைந்து. பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு, நூதன சீஷனாயிருக்கக் கூடாது. அவன் நிந்தனையிலும், பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயுமிருக்கவேண்டும். (1தீமோத்தேயு 3:1–7).

குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியையுடைய புருஷனும் துன்மார்க்கரென்றும் அடங்காதவர்களென்றும் பேரெடுக்காத விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவனுமாகிய ஒருவனிருந்தால் அவனையே ஏற்படுத்தலாம். ஏனெனில், கண்காணியானவன் தேவனுடைய உக்கிராணக்காரனுக் கேற்றவிதமாய், குற்றஞ்சாட்டப்படா தவனும், தன் இஷ்டப்படி செய்யாதவனும், முற்கோபமில்லாதவனும், மதுபானபிரியமில்லாதவனும், அடியாதவனும், இழிவான ஆதாயத்தை இச்சியாதவனும்,. அந்நியரை உபசரிக்கிறவனும் நல்லோர்மேல் பிரியமுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், நீதிமானும், பரிசுத்தவானும், இச்சையடக் கமுள்ளவனும் ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்திசொல்லவும், எதிர்பேசுகிறவர்களை கண்டனம் பண்ணவும் வல்லவனாயிருக்கும்படி, தான் போதிக்கப்பட்டதற்கேற்ற

உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக்கொள்ளுகிறவனு மாயிருக்கவேண்டும் [தீத்து 1:6–9].

மேற்சொல்லப்பட்ட வசனம் பகுதிகள் மூப்பர் மற்றும் உதவிக்கார ருடைய தகுதி அம்சங்களை மிகத் தெளிவாக விவரிக்கின்றன. வருங்காலத்தில் மூப்பராக பொறுப்பேற்க வாய்ப்புள்ளவர்கள் கூட நிந்தனையிலும், பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயுமிருக்கவேண்டும் [1 தீமோத்தேயு 3:7]. உலகத்தில் உள்ளவர்கள் இந்த நபரை நல்லவராகவும் நேர்மையானவராகவும் அக்கறையானவராகவும் காண வேண்டும் இவர் ஒரு மிகச் சிறந்த முன்னுதாரணத்தைக் காட்ட வேண்டும். வாலிபர்களும் கூட வருங்காலத்தில் முப்பராக விரும்பினால் மேற்சொல்லப்பட்ட தகுதியுள்ளவர்களாக தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் ஆம் வாலிப பெண்களே அதேபோல் நீங்களும் கணவன்மார்களை தகுதி நீக்கம் செய்ய முடியும்.

வாலிபப் பெண்களே, ஏதோ ஒரு நாள் ஒரு மூப்பர் ஒரு உதவிக்காரர் அல்லது ஒரு பிரசங்கி யாருக்கு மனைவி ஆவேன் என்று ஒரு இலக்கை நிர்ணயுங்கள். இந்த இலக்கு எல்லா வாலிபப்பெண்களுக்கும் பொருந்தா விட்டாலும் கூட அது ஒரு முயற்சி செய்யப்பட வேண்டிய இலக்கு என்பதில் எந்த சந்தேகமுமில்லை. ஒரு முதிர்வயதுள்ள ஸ்திரீ என்னும் நிலையில் வாலிப பெண்கள் ஆகிய நீங்கள் உயர்வான இலக்கை உடையவர்களாக இருக்க வேண்டும் என்பது என்னுடைய விருப்பமாயிருக்கிறது. ஒரு உறுதியான கிறிஸ்தவ வாலிபனை நீங்கள் விவாகம் செய்யும்படியாக உங்களை நான் உற்சாகப்படுத்துகிறேன். நீங்கள் இருவரும் உங்களால் முடிந்த வரை மிகச்சிறந்த கிறிஸ்தவர்களாக இருக்க பாடுபடும்போது பரலோகம் போவதற்கு நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்வீர்கள்.

நம் வயது நாம் திருமணமானவர்களா அல்லது விதவைகளா என்பதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் கர்த்தருடைய சேவையிலே நாளுக்கு நாள் வளர வேண்டியது அவசியமா யிருக்கிறது. நம்மால் முடிந்தவரை மிகச் சிறந்த கிறிஸ்தவ பெண்மணியாக மாற நம்மால் முடிந்த வரை விரும்ப வேண்டும். நாம் எல்லோருமே [கலா 5:22,23 ல்] காணப்படுகிற ஆவியின் கனியை கொடுக்கிறவர்களாகவும் அதில் வளர்கிறவர்களாகவும் இருக்க வேண்டும் ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம். நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை [கலாத்தியர் 5:22,23], அதைப்போல்[ 2 பேதுரு 1:5–8] வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிற கிறிஸ்தவ பண்புகளையும் நாம் உடையவர்களாக இருக்க வேண்டும் இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும்,

இச்சையடக்கத்தோடே பொறுமையையும். பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்.

இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால் உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது'(2 பேதுரு 1:5–8). மேற்சொல்லப்பட்ட இரண்டு வசனப் பகுதிகளிலும் சில பண்புகள் இரண்டு வசனப் பகுதிகளிலும் மேற்கோள் காட்டப்பட்டிருப்பதை நம்மால் கவனிக்க முடியும்.தேவன் மிக முக்கியமானவைகள் என்பதால்தான் அவைகளை ஆவியானவர் இரண்டுமுறை பதிவு செய்யப்படும்படி அனுமதித்திருக்கிறார்.

பெண்களே, நாம் இணைந்து வளர்ந்து மற்றவர்கள் காணத்தக்க மிகச்சிறந்த உதாரணத்தை ஏற்படுத்துவோம். நம்முடைய வளர்ச்சி மற்றும் நன்மைக்காக தேவனுக்கே மகிமை உண்டாவதாக !

## உங்கள் லட்சியம் என்ன?

அருமையானவர்களே! வாழ்வில் உங்கள் இலட்சியம் என்ன? ஒரு உத்தியோகம், ஒரு வாகனம், ஒரு குடும்பம், பணம் பட்டம், உயர்ந்த சம்பளம் அல்லது வேறு எது? இவ்வுலகுக்கடுத்த பொருட்களே பலருடைய வாழ்வில் குறியாக இருக்கின்றன. ஆனால், அவைகள் அவர்களை இரட்சிக்க மாட்டாது? மேலும், திருப்தி, மகிழ்ச்சி, நம்பிக்கை எதையும் அவர்களுக்குத் தராது. நீ வாழ்ந்த முறைக்குக் கணக்குக் காட்ட, தேவன் முன்பு நீ நிற்கும்போது, நீ அநுபவித்த மேற்கண்ட உலகக் காரியங்களுக்கு எவ்வித அர்த்தமும் இல்லாமற் போகும். தேவனுக்காக நீ என்ன செய்தாய் என்பதை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

ஆகவே, உங்கள் இலட்சியம் உயர்ந்ததாக இருக்கட்டும்; உங்கள் இலக்கு எல்லாவற்றிலேயும் மேலானதை நாடுவதில் இருக்கட்டும்; நல்லவற்றை நாடி, தேவனை சந்திக்க ஆயத்தப்படுவோம் ( கொலோ. 3 : 1, 2 ).

# பரிசுத்த பிள்ளைகள்

# Holy children

*T pierce Brown*

1 கொரிந்தியர் 7:14 ல் ஒரு சுவாரஸ்யமான காரியம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்கு சரியான விளக்கம் தேவையாயிருக்கிறது என்னத்தினாலெனில், அவிசுவாசியான புருஷன் தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறான். அவிசுவாசியான மனைவியும் தன் புருஷனால் பரிசுத்தமாக்கப்படுகிறாள்: இல்லாவிட்டால் உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்குமே: இப்பொழுதோ அவைகள் சுத்தமாயிருக்கின்றன. (1 கொரிந்தியர் 7:14) இங்கே நாம் முக்கியமாக அறிந்து கொள்ள வேண்டிய வார்த்தை பரிசுத்தமாக்கப்படுதல் என்பதுதான் இதன் பொருள் தேவனுடைய காரியத்திற்காக பிரித்தெடுக்கப்படுதல் என்பதாகும். இது பாவமற்ற ஒன்று என்று பொருள் படாது ஆசரிப்பு கூடாரத்தில் பணி முட்டுக்கள் எல்லாம் தேவனுடைய பயன்பாட்டுக்காக பரிசுத்தமாக்கப்பட்டன அல்லது பிரித்தெடுக்கப்பட்டன. கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்கள் தேவனுடைய பயன்பாட்டுக்காக பிரித்தெடுக்கப்பட்டவர்கள். ஆனால் அவர்கள் பல்வேறுப்பட்ட பாவங்களைச் செய்தார்கள்.



சரி, இப்போது அவிசுவாசியான புருஷன் தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறான் என்பதன் பொருள் என்ன? இது உண்மையில் விசுவாசியான புருஷன் தன் மனைவியில் பரிசுத்தமாக்கப்படுகிறான் என்றுதான் மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும் ஏனென்றால், இங்கே திருமண உறவு தான் பிரதானமான காரியமாக உள்ளது. மேலும் பரிசுத்தமாக்கப்படுகிறான் என்பது ஒரு நிகழ்கால வினை முற்றாகும், இது கடந்த கால செயல்பாட்டினால் உண்டான நிகழ்கால நிலையாகும். இங்கே கடந்த கால செயல்பாடு என்பது இந்த கணவனும் மனைவியும் திருமணம் செய்த போது பரிசுத்தமாக்கப்பட்டதைத்தான் இது குறிக்கிறது. அந்த செயல்பாடு இன்னும் அமுலில் தான் இருக்கிறது. இங்கே பவுல் எளிய முறையில் சொல்லும் காரியம் என்னவென்றால், அவிசுவாசியானபுருஷனை உடைய ஒரு மனைவி தன் கணவன் அவிசுவாசியாக இருக்கிறபடியால் கணவனை பிரிய வேண்டிய அவசியம் இல்லை. அப்படிச் செய்தால் அது அந்தத் திருமண உறவை தவறானதாகவும், பரிசுத்தமற்றதாகவும் மாற்றிவிடும். கணவன்

அவிசுவாசியாக இருந்தாலும் கூட அந்த திருமண உறவு முறியாமல் அதன் தூய நிலையில் இருக்கிறபடியால் இந்த விசுவாசி பரிசுத்தமாக்கப்பட்ட உறவில் பிரித்தெடுக்கப்படுகிறார். இதற்கும் அந்த நபர் பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுவதற்கும் எந்த சம்மந்தமும் இல்லை.

பவுல் தொடர்ந்து சொல்லும் போது, இது உண்மையாக இல்லாத பட்சத்தில் கணவனும் மனைவியும் பரிசுத்தமில்லாத உறவில் அவர்கள் சேர்ந்து வாழ்ந்தால் அவர்கள் பெற்றெடுக்கும் பிள்ளைகளும் அசுத்தமாகி விடும் என்று சொல்லுகிறார். வேறு விதமாகச் சொன்னால், அவர்களுக்கிடையே உண்மையான கணவன் மனைவி உறவு இல்லை என்றால் அவருடைய பிள்ளைகள் தவறான வழியில் பிறந்தவர்கள் அசுத்தமானவர்கள் என்று பொருள்படுமே. ஆனால், அதே நேரத்தில் அந்த குழந்தை பாவி அல்ல என்பதையும் பவுல் தெளிவுப்படுத்திவிடுகிறார். பழைய ஏற்பாட்டின் நாட்களில் லேவியராகமம் 11:24ன் படி "அவைகளாலே தீட்டுப்படுவீர்கள், அவைகளின் உடலைத் தொடுகிறவன் எவனும் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்' (லேவியராகமம் 11:24) என்று நாம் பார்க்கிறோம் பிள்ளை பெறும் ஸ்திரீயும் கூட ஏழு நாட்கள் தீட்டாயிருப்பாள். (லேவியராகமம் 12:2).

மேற்சொல்லப்பட்ட காரியங்களை எல்லாம் வைத்து நாம் பார்த்தால், இங்கு பவுல் சுருக்கமாகச் சொல்லுகிற கருத்து என்னவென்றால், திருமண உறவில் கணவனோ அல்லது மனைவியோ அவிசுவாசியாயிருந்தால் கூட தேவன் அந்த திருமண உறவை அங்கீகரிக்கிறார். அப்படி இல்லை என்று சொன்னால் அந்த திருமண உறவின் மூலமாக பிறக்கும் குழந்தையையும் தேவன் அங்கீகரிக்க மாட்டாரே. எனவே, திருமண உறவு பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறபடியால் அந்த உறவின் மூலமாகப் பிறந்த குழந்தையும் பரிசுத்தமாய் இருக்கிறது.

அப்பொழுது, சிறு பிள்ளைகளின் மேல் அவர் கைகளை வைத்து ஜெபம்பண்ணும்படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள், கொண்டுவந்தவர்களைச் சீஷர்கள் அதட்டினார்கள். இயேசுவோ சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள், அவர்களைத் தடைபண்ணாதிருங்கள், பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது என்று சொல்லி' (மத்தேயு 19:13,14).

**எப்படியாயினும், கிறிஸ்தவர்கள் தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளும்போது தேவனுடைய பிரசன்னத்தை உணரவேண்டும்.**


## சத்திய வழி

- பேச்சாளர் : சகோ. P.R. சுவாமி (ஊழியர்)
- நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

<u>தொடர்புக்கு</u> : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.
போன் : 080-25463507, செல் : 098440 70763

---

## கிறிஸ்துவின் வசனம்



- பேச்சாளர் : சகோ. B. அர்ஜுனன்
- நம்பிக்கை TV : திங்கள் & சனி மாலை 7:30 – 7:45 மணி
- மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்


<u>ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம்</u> ;

கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்லகுண்டு – 624 206.

திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

---

## கிருபையுள்ள வார்த்தை




- பேச்சாளர் : சகோ. P.C. பிலேமோன் ராஜா
- தமிழன்/நம்பிக்கை : ஞாயிறு காலை 6:45 & வெள்ளி காலை 6:15 மணி
- பைபிள் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்
- பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)
- தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை
- **English Quaterly Magazine** : THE VOICE OF TRUTH INTERNATIONAL
- **J.C. School of Evangelism** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பள்ளி

<u>தொடர்புக்கு</u> : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.
செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## திருமறை தியானம்

**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**



| | | | | |
|---|---|---|---|---|
| நம்பிக்கை | TV | செவ்வாய் | காலை | 6.30 மணி |
| நம்பிக்கை | TV | வெள்ளி | காலை | 7:30 மணி |

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

**வேதாகம** அஞ்சல்வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு **7** பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

தொடர்புக்கு

இயக்குநர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

**பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன கைப்பிரதிகள்** (Tracts) **வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்**

E.Z.S. **ராஜநாயகம்** : 98427 30382
P.R. **சுவாமி** : 098440 70763
P.C. **பிலேமோன் ராஜா**: 9244204420
B. **அர்ஜுனன்** : 994435 58041

## ‘ சத்தியத்தின் குரல் ‘ சந்தா விண்ணப்பம்

❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 ( **4** இதழ்கள் ) (அ) ரூ. 200 ( **8** இதழ்கள் ) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு என்னுடைய .............................................. முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ..................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

❑ “சத்தியத்தின் குரல்” நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி

**E.Z.S. ராஜநாயகம்**

“சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழ்

**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.**

**Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385**

**E-mail : rajarichal@yahoo.co.in**

பெயர் : ______________________________

தெரு / ரோடு : ______________________________

நகரம் : ____________________ பின் கோடு : ____________

மாநிலம் : ______________________________

# 5 நிமிட வேத பாடம்

## தேவனுடைய சிங்காசனம் - Paula Bates

*1.* நான் ............... என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ................அவனும் என்னுடைய ..................என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன். (வெளி 3:21).

*2.* பின்பு, நான் பெரிய ................... சிங்காசனத்தையும் அதின்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன், அவருடைய சமுகத்திலிருந்து பூமியும் வானமும் ............................... அவைகளுக்கு இடங்காணப்படவில்லை. (வெளி 20:11).

*3.* ................. என்றென்றைக்கும் இருப்பார், தம்முடைய சிங்காசனத்தை ...................... ஆயத்தம் பண்ணினார். (சங்கீதம் 9:7).

*4.* மழைபெய்யும் நாளில் மேகத்தில் வானவில் எப்படிக் காணப்படுகிறதோ, அப்படியே சுற்றிலுமுள்ள அந்த .................................. காணப்பட்டது, இதுவே கர்த்தருடைய .............................. சாயலுக்குரிய தரிசனமாயிருந்தது, அதை நான் கண்டபோது முகங்குப்புற விழுந்தேன், அப்பொழுது பேசுகிற ஒருவருடைய சத்தத்தைக் கேட்டேன் (எசேக்கியேல் 1:28)

*5.* 19 அப்பொழுது அவன் சொன்னது: கர்த்தருடைய வார்த்தையைக் கேளும், கர்த்தர் தம்முடைய ....................ல் வீற்றிருக்கிறதையும், பரமசேனையெல்லாம் அவரிடம் அவர் வலதுபக்கத்திலும் அவர் இடதுபக்கத்திலும் ................ கண்டேன். (1 இராஜாக்கள் 22:19).

*6.* வானத்தின்பேரில் ................ தேவனுடைய ................அதில் வீற்றிருக்கிறவர்பேரிலும் சத்தியம்பண்ணுகிறான் (மத்தேயு 23:22).

For Further Information, Please Contact :

# சத்தியத்தின் குரல்



## இந்நூலை நீங்கள் இவ்விதங்களில் பயன்படுத்தலாம்

* காலை, இரவு குடும்ப ஜெப நேர தியானத்திற்காக
* சபை கூட்டங்களில் வேத ஆராய்ச்சிக்காக
* புதிய ஆத்துமாக்களோடு சத்தியத்தைப் படிப்பதற்காக
* மாத இதழ்களில் கட்டுரைகள் வெளியிடுவதற்காக
* பிறருக்குக் கொடுக்கத்தக்கவர்களுக்குக் கொடுப்பதற்காக
* பக்தியில் வளர்ந்து சத்தியத்தில் ஊன்றக் கட்டப்படுவதற்காக
* கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்றவர்களுக்குக் கொடுப்பதற்காக
* சிறைச்சாலை ஊழியங்களில் பயன்படுத்துவதற்காக
* பள்ளி, கல்லூரி விடுதிகளில் வைப்பதற்காக
* மருத்துவமனை ஊழியங்களுக்கு கொண்டு செல்வதற்காக
* பிறரோடு சேர்ந்து வேதாகமத்தின் காரியங்களைக் கற்றுக்கொள்வதற்காக
* தொலைதூரப் பயணங்களில் படிப்பதற்காக

**பயன்படுத்தப்படாமல் வெறுமனே**
**ஒரு மூலையில் கிடக்க அனுமதிக்காதீர்கள்**

**வீணாகப் போடப்படும் எதுவும் எதையும் எப்போதும் சாதிக்காது!!**

எங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பாருங்கள்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
செவ்வாய் காலை 6.30 - 7.00 மணி

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி

எங்கள் மாத இதழ்களைப் படியுங்கள்

‘ திருமறை ஆசான் ’
‘ கிருபையுள்ள வார்த்தை ’
‘ வேர்டு ஆப் கிரைஸ்ட் ’

மேலும் விபரங்களுக்கு : E.Z.S. ராஜநாயகம், தபால் பெட்டி 27, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
போன் : 04257 230030, செல் : 98427 30382, 99655 30385